# பொருளியல் நோக்கு

ஜூன்/ஜூலை 1996


## சமூக மாற்றத்தில் குடும்ப அலகின் பங்கு





மக்கள் வங்கி வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உருக்குலைந்த குடும்பங்கள் முக்கிய குறிகாட்டிகள்





* வியட்னாம் அரசாங்க தரவுகள்: உதவி முகவரகங்களின் மதிப்பீடு 40.000

ஆதாரம் : யுனெஸ்கோ, யுனிசெப், சமூக சேவைகள் திணைக்களம், தொகைமதிப்பு புள்ளிவிவர திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், பொலிஸ் திணைக்களம்

உயர் விவாகரத்து விகிதங்களைக் கொண்ட 20 நாடுகள்

| நாடு | விகிதம் '90 |
|---|---|
| 1 மாலைதீவு | 7.93 |
| 2 ஐ-அமெரிக்கா | 4.70 |
| 3 சோவியத் குடியரசு | 3.94 |
| 4 போர்ட்டோ ரிகோ | 3.80 |
| 5 உக்ரேன் | 3.71 |
| 6 எஸ்தோனியா | 3.68 |
| 7 கியூபா | 3.51 |
| 8 லிதுவேனியா | 3.33 |
| 9 கோர்னெசி | 3.29 |
| 10 கனடா | 3.08 |
| 11 கிழக்கு ஜேர்மனி | 3.01 |
| 12 டென்மார்க் | 2.95 |
| 13 பின்லாந்து | 2.89 |
| 14 பிரிட்டன் | 2.88 |
| 15 பேர்மடா | 2.86 |
| 16 ஐல் ஒப் மான் | 2.80 |
| 17 நியூசிலாந்து | 2.70 |
| 18 செக்கோஸ்லாவக்கியா | 2.61 |
| 19 அவுஸ்திரேலியா | 2.49 |
| 20 ஹங்கேரி | 2.40 |

விவாகரத்து விகிதங்கள்
(1000 குடும்ப தொகைக்கு)

100% க்கு மேல் அதிகரிப்பு

| நாடு | 1979 | 1990 | % மாற்றம் |
|---|---|---|---|
| 1 வெனிசுலா | 0.33 | 1.16 | 252 |
| 2 பார்படோஸ் | 0.60 | 1.63 | 172 |
| 3 மொங்கோலியா | 0.18 | 0.48 | 167 |
| 4 சிங்கப்பூர் | 0.61 | 1.60 | 162 |
| 5 மொரிஷியஸ் | 0.29 | 0.69 | 138 |
| 6 இத்தாலி | 0.21 | 0.48 | 129 |
| 7 சீனா | 0.70 | 1.40 | 100 |

வீழ்ச்சி இடம் பெற்றுள்ள நாடுகள்

| நாடு | 1979 | 1990 | % மாற்றம் |
|---|---|---|---|
| 1 கட்டார் | 1.47 | 0.74 | -50 |
| 2 மார்டினிக் | 1.28 | 0.73 | -43 |
| 3 பேர்மடா | 4.94 | 2.86 | -42 |
| 4 பஹ்ரைன் | 1.63 | 1.17 | -28 |
| 5 புரூணை | 1.63 | 1.17 | -28 |

இலங்கையின் விவாகரத்து விகிதம் 1988 இல் 1000 திருமணங்களுக்கு 14.3 ஆக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 22 இதழ்கள் 3/4 ஜூன்/ஜூலை 1996

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 2,
இலங்கை.

## உள்ளே

### சிறப்புக் கட்டுரை

பீ. குருகே 27 இலங்கையும் பொருட்கள், சேவைகள் வரியும்

### விசேஷ அறிக்கை

### குடும்பம் : சமூக மாற்றத்துக்கான அலகு

டப். ஏ.விஜேவர்தன 2 குடும்பத்தின் மாறிவரும் பொருளாதாரப் பங்கு

விமலா டிசில்வா 7 இன்றைய போட்டிக் கல்வி முறை குடும்ப உறவுகளில் எடுத்துவரும் தாக்கம்

ஆன் அபேசேகர 11 இன்றைய இலங்கையில் திருமண பந்தம்

நந்தனி டி சில்வா 13 குடும்ப நெருக்கடி

பீ.ஏ.டெனிசன் பெரேரா 16 இன்றைய இலங்கைச் சமூகத்தில்

சிறி கமகே 18 குடும்ப அமைப்பின்மீது மேலைத் கட்டமைப்பு தேச செல்வாக்கு

காமினி பிரேமதிலக 21 குடும்ப உளவியல்

ருவன் ஏக்கநாயக்க 23 நேர்முகம்

**சந்தாதாரர் கவனத்துக்கு**

அச்சுப்பதிவில் நிகழ்ந்து வரும் தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு இம்முறை இரு இதழ்களை (ஜூன்/ஜூலை 1996) இணைத்து வெளியிடுகிறோம். எனினும், சந்தா நோக்கங்களுக்காக இது தனியொரு இதழாக கருதப்படும்.

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவு-களையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒரு சமூகப்பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதி-பலிப்பனவுமல்ல. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்-களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

அட்டைப் படம் : ஜே.கே.ஜீ. புஞ்சிஹேவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தின் மாறிவரும் பொருளாதார பங்கு : பின்னணி காரணிகள் குறித்த ஒரு பகுப்பாய்வு



**டப். ஏ. விஜேவர்தன**

(கிரர்மிய கொடுகடன் பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி)

குறுகிய காலப் பிரிவில் பொருளாதார முறைமைகள் அதிகரித்த அளவில் வர்த்தகமயமாகியமை பல வளர்முக நாடுகளின் சமீபத்திய பொருளாதார மாற்றங்களின் மிக முக்கியமான சிறப்பம்சமாக விளங்கு கின்றது. சந்தைகளைத் திறந்து விடும் வர்த்தகமயமாக்கல் வழிமுறை, பொருளாதார உறவுமுறைகளில் அவதானிக்கப்பட்ட பாரம்பரிய ஒத்துழைப்பின் இடத்தில் போட்டியிடல் முறையை எடுத்து வருவதில் வெற்றி கண்டுள்ளது. இது பொருளாதார முன்னேற்றக் கண்ணோட்டத்தில் பயனுள்ள அபிவிருத்தியாக கருதப்பட்ட போதிலும், அது நடைபெற்ற துரித வேகம், பொருளாதார மாற்றத்துடன் இணைந்த விதத்தில் சமூகத் தாபனங்க்ள் பரிணாம வளர்ச்சி யடைவதைத் தடுத்தது. இதன் விளைவாக இந்நாடுகளில் வர்த்தகமய மாக்கல் வழிமுறை ஒரு முழுச் சுற்றோட்டத்தை முடித்துக் கொண்ட அதே சமயம், சமூகத் தாபனங்கள் புதிய பொருளாதார முறைமைகளுடன் தாமாகவே நேரடி மோதல்களை ஏற்படுத்திக் கொள்வதை காணக் கூடியதாக இருந்தது. அத்தகைய மோதல் அபிவிருத்தி வழிமுறையை மந்தப்படுத்தியது மட்டுமன்றி, சமூகம் பொருளாதார முன்னேற்றத்தின் பூரண நலன்களைப் பெற்றுக் கொள்வதையும் தடுத்தது. ஒரு சமூகத் தாபனம் என்ற வகையில் இதனால் பாதிக்கப்பட்ட பிரதான அங்கம் குடும்பமாகும்.

மற்றொரு வகையில், வளர்ச்சி யுடைந்த நாடுகள் வர்த்தகமயமாக்கல் வழிமுறையை முழுமைப்படுத்துவதற்கு ஒரு நூற்றாண்டிற்கும் அதிகமான காலத்தை எடுத்துக் கொண்டதால் அவ்வாறான பாரிய மோதல்கள் ஏற்படுவதைத் தடுத்துக் கொண்டன. இது பொருளாதார மாற்றத்திற்கு ஏற்ப சமூக தாபனங்கள் இயற்கையாக வளர்ச்சியடைவதற்கு வாய்ப்பளித்தது.

எந்தவொரு பொருளாதார முறைமையிலும் 'குடும்பம்' அல்லது பொருளாதார சொற்பிரயோகத்தில் 'மனையாளர்' என்பது அடிப்படை அமைப்பு ரீதியான பொருளாதார அலகாகும். உற்பத்தி வளங்களை சொந்தமாகக் கொண்ட குடும்பமானது இவ்வளங்க்ளை நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதாகக் கூறப்படும் அதே சமயம், மற்றொரு வகையில், நிறுவனங்களில் இருந்து முடிவுப் பொருட்களைக் கொள்வனவு செய்ய இவ்விற்பனை வரவுகள் பயன்படுத்தப் படுகின்றன. இது தொடர்ச்சியான பொருளாதாரச் சுற்றோடடத்தை அதிகரிக்கச் செய்வதுடன், பொருளாதார முறைமையின் தொடர்ச்சியும் ஏற்புத் தன்மையும் அதன் அடிப்படையிலேயே தங்கி உள்ளது. எனவே, வளங்களை விற்பனை செய்தல், நுகர்தல், சேமித்தல் என்பவற்றில் குடும்பம் மேற்கொள்ளும் தீர்மானங்கள் நிறுவனங்களின் தீர்மானங்களைப் போன்றே முக்கிய மானவைகளாகும். எத்தகைய பிழையான தீர்மானங்களும் பொருளாதார தேக்கத்திற்கு அல்லது பின்வாங்கலுக்கு இட்டுச் செல்லும்; அதே சமயம், சரியான தீர்மானங்கள் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பயனுள்ளதாக அமைகின்றன. எனவே, பயனுள்ள வகையிலான குடும்ப பொருளாதார முன்னேற்றமும் வளர்ச்சியும் இயைபானதும் ஒத்துழைப்பு மிக்கதுமான பொருளாதார முறைமைக்கு முன் தேவைப்பாடுகளாக விளங்குகின்றன.

இக்கட்டுரை குடும்ப நடத்தை தொடர்பான கோட்பாட்டு ரீதியான பிரச்சினைகளை எடுத்து விளக்க பொருளதார முறைமையின் மாற்றங்கள் இந்நடத்தையை எவ்வாறு பாதிக்கின்றது என்பதனை எடுத்துக் காட்டுகிறது. அது குடும்பத்திற்கு ஒதுக்கியுள்ள புதிய பொருளாதாரப் பாத்திரத்தின் மீதும் கவனஞ் செலுத்துகின்றது.

## குடும்ப நடத்தையின் கோட்பாட்டு ரீதியான அபிவிருத்தி

பொருளியலாளர்கள் குடும்ப நடத்தை தொடர்பான ஆய்வினை நீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாக மானிடவியல் மற்றும் சமூகவியல் போன்ற துறைகளுக்கு ஒதுக்கி வந்துள்ளனர். பொருளாதார உறவுமுறையில் குடும்ப நடத்தை உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், பிற்காலத்தில் பொருளாதாரத்தில் புதிய எல்லைகள் திறந்து விடப்பட்டமையால் குடும்ப நடத்தை பற்றிய அம்சங்களான விருப்பு, வெறுப்பு, போட்டி, ஒத்துழைப்பு, சுயநலம், பரோபகாரம் என்பன ஆய்வுப் பகுதிகளாக மாறின. இத்துறையில் குறிப்பிடத்தக்க முன்னோடிகள் கெனத் வோல்டிங், கெரி பேகர், டக்லஸ் நோத், மற்றும் சமீபத்தில் எப்.ஏ.ஹாயெக் என்போராவர்.

பொருளியலில் குடும்பம் என்பது சட்டரீதியாக (கணவன், மனைவி) அல்லது இரத்த (பெற்றோர், பிள்ளைகள்) உறவுமுறை கொண்ட தனி நபர்களின் சேர்டானமாகும். தன்னிடமுள்ள வளங்களை குடும்பத்தின் எல்லா அங்கத்தவர்களும் உயர்ந்த மட்டத்தில் பெறும் வகையில் ஒதுக்கீடு செய்வது குடும்பத்தின் குறிக்கோளாகும். இவ்வகையில் அது குடும்பத்தினுள்ளும் வெளி உலகிலும் உறவு முறையை எவ்வாறு செயற்படுத்துகிறது என்பது இக் குறிக்கோளை அடைவதில் முக்கிய அம்சமாக விளங்குகிறது.

பொருளாதார இறைமையின் இயக்கப்பாடு சுயநலவாதியை அடிப்படையாகக் கொண்டதெனக் கூறப்படுகின்றது. அவர் தனது வளங்களுக்குப் பாதிப்புறாவகையில் தனது சொந்த நலனை அல்லது தேவைப்பாட்டினை உயர்ந்த பட்சமாக்கிக் கொள்ள பகுத்தறிவுடன் முயற்சிப்பார். போட்டியும் குறிக்கோளும் மிக்க இவ் உலகில் ஆத்மார்த்தமான அல்லது உணர்வு பூர்வமான விடயங்களுக்கோ கூட்டுறவான நடத்தைக்கோ எவ்வித பங்கும் இல்லை. எனினும், குடும்ப பொருளாதாரத்தில் தனது சொந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பொறுத்தவரை தனிப்பட்டவர்களின் நடத்தையில் ஒரு முக்கியமான வேறுபாட்டை பொருளியலாளர்கள் காண்கின்றனர். இங்கு பயன்பாட்டுத் தொழிற்பாடு (தனிப்பட்ட ஒருவரின் பயன்பாட்டினை பாதிக்கும் அம்சங்களின் தொகுதி) ஒருவரது சொந்த நுகர்விற்கு மேலதிகமாக குடும்ப அங்கத்தவர்களின் மகிழ்ச்சிக்கு இடமளிக்கும் வகையில் திருத்தப்படுவது தனிப்பட்டவர்களின் பயன்பாட்டினை பாதிப்புறச் செய்யும் அம்சமாக விளங்குகிறது. இதனடிப்படையில் தனிப்பட்ட ஒருவர் எவ்வித பண ரீதியான நட்டஈட்டினையும் பிரதி இலாபமாக எதிர்பார்க்காது அவர் தான் குடும்பத்தில் அன்பு கொண்டுள்ள வருக்காக பெரும் தியாகத்தை செய்ய எதிர்பார்க்கிறார் என கருதப்படலாம். இப்பிரதி உபகாரமற்ற பரிமாற்றம் சமூகத்தில் மற்றவர்களுடன் வழமையாகச் செய்யும் பரிமாற்றங்களை விட வித்தியாசமானது. சந்தை பரிவர்த்தனையில் ஒரு தனிப்பட்டவர் எப்போதும் இரு வழிப் பாதையான பரிவர்த்தனையில் பிணைப்புறுகின்றார். இங்கு இருதரப்பினரும் போதியளவில் நட்டஈடு செய்து கொள்கின்றனர். பிற வார்த்தைகளில் கூறுவதாயின் சந்தையில், இலவச உணவு போன்ற விடயங்கள் இல்லை. குடும்பத்தைப் பொறுத்தவரை ஒரு அங்கத்தவர் தனது குடும்பத்தின் ஏனையவர்களுக்காக இலவச விருந்து அளிப்பினை வழங்கலாம்.

பொருளாதாரக் கோட்பாட்டுக்கான இந்த திருத்தத்தின் மூலம் அன்பு, பாசம் மற்றும் பிறர் நலன்பேணல் போன்ற சந்தை சாராத கருதுகோள்கள் தனி நபரின் வாழ்வில் எவ்வாறு ஒரு பங்கினை வகித்து வருகின்றது என்பதனை பொருளியலாளர்களால் விளக்கக்கூடியதாக இருந்தது. எனவே, இந்த வகையில், தனி நபர் பாரம்பரியக் கோட்பாட்டில் கருதப்படுவது போல, வெறுமனே ஒரு பொருளாதார மனிதனாக மட்டும் இருந்து வரவில்லை; மாறாக, இரட்டை ஆளுமையைக் கொண்ட ஒரு நபராக அவர் இருந்து வருகின்றார். இந்த விதத்தில், ஒரு தனி நபர் சமூகத்தில் வாழும் பல்வேறு உறுப்பினர்கள் அல்லது குழுக்கள் என்போரின் நலனை முன்னிட்டு தனது அன்புணர்வினை வெளிக்காட்டும் நோக்கில் முன்னுரிமைப் பட்டியல் ஒன்றைத் தயாரித்துக் கொள்வார். இது அத்தகைய நபர்களின் அல்லது குழுக்களின் உபயோகத்தினால் தனது உபயோகம் எந்த அளவுக்கு அதிகரிக்கப்படும் என்பதனைப் பொறுத்தே அமைகிறது. இந்த முன்னுரிமைப் பட்டியலின்படி அவர் கணவன், மனைவி அல்லது பெற்றோர், பிள்ளைகள் போன்ற நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவர் பாலும் மிக நெருக்கமான பிணைப்புக்களைக் கொண்டு இருக்க முடியும். எனினும், சமூகத்தின் வெளி வட்டங்களுடனான தொடர்பின் போது இந்த பிறர் நலன் பேணும் பண்பு பின்வரும் ஒழுங்கில் படிப்படியாக குறைவடைகின்றது; நெருங்கிய உறவினர், தூர உறவினர், நண்பர்கள், அதே பகுதியைச் சேர்ந்த மக்கள், அதே நாட்டைச் சேர்ந்த மக்கள், ஏனைய நாடுகளைச் சேர்ந்த மக்கள் என்ற ஒழுங்கில் இது அமைகிறது. எனவே, குடும்பத்தில் பிறர் நலன் பேணுபவனாக இருந்துவரும் ஒரு மனிதன் வெளியில் உள்ள சமூகத்துடன் தொடர்பு கொள்ளும் பொழுது ஒரு பொருளாதார மனிதனாக மாறி விடுகிறான். நெருக்கமான குடும்ப அலகுகளில் காணப்படும் ஒத்துழைப்பின் இடத்தில் சந்தை நடவடிக்கைகளின் போட்டி இடம் பெறுகின்றது.

குடும்பத்தின் சீர்குலைவுக்கான காரணங்களை மேற்போந்த பகுப்பாய்வின் பின்னணியிலும் புரிந்து கொள்ள முடியும். குடும்பத்தின் ஓர் உறுப்பினரின் உபயோகம் ஏனையோரின் உபயோகத்தை அதிகரிக்கச் செய்யும் வகையில் ஒரு குடும்பம் ஒன்றாக பிணைக்கப்பட்டிருக்க முடியும். குடும்ப நடத்தையில் இந்த விதி செயற்படும் பொழுது, ஒரு நபர் தனது சொந்த நுகர்வு குறித்தும் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களின் நுகர்வு குறித்தும் ஒரு வேறுபாட்டினைக் காண்பதில்லை. இவை இரண்டும் தனது உபயோகத்தை உச்ச மட்டத்தில் வைத்து இருப்பதற்கு உதவுவதே இதற்கான காரணமாகும். எனவே, குடும்ப உறுப்பினர்களிடையேயான ஒத்துழைப்பினை வழிகாட்டு கோட்பாடாகக் கொண்டு பிறர் நலன் பேணும் உறவு முறைகள் வளர்ச்சி அடையும். எனினும், ஒரு தனி நபரின் உபயோகம் ஏனைய குடும்ப உறுப்பினர்களின் உபயோகத்திலும் பார்க்க அதிகரித்துச் செல்லும் பொழுது, அவர் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களிடம் இருந்து சந்தை அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களை எதிர்பார்க்கத் தொடங்கலாம். குடும்ப உறுப்பினர்கள் அதனை நிறைவு செய்யத் தவறுமிடத்து சந்தையின் ஏனைய தொழில் முயற்சி ஒன்றைப் போலவே குடும்ப நிறுவனமும் சீர்குலைந்து விடும்.


தனக்குத்தானே உதவிக் கொள்ளும் பாரம்பரிய சமூகத்தைச் சேர்ந்த ஒரு குடும்பம் நவீன சந்தைப் பொருளாதாரத்தைச் சேர்ந்த குடும்பத்திலும் பார்க்க மிக முக்கியமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பங்கினை வகிக்க வேண்டியிருந்தது. இந்த சுயசார்புக் குடும்பங்களைப் பொறுத்தமட்டில், அது நிலைத்திருக்கும் பொருட்டு தற்சார்பு ஆற்றல்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும். இக்குடும்பத்தின் தேவைகள் அநேகமாக குடும்பத்திற் குள்ளிருந்தே நிறைவு செய்யப்படும். எனவே, வாழ்வின் தொடர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு பிள்ளைகளுக்குக் கல்வியூட்டுவது குடும்பத்தின் முதன்மைப் பொறுப்பாக இருந்து வந்தது; அதனால் பெற்றோர் ஆரம்பத்தில் இருந்தே தமது பிள்ளைகளுக்கு வாழும் கலையை கற்பித்து வந்தனர். இந்த அமைப்பில் ஆண் பிள்ளைகள் பொருளாதார நடவடிக்கைகளில் நேரடிப் பயிற்சியைப் பெற்று வந்த அதே வேளையில், பெண் பிள்ளைகள் சமையல், குழந்தை வளர்ப்பு, நோயாளிகள் பராமரிப்பு போன்ற வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இங்கு ஊழியப் பிரிவினைத் தெளிவாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சுகாதார சேவைகளும்கூட குடும்பத்திற் குள்ளேயே உருவாக்கப்பட்டன; அதாவது, சிறு நோய்களுக்காக சிகிச்சைகள் தாக்கமான முறையில் அளிக்கப்பட்டு வந்தன. குடும்பத்தில் சட்ட ஒழுங்கு பராமரிப்பு மற்றும் வெளி ஆக்கிரமிப்புக்களில் இருந்து குடும்பத்தைப் பாதுகாத்துக் கொள்ளல் போன்றனவும் வீட்டுக்குள்ளேயே இடம் பெற்றன. எனவே, பாரம்பரிய சமூகத்தைச் சேர்ந்த ஒரு குடும்பம் இயற்கை அழிவுகளிலிருந்தும் மனிதனால் உருவாக்கப்படும் அழிவுகளிலிருந்தும் தன்னைக் காத்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

எவ்வாறிருப்பினும், நவீன சந்தைப் பொருளாதாரத்தில், முன்னர் வீட்டுக்குள்ளேயே உற்பத்தி செய்யப்பட்டு வந்த இந்த சேவைகள் அனைத்தும் குடும்பத்தினரால் வெளியில் இருந்து பெறப்படுகின்றன. பிள்ளைகளின் கல்வி மற்றும் சுகாதாரம் போன்றவை இப்பொழுது தேசிய கல்வி மற்றும் சுகாதார முறைகளின் பொறுப்பில் இருந்து வருகின்றன. குடும்பத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரிப்பதும் வெளியாரின் தாக்குதல்களில் இருந்து அதனைக் காத்துக் கொள்வதும் இப்பொழுது குடும்ப முதியவர்களின் பொறுப்பாக இருந்து வரவில்லை; மாறாக, இது பொலிஸ் துறையினதும் நீதிச் சேவைகளினதும் பொறுப்பாக இருந்து வருகிறது. நகர்ப்புறங்களைப் பொறுத்த மட்டில், வீட்டுச் சமையலும்கூட படிப்படியாக முக்கியத்துவம் இழந்து வருகின்றது; அதாவது, சந்தையில் இருந்து வாங்கப்படும் உணவுப் பண்டங்களின் உபயோகம் இப்பொழுது அதிகரித்து வருகின்றது. வெளியில் இருந்து வரும் இந்த சேவைகள் இப்பொழுது பல்வேறு துறைகள் வரையில் விரிவாக்கம் பெற்றுள்ளன: சலவை செய்தல், குடும்ப விழாக்களை ஏற்பாடு செய்தல் மற்றும் இறுதிக் கிரியைகள் என்பவற்றை உதாரணங்க ளாக காட்ட முடியும். நவீன குடும்பம் ஒன்றில் வீட்டை அடிப்படையாகக் கொண்ட சேவைகளின் உருவாக்கம் கணிசமான அளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. அதே வேளையில், குடும்பம் முழு அளவில் சந்தையினால் சூழப்பட்டுள்ளது. இந்த வகையில், நவீன குடும்பம் ஒரு தெளிவான ஊழியப் பிரிவினைத் தன்னகத்தே கொண்டுள்ளது; அதாவது (ஊழியம் போன்ற) குடும்ப மூலவளங்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுவதுடன், குடும்பத்தின் தேவைகள் சந்தையில் இருந்து கொள்வனவு செய்யப்படுகின்றன.

இச்சேவைகளை உருவாக்குவதில் குடும்பத்திலும் பார்க்க சந்தை செயல்திறன் மிக்கதாக இருந்து வரும் ஒரு நிலையில் இந்த மாற்றம் தவிர்க்க முடியாததாகும். குடும்பத்தைப் பொறுத்தமட்டில் மூலவளங்களி[illegible] தட்டுப்பாடு காணப்படுகின்றது. எனவே, இந்த நிலையில், அதனால் பொருளாதாரச் சிக்கனங்களை பயன்படுத்திக் கொள்ள முடிவதில்லை. எனவே, ஒரு குடும்பம் சந்தை அமைப்புடன் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும் பொழுது அது அனைத்துப் பொருட்களையும் சிறந்த தரத்தில் போதிய அளவில் பெற்றுக் கொள்ள முடியும். நவீன சமூகம் சுகாதாரம், கல்வி மற்றும் ஏனைய துறைகள் என்பவற்றில் ஈட்டிக்கொண்டுள்ள சாதனைகளை, மூலவளத் தட்டுப்பாட்டினைக் கொண்ட குடும்பம் தனித்து நின்று ஒரு போதும் ஈட்டிக் கொண்டிருக்க முடியாது. எனவே, விரிவான பல பொருட்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதில் குடும்ப மூலவளங்கள் அனைத்தையும் ஒன்று திரட்டி, பயன்படுத்திக் கொள்வதில் சந்தை பெரு வெற்றி கண்டுள்ளது. மேலும், எதிர்கால சுபீட்சத்திற்கும் வளர்ச்சிக்கும் என முதலீடு செய்யக்கூடிய மிகைகளையும் அது உற்பத்தி செய்து வருகின்றது. இதன் விளைவாக, குடும்பம் மிகக் கடுமையாகப் போட்டி இடம் பெற்றுவரும் உலகொன்றுக்குள் தள்ளப்பட்டுள்ளது. உன்னத நிலையை ஈட்டுவதற்கு ஊடாக ஏனையவர்களை முந்திச் செல்லும் அதன் ஆற்றலிலேயே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகில் அதன் பயணத்தின் வெற்றி பெருமளவுக்கு தங்கியுள்ளது. [illegible]ப் போட்டி, மறுபுறத்தில், குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரினதும் வாழ்க்கையை சிரமம் மிக்கதாக மாற்றி அமைத்துள்ளது. வர்த்தகமயமாக்கலின் ஆரம்ப கட்டங்களில் குடும்பத்தின் பிரதான ஆண் உறுப்பினர் மட்டுமே சந்தையில் தமது ஊழியத்தை விற்பனை செய்தார். எனினும், பிற்காலத்தில் குடும்ப வருமானத்திற்கு குறைநிரப்புச் செய்யும் பொருட்டு அவருடைய மனைவியும் ஊழியச் சந்தைக்குள் தள்ளப்பட்டார். இதனை ஒரு நல்ல மாற்றம் என்றே கருத வேண்டும். ஏனெனில், தொழில்சார் ரீதியில் திறன்களைப் பெற்றுக் கொண்ட மகளிர் சமுதாயமொன்றின் எழுச்சிக்கு இது வழிகோலியது. இப்பொழுது அநேகமாக பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலுமே ஆண்களும் பெண்களும் ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டு வருகின்றனர்.

ஏனைய குடும்பங்களிலும் பார்க்க ஒரு மேலான அந்தஸ்தினை ஈட்டிக் கொள்ள வேண்டும் என்ற குடும்பத்தின் தணியாத வேட்கை காரணமாக, இந்தப் போட்டி அமைப்புக்குள் சிறுவர்களும் கூட உந்தித் தள்ளப் பட்டனர். இதன் விளைவாக, பள்ளிக் கல்வியிலும் அதே போல பள்ளிக்கு வெளியேயான நடவடிக்கைகளிலும் சிறுவர்கள் உயர்ந்த நிலையை எட்ட வேண்டும் என்ற பெற்றோர்களின் அபிலாஷைகள் காரணமாக பிள்ளைகள் கடும் மன உளைச்சல் நிலையை எதிர் கொண்டார்கள். இன்றைய குடும்பம் உயர் அந்தஸ்து, சமூக அங்கீகாரம் (மற்றும் சாத்தியமான இடத்து அரசியல் அதிகாரம்) என்பவற்றை சாதித்துக் கொள்வதற்கான மிகக் கடுமையான போட்டியொன்றில் ஈடுபட்டுள்ளது. இந்த தணியாத தாகம் பல சமூக, உளவியல் மற்றும் கலாசாரப் பிரச்சினைகளைத் தன்னுடன் எடுத்து வந்துள்ளது. ஆண், பெண் முரண்பாடுகள், குடும்ப சீர்குலைவு, தலைமுறை இடைவெளி, மனநோய் அதன் விளைவான படுகொலைகள் மற்றும் தற்கொலைகள், உளவியல் வக்கிரங்கள் என இந்தப்பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

**குடும்பத்தின் மாறிவரும் பொருளாதாரம்**

பல வளர்முக நாடுகளில் எழுச்சியடைந்துள்ள புதிய குடும்ப அமைப்பு, ஓர் உடல் உறுப்பினை ஏற்றுக் கொள்வதற்கு இன்னமும் தயார் நிலையில் இல்லாத உடல் ஒன்றுக்குள் அதனை இணைத்ததற்கு இணையாகவே காணப்படுகிறது. குடும்பத்தில் ஏற்பட்ட மாற்றம்; வியத்தகு விதத்தில் ஒரு குறுகிய காலப் பிரிவுக்குள் ஏற்பட்டுள்ளது. இந்த அமைப்பின் ஏனைய அம்சங்களுடன் ஓர் இணக்க நிலையை ஏற்படுத்திக் கொள்வதற்கு போதிய கால அவகாசம் கிட்டவில்லை. எனவே, இந்த வகையில் இந்த அந்நிய நிறுவனம் பெருந் தொகையான சமூகப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. தற்போதைய சமூக ஒழுங்குக்குள் இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிய முடியாது. எனவே, இந்தப் பின்னணியில், வளர்முக நாடுகளுக்கு பொருத்தமான ஒரு பொருளாதார நிறுவனம் என்ற முறையில் சந்தை அமைப்பின் செல்லுபடியாகும் தன்மை குறித்து இது கேள்விகளை எழுப்பியுள்ளது.

புதிய குடும்ப அமைப்பின் ஒரு முக்கிய கூறு மகளிருக்கு வலுவூட்டுவதாகும். இந்த வலுவூட்டல் நகர சமூகங்களில் பெருமளவுக்கும் கிராமிய சமூகங்களில் ஓரளவுக்கும் இடம்பெற்று வருகின்றது. இது இரு வழிகளுக்கூடாக இடம் பெற்றது: ஒரு புறத்தில், மகளிரின் கல்வி மற்றும் தொழில் சாதனைகளும், மறுபுறத்தில், சந்தையில் தொழில்களின் வளர்ச்சியும் இதற்கு பங்களிப்புச் செய்தன. குடும்ப அமைப்பு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளல், சனநாயக முறையிலான முடிவு எடுத்தல் இறுதியில் மகளிர் தலைமைத்துவம் என்பவற்றிற்கு தயாராவதற்கு முன்னரேயே மகளிருக்கு வலுவூட்டும் இந்த நிகழ்வுப்போக்கு சடுதியாக இடம் பெற்றது. இதன் விளைவாக, தலைமைத்துவத்திற்கும் அந்தஸ்துக்கும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான போட்டியின் வடிவில் இடம் பெற்ற போராட்டம் குடும்பத்தின் அத்திவாரத்தையே அதாவது, பிறர் நலன் பேணல் மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருந்த அத்திவாரத்தையே ஆட்டங் காணச் செய்திருந்தது. வளர்ச்சி குன்றிய சமூகங்களில் நிலவி வந்த மிகக் கடுமையான விவாகரத்து சட்டங்கள் காரணமாக, சீர்குலைவின் இறுதிக் கட்டம் வரையில் இந்நிலைமை வெளியில் தெரிய வரவில்லை. மறுபுறத்தில், வளர்ச்சி அடைந்த நாடுகளில் குறிப்பாக, நகர்ப் புறங்களில் உயர் அளவிலான விவாகரத்து விகிதங்களை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இன்றைய இலங்கையில்; குறிப்பாக மகளிர் உயர் வருமானங்களை ஈட்டிக் கொள்ளத் தக்கதாக இருந்து வரும் பொருளாதார நடவடிக்கைகளில் இத்தகைய மாற்றங்கள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் குடும்பங்களின் சீர்குலைவு சமூகத்தின் மீது ஒரு சுமையை எடுத்து வரவில்லை; ஏனெனில், பிரிந்த பெற்றோரின் உயர் வருமானங்கள் பிள்ளைகளின் நல்வாழ்வை உத்தரவாதப்படுத்தக் கூடியவையாக இருந்து வந்தன. எனினும், தனியொரு பெற்றோரைக் கொண்ட குடும்பங்களின் எழுச்சி இத்தகைய பின்னணியில் மிக முக்கியமான ஒரு சமூகப் பிரச்சினையாக உள்ளது.

எவ்வாறிருப்பினும், வளர்முக நாடுகளில் மகளிருக்கு வலுவூட்டும் நிகழ்வுப்போக்கு ஒட்டுமொத்தமாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதனை இது குறிக்கவில்லை. இத்தகைய நிகழ்வுப்போக்குகள் தொடர வேண்டியுள்ளதுடன், சமூகத்தின் ஏனைய பிரிவினர் அதனை ஓர் இயற்கை மாற்றமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் படிப்படியான முறையில் அது அறிமுகப்படுத்தப் படுதல் வேண்டும். மகளிருக்கான (ஆடைத் தொழிற்சாலைகளில் தொழில் வாய்ப்பு அல்லது மத்திய கிழக்குத் தொழில் வாய்ப்பு போன்ற) சடுதியான தொழிற் சந்தைகளின் அபிவிருத்தி மிகக் குறுகிய காலப் பிரிவொன்றுக்குள் பெரும் எண்ணிக்கையிலான மகளிருக்கு பொருளாதார அதிகாரத்தை அளிக்கவல்லதாகும். எனினும், அது குறுங் காலத்தில் குடும்பத்தின் உறுதிப்பாட்டுக்கு அச்சுறுத்தலை எடுத்து வரக்கூடிய பல பிரச்சினைகளை தோற்றுவிக்கிறது. எனவே, இந்த நிலையில், மகளிர், குடும்ப முறையின் கீழ் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த பாதுகாப்பினை இழக்க கூடிய ஒரு நிலை தோன்றுவதனால் அவர்களுக்கு வலுவூட்டும் அடிப்படைக் குறிக்கோளே தோல்வி கண்டுவிடுகின்றது. குடும்ப உறவுகளை சீர்குலைக்காத விதத்தில் மகளிருக்கு வலுவூட்டும் நிகழ்வுப் போக்கை செய்ற்படுத்த வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியத்தை இது கோடிட்டுக் காட்டுகின்றது.

குடும்ப உறுப்பினர்கள் தத்தமக்குரிய நடவடிக்கைகளில் (அதாவது பெற்றோர் வருமானம் ஈட்டும் தொழில்களிலும் பிள்ளைகள் கல்வி பயில்வதிலும்) ஈடுபட்டிருக்கும் பொழுது முதியவர்களும் சக்தியற்றவர்களும் கைவிடப்படும் ஒரு நிலை தோன்றுகின்றது. இந்தப் பின்னணியில், ஆசிய சமூகங்களில் காணப்படும் பாரம்பரிய விஸ்தரிக்கப்பட்ட குடும்ப அமைப்பு ஒரு வெற்றிகரமான சமூகப் பாதுகாப்பு அமைப்பாகத் தென்படுகிறது. ஏனெனில், இச் சமூகங்களில் முதியவர்களும் சக்தியற்றவர்களும் இளைஞர்களின் பராமரிப்பில் விடப்படுகின்றனர். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் வளர்ச்சி அடைந்துள்ள இருவழி சமூகக் கடப்பாட்டினை (அதாவது இளவயதினராக இருக்கும் பொழுதுபெற்றோர் பிள்ளைகளைப் பராமரிப்பதும் முதியவர்களாக இருக்கும் பொழுது பெற்றோரைப் பிள்ளைகள் பராமரிப்பதும்) இன்றைய நவீன வர்த்தகச் சமூகங்களில் அவதானிக்க முடியவில்லை. எனவே, வயது முதிர்ந்தோரைப் பராமரிப்பதற்கு சந்தை அமைப்பு பொருத்தமான வழிமுறைகளை அபிவிருத்தி செய்வது அவசியமாகும். இந்தப் பிரச்சினைக்கான தீர்வாக முதிர்ந்தோர் இல்லங்கள் பல்கிப்பெருகி உள்ளதுடன், சந்தையில் பல்வேறுபட்ட சமூக நல ஒய்வூதியத் திட்டங்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன. மேலைய சமூகங்களில் சந்தை அமைப்புக்கு ஊடாக இச்சவால் வெற்றிகரமான முறையில் எதிர்கொள்ளப் பட்டுள்ள அதே வேளையில், வளர்முக நாடுகளில் அது இன்னமும் தீர்க்கப்படாது இருந்து வருகிறது.



நவீன பொருளாதார முறை, மகளிரை அவர்களுடைய வீட்டுப் பணிகளில் இருந்து விலக்கி, அவர்கள் ஊழியச் சந்தைக்குள் பிரவேசிப்பதற்கு வசதி செய்து கொடுத்தது. ஊழியத்தை மிச்சப்படுத்தக் கூடிய பல நவீன வழிவகைகளை சந்தை கண்டு பிடித்திருப்பதன் காரணமாக வீட்டு வேலைகளில் மகளிரின் சுமை பெருமளவுக்கு குறைவடைந்துள்ளது. அதன் காரணமாக வெளிச் சந்தைக்கு அவர்கள் தமது ஊழியத்தை வழங்கக்கூடிய ஒரு நிலை தோன்றியுள்ளது. வீட்டு உற்பத்திக்குப் பதிலாக, சந்தை வெளியில் இருந்து பண்டங்களை வழங்கக்கூடியதாக இருக்கும் நிலை, ஒரு சமூக நிறுவனம் என்ற முறையில் குடும்பத்தின் உறுதிப்பாட்டினை ஓரளவுக்குப் பேணிக் கொள்வதற்கு உதவியுள்ளது.




புதிய குடும்ப அமைப்பின் குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பம்சம் சிறுவர் குறித்த அணுகுமுறையில் ஏற்பட்டு வரும் மாற்றமாகும். மனித ஊழியம் குடும்பத்தின் சக்திக்கான ஒரு மூலாதாரமாக இருந்து வந்த பாரம்பரிய குடும்பங்களில் அதிக எண்ணிக்கையிலான பிள்ளைகள் விரும்பப்பட்டனர். இலங்கையில் 1940 களின் நடுப்பகுதியில் குடும்பம் ஒன்றுக்கான சராசரிப் பிள்ளைகளின் எண்ணிக்கை சுமார் 8 ஆக இருந்து வந்தது. எனினும், மகளிர் வீட்டுக்கு வெளியே சென்று தொழில்களில் ஈடுபடும் நிலை அதிகரித்து வந்ததுடன் இணைந்த விதத்தில் பிள்ளைகளை வளர்ப்பதில் அவர்கள் செலவிடக் கூடிய நேரத்தின் அளவும் குறைவடையத் தொடங்கியது. இதன் காரணமாக, நேரத்தின் சந்தர்ப்பச் செலவு அதிகரித்துச் சென்றது. இதன் ஒரு தவிர்க்கமுடியாத விளைவாக குடும்பம் ஒன்றுக்கான சராசரிப் பிள்ளைகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடையத் தொடங்கியது. இது பொதுவாக நகரப் பகுதிகளில் இரண்டு பிள்ளைகள் என்ற அளவில் இருந்தது. இலங்கையில் 1990 களில் சராசரிக் குடும்ப அளவு 5 உறுப்பினர் என்ற எண்ணிக்கையில் வீழ்ச்சி கண்டிருந்தது. மேலைய சமூகங்களில் திருமணமானவர்கள் தாமே விரும்பி பிள்ளைகள் இல்லாதவர்களாக வாழும் ஒரு நிலை விருப்பத் தேர்வுப் பெற்றோர் என்ற மாற்றத்தை எ வந்துள்ளது. இத்தகைய மாற்றங்க ஒட்டுமொத்த விளைவாக குடி தொகைப் பெருக்க விகிதத்தில் செங்குத்தான ஒரு வீழ்ச்சி இடம் பெற்றுள்ளது. இது மறுபுறத்தில், வயது முதிர்ந்தவர்களின் குடித்தொகை அதிகரிப்புக்கு வகை செய்துள்ளது. கனடா, ஜேர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளில் இது ஏற்கனவே இடம் பெற்று வந்துள்ளது. இலங்கை யிலும் கூட வருங்காலத்தில் இத்தகைய மாற்றங்கள் இடம் பெறுவதற்கான அறிகுறிகள் இப்பொழுது தென்படத் தொடங்களியுள்ளன.

சுருக்கமாகச் சொல்வதானால், வளர்முகப் பொருளாதாரங்களின் வர்த்தகமயமாக்கப்பட்ட பொருளாதார முறைகளின் மிகத்துரித அபிருத்தி, ஒரு சமூக நிறுவனம் என்ற முறையில் குடும்பத்தின் மீது மிகக் கடுமையான நெருக்குதல்களை எடுத்து வந்துள்ளது. பொருளாதார அமைப்பில் ஏற்பட்டு வந்த துரித மாற்றங்களுக்கு மத்தியில் குடும்ப அமைப்பிலான மாற்றங்கள் மந்த கதியிலேயே இடம் பெற்று வந்தன. இது குடும்ப இலட்சியங்களுக்கும் புதிய பொருளாதார விழுமியங்களுக்கும் இடையில் ஒரு முரண்பாட்டை எடுத்து வந்தது. ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்ட குடும்ப அலகு, போட்டியை அடிப்படையாகக் கொண்ட சந்தைகளுடன் எந்த ஒரு இணக்க நிலையையும் எட்டுவது சாத்தியமற்றதாக இருந்த போதிலும் கூட, பாவனையை உச்சப்படுத்தும் கோட்பாட்டுக்கு ஊடாக இவ்விரண்டுக்கும் இடையே ஒரு கோட்பாட்டு ரீதியான பிணைப்பினை எடுத்து வரமுடியும் என்பதனைப் பொருளியலாளர்கள் இப்பொழுது கண்டறிந்துள்ளனர். இந்தப் பின்னணியில் ஒரு தனிநபர் இரட்டை ஆளுமையைக் கொண்ட ஒருவராக கருதப்படுகிறார். ஒரு புறத்தில், அவர் தனது குடும்ப உறுப்பினர்கள் தொடர்பாக ஒரு பொது நல மனப்பான்மையைக் கொண்டுள்ளார்; மறுபுறத்தில், சமூகத்தின் ஏனைய பிரிவினர் தொடர்பாக ஒரு போட்டி அணுகுமுறையை அவர் பின்பற்றுகின்றார். நிலையான ஓர் அடிப்படையில் மனித சமூதாயம் இடையறாது முன்னோக்கிப் பயணிப்பதற்கு இந்த இரட்டை அணுகுமுறை அவசியமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விழுமியங்கள் மற்றும் ஒற்றுமை என்பவற்றில் இன்றைய போட்டி கல்வி முறையின் தாக்கம்



*விமலா டி சில்வா*

நீர்கொழும்பு நியூஸ்டேட் கல்லூரியின் பழைய சஞ்சிகை ஒன்றைப் புரட்டிப் பார்த்தபொழுது பழைய மாணவி ஒருவர் எழுதி இருந்த கட்டுரை ஒன்றை வாசிக்கக் கிடைத்தது. இக் கட்டுரை சுமார் 90 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்டதாகும். பாடசாலையில் சேர்வதற்காக ஆங்கில மொழியில் இடம் பேற்ற நேர்முகப் பரீட்சை குறித்து அந்த மாணவி எழுதியுள்ளார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது :

> அந்தக் காலத்தில், பாடசாலையிலேயே தங்கியிருக்கும் மிஷனரி ஒருவர் அதன் முகாமையாளராக இருந்தார். புதிய சேர்க்கைகள் அவராலேயே மேற்கொள்ளப்பட்டன. பாஸ்மோர் என்ற பாதிரியார் முகாமையாளராக இருந்தார். சிறுமி அவர் முன் அனுப்பி வைக்கப்பட்டாள். அவருக்குப் பழக்கமான இரக்கம் தோய்ந்த குரலில் அவர் சொன்னார்: "காலை வந்தனம் சிறுமியே ! நீ எப்படி இருக்கிறாய் ?" அந்தச் சிறுமி இப்படி பதிலளித்தாள்: "வானத்தில் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருக்கின்றன" பாதிரியார் தன் கண்கைள அகலத் திறந்து குபீரெனச் சிரித்துவிட்டார்.

இந்தத் துணுக்கு, இந்த நாட்டில் எதுவும் புதியவிடயங்கள் அல்ல என்ற உண்மைய எனக்கு எடுத்து விளக்கியது. ஆனால்,அன்றைக்கும் இன்றைக்கும் உள்ள வித்தியாசம், படிப்பு சொல்லிக் கொடுப்பதன் மோசமான விளைவுகளை அந்த முகாமையாளர் ஏற்றுக் கொண்டு அந்தப் பிள்ளையை பள்ளியில் சேர்த்துக் கொண்டார் என்பதாகும். இருந்த போதிலும், இப்பொழுது பள்ளி அனுமதிப் பரீட்சை ஒரு பாரதூரமான விடயமாகக் கருதப்பட்டு வருகின்றது. அதில் தோல்வி அடைந்தால் எவரும் சிரிக்க முடியாது. இப்பொழுது பத்து வயதான ஒரு சிறுமி ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கென பல டியூன் வகுப்புக்களுக்கு அனுப்பப் படுகிறாள். இந்தப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்வது மிகச் சிறந்த பாடசாலை ஒன்றில் அனுமதி பெறுவதற்கான வாய்ப்பினை அளிக்கக் கூடியதாக இருப்பதனால் இது மிகவும் நிர்ணயகரமான ஒரு பரீட்சையாகக் கருதப்படுகின்றது. எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய ஒரு பரீட்சையாகவும் உள்ளது. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறுவது குழந்தையின் எதிர்காலத்திற்கு இடையூறாக இருப்பது மட்டுமன்றி பெற்றோர் வெட்கித் தலைகுனிய வேண்டிய ஒரு விடயமாகவும் கருதப்படுகின்றது. எனவே, குறைந்த புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பிள்ளைகள் மட்டுமன்றி அவர்களுடைய பெற்றோர்களும் கூட பாரிய மனத் தாக்கமொன்றை அனுபவிக்க நேரிடுகின்றது. 1995 இல் ஆண்டு 5 இல் கல்வி கற்று வந்த சுமார் 400,000 பிள்ளைகளில் 288,941 பேர் (72.2%) ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்தார்கள்; இது இப் பரீட்சையின் முக்கியத்துவத்தை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.



ஒரு நல்ல பாடசாலையைப் பெற்றுக் கொள்வதற்கான போட்டி இக்கட்டத்தில் தொடங்குவதுமில்லை; முடிவதுமில்லை. அநேகமாக, ஒரு குழந்தை பிறந்த உடனேயே இப்போட்டி ஆரம்பமாகிவிடுகின்றது. பெற்றோரில் பெரும்பான்மையானவர்கள் தமது பிள்ளைகளைப் பிரபல்யம் பெற்றுள்ள அரச பாடசாலைகளில் சேர்த்துவிடவே விரும்புகிறார்கள். ஆனால், அத்தகைய பாடசாலைகள் குறைவாக இருந்து வருவதுடன், அவற்றில் ஆண்டு 1 இல் அனுமதி பெறுவதற்கு மிகக் கடுமையான போட்டி இடம் பெற்றும் வருகின்றது. பம்பலப்பிட்டி விசாகா வித்தியாலயத்தில் 1996 இல் ஆண்டு 1 இல் அனுமதி பெறவென 939 விண்ணப்பங்கள் வந்து இருந்தன. இவற்றில் 225 (24%) பிள்ளைகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது. அரசாங்கப் பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை ஆண்டு 1 இல் சேர்த்துக் கொள்வதற்கான மிக முக்கியமான நிர்ணய காரணி வதிவிடம் பாட சாலைக்கு அண்மையில் அமைந்திருப்ப தாகும். இதன் காரணமாக பெற்றோர் பல வருடங்களுக்கு முன்னரேயே தமது இருப்பிட பதிவினை நிரூபிப்பதற்கு என ஆவணங்களைத் தயாரிக்கத் தொடங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகின்றனர். இத்தகைய ஆவணங்களைத் தயாரித்துக் கொடுக்கும் வியாபாரம் மும்முரமாக இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது. எனவே, வாழ்வின் தொடக்கத்திலேயே ஒரு குழந்தை தன்னைச் சூழ உருவாக்கப் படும் பொய்மைகளுக்குள் சிக்கிக் கொள்கின்றது. குழந்தையின் விழுமியங்கள், வாழ்க்கை குறித்த அணுகுமுறை மற்றும் தனிப்பட்ட உறவுகள் என்பவற்றின் மீது இது எடுத்துவரக் கூடிய தாக்கங்கள் இன்னமும் சரியாக ஆராயப்படவில்லை. ஆனால், போதியளவில் நல்ல பாடசாலைகளை வழங்காது இருப்பதன் மூலம் கல்வித் திணைக்களமே தவறிழைத்து வருவதாக பெற்றோர் குறை கூறுகின்றனர். தமது பிள்ளைகளுக்கு எந்த வழியிலாயினும் சரி மிகச் சிறந்த கல்வியை அளிப்பது தமது கடமையாக உள்ளது என் அவர்கள் நம்புகின்றனர். வசதிமிக்க ஒரு சிலர் கட்டணம் அறவிடும் தனியார் பள்ளிகளில் தமது பிள்ளைகளை சேர்க்க விரும்புகின்றனர். தனியார் பள்ளிகளும் கூட அனுமதி தொடர்பான தமது சோந்த விதிமுறைகளைக் கொண்டுள்ளன. அந்த நிலையில், இப் பெற்றோர், இப்பொழுது காளான்கள் போல் பெருகிவரும் சர்வதேச பாடசாலைகளை நாட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஆண்டு 1 க்கான வருடாந்தக் கட்டணமாக ரூபா 13,200 தொடக்கம் ரூபா 150,000 வரையில் அறவிடும் அத்தகைய 170 பாடசாலைகள் 1995 இல் இலங்கையில் செயற்பட்டு வந்தன.

நல்ல கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான போட்டி பாலர் பாடசாலையின்இருந்தே தொடங்குகிறது. ஒரு பிள்ளையில் முறைசார்ந்த கல்வி ஆண்டு 1 இல் ஆரம்பமாக வேண்டும் எனக் கருதப்படுகின்றது. எனினும், பள்ளியில் அனுமதிக்கப்படும் பொழுது ஒரு பிள்ளை எழுத்தறிவினையும் எண்ணறிவினையும் பெற்றிராவிட்டால், ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையை நோக்கி நெறிப்படுத்தப்படும் ஒரு கல்வி முறையில் பிரதிகூலமான நிலையிலேயே இருந்து வர நேரிடும். அப்பிள்ளை ஒரு பின்தங்கிய பிள்ளையாகக் கருதப்படுவதுடன், 40-50 பிள்ளைகளைக் கொண்ட ஒரு வகுப்பில் ஆசிரியரினால் ஒரு பிள்ளையின் மீது தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்த முடியாது. எனவே, இங்கு பாலர் பாடசாலைக் கல்வியின் அடிப்படை நோக்கமே சிதைக்கப்பட்டு விடுகின்றது.

பரீட்சை வெற்றி தொடர்பான நிர்ப்பந்தங்கள் புலமைப் பரிசில் பரீட்சையுடன் நின்று விடுவதில்லை; க.பொ.த. (சா/தர) பரீட்சையை நோக்கி அது வரவர தீவிரமடைகின்றது. க.பொ.த. (உயர்தர) வகுப்பில் சேர்வதற்கு தகைமை பெறுவதற்கென க.பொ.த (சா/தர) பரீட்சையில் நல்ல தரங்களைப் பெறவேண்டியுள்ளது. க.பொ.த. (உ/தர) வகுப்பில் இந்த நெருக்குதல் உச்ச கட்டத்தை எட்டுகின்றது. இப் பரீட்சையில பெற்றுக் கொள்ளும் தரங்களின் அடிப்படையிலேயே பல்கலைக்கழக அனுமதி நிர்ணயிக்கப் படுகின்றது. இந்தப் பரீட்சை எந்த அளவுக்கு போட்டி மிக்கதாக இருந்து வருகின்றது என்பதனை இப்பரீட்சைக்கு தோற்றுவோரில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவோரின் விகிதத்தைக் கொண்டு நோக்க முடிகின்றது. உதாரணமாக, இலங்கையில் 1988 இல் க.பொ.த (உ/தர) பரீட்சைக்குத் தோற்றியவர்களில் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப் பட்டவர்களின் விகிதாசாரம் 3.65% மட்டுமே இருந்து வந்தது. இது கனடாவில் 62.2% மாகவும், ஆர்ஜன்டீனாவில் 40.8% மாகவும் பிலிப்பைன்ஸில் 28.1% மாகவும் இந்தியாவில் 6.4% மாகவும் பாகிஸ்தானில் 5.0% மாகவும் பங்களாதேஷில் 4.5% மாகவும் இருந்து வந்துள்ளது.

மாணவர்கள் க.பொ.த (சா/தர) மற்றும் க.பொ.த. (உ/தர) பரீட்சைகளுக்கு தயாராகும் வருடங்கள் டியூசன் காய்ச்சல் உச்சமட்டத்தில் நிலவி வரும் வருடங்களாக உள்ளன. இந்த நெருக்குதல்கள் மாணவர்களின் ஆளுமையின் மீது எடுத்து வரும் தாக்கங்களும் சிதைவுகளும் திரைப் படங்கள், நாடகங்கள், பரிசளிப்பு விழா உரைகள் மற்றும் பத்திரிகைக் கட்டுரைகள் என்பவற்றின் கருப் பொருளாக இருந்து வந்துள்ளது, ஆனால், இவை இந்த டியூசன் காய்சலை எந்த வகையிலும் குணப்படுத்தி இருப்பதாகத் தெரியவில்லை. பாடத் திட்டத்திற்கு வெளியிலான மாணவர்களின் குறிப்பிட்ட சில சாதனைகளும் பல்கலைக்கழக அனுமதியில் அவர்களுக்கு அனுகூலமளிக்கக்கூடியவையாக இருந்து வருவதனால், அந்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் கூட இப்பொழுது டியூசன் நடைமுறை வியாபித்துள்ளது.

இது எந்த அளவுக்கு தீவிரமடைந்துள்ளது என்றால், சமீபத்தில் பெற்றோர் ஒருவர், தனது மகள் பாடசாலையில் விளையாட்டுக்களின் தலைவியாக நியமிக்கப்படவில்லை எனக் கூறி முன்னணி மகளிர் பாடசாலை அதிபர் ஒருவருக்கு எதிராக மனித உரிமை மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இளம் பருவத்தினர் அனைவரும் இவ்வகையில் தாம் துன்புறுத்தப் படுவதனை விரும்புவது இல்லை. சிலரால் இத்தகைய கடுமையான போட்டியைத் தாக்குப்பிடிக்க முடிவதும் இல்லை. இதனை 1990 இல் 16-24 வயதுத் தொகுதியினரிடையே நிலவி வந்த உயர் அளவிலான தற்கொலை விகிதங்கள் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. பரீட்சையில் தோல்வி மற்றும் பெற்றோருடனான மோதல் என்பனவே இளைஞர்களின் தற்கொலைக்கான இரு பிரதான காரணிகளாக இருந்து வருகின்றன. தற்கொலை விகிதங்கள் பெண்களிலும் பார்க்க ஆண்களிடையே உயர்வாக இருந்து வருகின்றது (ஆண்கள் 76.2%, பெண்கள் 24.8%). பெற்றோர் தமது பெண் மக்கள் ஆண்மக்களைப் போலவே நலல முறையில் கல்வி பெறவேண்டும் என்று விரும்பினாலும் கூட, தந்தை வழிச் சமுதாயம் ஒன்றில் கல்விச் சாதனைகள் தொடர்பாக ஆண்பிள்ளைகள் மீது அதிகரித்த அளவிலான நிர்ப்பந்தங்கள் இருந்து வருகின்றன என்பதனை இதன் மூலம் அனுமானிக்கலாம்.

உயர் சாதனைகளுக்கான நிர்ப்பந்தம் தனியொரு சமூக வர்க்கத்திற்கோ அல்லது தொழில் சார் குழுவுக்கு மட்டுமோ வரையறுக்கப் பட்டிருக்கவில்லை. 1989/90 கல்வியாண்டு தொடர்பாக பல்கலைக் கழகங்களில் பிரவேசித்தவர்களின் பின்னணிகளை அவதானிக்கும் பொழுது இதனைக் கண்டு கொள்ள முடிகிறது.

**பாதுகாவலரின் தொழில்கள்**

**தொழிலின் சதவீதம்**

11.6 தொழில்சார் மற்றும் முகாமைப் பணியாளர்கள்

38.0 இலிகிதர் மற்றும் சம்பந்தப்பட்ட ஊழியர்கள்

8.5 விற்பனை மற்றும் சேவைத் துறை ஊழியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26.5 விவசாயம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள்

15.4 உற்பத்தி மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள்

அதே ஆண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கு 34,491 மாணவர்கள் தகைமை பெற்றிருந்தார்கள். ஆனால், அவர்களில் 6,463 (18.74%) பேர் மட்டுமே பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். மிகவும் வசதி படைத்த பெற்றோர் இத்தகைய நிலைமைகளை முன்கூட்டியே உணர்ந்து, அதற்கேற்ற விதத்தில் தமது பிள்ளைகளைத் தயார்ப்படுத்துகின்றார்கள். சர்வதேசப் பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்ப்பதன் மூலம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்கான வாய்ப்பினை அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். இத்தகைய சர்வதேசப் பாடசாலைகள், தேசிய கல்வியமைப்புக்கு வெளியே வர்த்தக முயற்சிகளாகப் பதிவு பெற்றுள்ள கம்பெனிகளால் நிர்வகிக்கப் பட்டு வருகிறது. எனவே, இலங்கையில் கல்வி ஒரு வெளிநாட்டு முதலீடாக உருவாவதற்கென இப்பொழுது கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. இது கலாசார ரீதியில் அந்நியமயமாதல் போன்ற பல வேண்டாத விளைவுகளை எடுத்து வர முடியும்.

தமது பிள்ளைகள் தொடர்பான பெற்றோரின் அபிலாஷை தெளிவான தாகும். தமது பிள்ளைகள் பல்கலைக்கழகத்தில் சேரவேண்டும் என அல்லது இலங்கையில் அதற்கு இணையான ஒரு கல்வியைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். ஆனால், சிறந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள மாணவர்களும் கூட தேசிய பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவது நிச்சயமற்றதாக இருந்து வருவதனாலும், நாட்டில் நிலவிவரும் கொந்தளிப்பு நிலைமை பல்கலைக்கழகங்களில் சீர்குலைவுகளை எடுத்து வருவதனாலும் ஓரளவுக்கு வசதிகளைக் கொண்டுள்ள பெற்றோர்களும் கூட, பல சிரமங் களுக்கு மத்தியில் தமது பிள்ளைகளை வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பவே விரும்புகின்றனர். இதனால், தொழில்சார் பிரிவுகளைச் சேர்ந்த பல பெற்றோர் வெளிநாடுகளில் தொழில் செய்வதன் மூலம் இத்தகைய செலவுகளை ஈடு செய்வதற்கு முயற்சிக்கின்றார்கள். இந்த நிலையில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் உலகின் பல்வேறு நாடுகளிலும் சிதறுண்டு வாழ வேண்டிய நிர்ப்பந்தம் நேரிடுகின்றது.

இதன் மற்றொரு தாக்கம், வெளிநாடு சென்று கல்வி கற்கும் மாணவர்களில் சிலர் தாம் கல்வி பயின்றுள்ள துறைக்குப் பொருத்தமான தொழில் வாய்ப்புக்கள் உள்நாட்டில் கிடைக்காது இருப்பதனால் அந் நாடுகளிலேயே தங்கி விடுகின்றனர் அல்லது தமக்குப் பொருத்தமான தொழில்கள் கிடைக்கக்கூடிய வேறு நாடுகளுக்கு அவர்கள் சென்று விடுகின்றார்கள். வெளிநாடுகளில் வேலை செய்யும் பிள்ளைகள் பெற்றோரின் முதுமைப் பருவத்தில் அவர்களுக்கு நிதி உதவிகளை வழங்க முடியும். ஆனால், ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் அந்நிய கலாசார சூழல்களில் வாழ்ந்து வரும் அவர்களால் தமது பெற்றோருக்கு அவசியமான உணர்வுபூர்வமான ஆதரவினை அளிக்க முடியாது.

போட்டி மிகுந்த கல்வி முறையின் மற்றொரு பின்விளைவு 1960 கள் தொடக்கம் எழுச்சியடைந்து வந்துள்ள இளைஞர் கொந்தளிப்பு நிலையாகும். இது கல்வியின் அனைத்து மட்டங்களிலும் குறிப்பாக பல்கலைக் கழகங்களில் கடுமையான சீர்குலைவுகளை எடுத்து வந்துள்ளது. இலங்கையில் 1987-1989 கால கட்டத்தில் இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது அதன் மாணவர் அணி சக்தி வாய்ந்த ஓர் கிளர்ச்சிக் குழுவாக செயற்பட்டு வந்தது. சிங்களப் பிரதேசங்களில் இயங்கி வந்த அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஜே.வி.பி. இயக்கம் மிகச் சக்தி வாய்ந்த மாணவர் குழுக்களை வைத்திருந்தது. அதன் விளைவாகத் தோன்றிய வன்முறைச் சம்பவங்களையடுத்து பல்கலைக்கழகங்களைப் புல மாத காலம் மூடவேண்டிய நிர்ப்பந்த நிலை தோன்றியது. நகர, கிராமப் பிரதேசங்களுக்கு இடையே கல்வி மூலவளங்களின் பகிர்வில் இடம் பெற்றிருந்த ஏற்றத்தாழ்வே இளைஞர் எழுச்சிக்கான ஒரு முக்கிய காரணமாக இருந்து வந்துள்ளது. இந்தப் பின்னணியில் கிராமியப் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் மிகவும் பிரதிகூலமான ஒரு நிலையில் இருந்து வந்தனர். 1971 கிளர்ச்சியின் பின்னர், கல்வி அடிப் படையில் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கும் நோக்கில் பல்கலைக்கழக அனுமதியில் ஒரு கோட்டா முறை அறிமுகம் செய்யப்பட்டது. இது அண்மைக்கால வரலாற்றில், இலங்கையினால் மேற்கொள்ளப்பட்ட அழிவு கரமான முடிவுகளில் ஒன்றாகும் என வர்ணிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, பல்கலைக்கழக அனுமதியில் ஏற்பட்ட பாரிய ஏற்றத்தாழ்வு அட்டவணை 1 மற்றும் 2 என்பவற்றில் தரப்பட்டுள்ளது. உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தும் கூட பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற முடியாதிருந்த மாணவர்களிடையே இது கடும் விரக்தியைத் தோற்றுவித்தது. தமிழ் மாணவர்களைப் புற மொதுக்குவதற்கென வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாக இது கருதப்பட்டமையினால் இனப் போராட்டம் தீவிரமடைவதற்கும் பங்களிப்புச் செய்துள்ளது என்றும் கூறப்படுகின்றது. இந்த நிலையில், வசதி உள்ளவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று கல்வி கற்க முடியும்; ஏனையவர்கள் விரக்தியும் கோபமும் கொண்ட ஒரு குழுவினராக இருந்து வருவார்கள்.

மாணவர் விரக்திக்குப் பங்களிப்புச் செய்த மற்றொரு காரணி ஆங்கிலத்தை ஒரு கருவி மொழியாக மாற்றுவதற்கும், சமூக அந்தஸ்தின் ஒரு சின்னம் என்ற முறையில் அதன் ஸ்தானத்தை இல்லாமல் செய்வதற்கும் என மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர் திருத்தங்கள் தோல்வி கண்டமை ஆகும். பல்கலைக்கழகங்களினால் மாணவர் களின் ஆங்கில அறிவினை மேம்படுத்து வதற்கென பல பாட நெறிகள் நடத்தப்பட்டு வந்த போதிலும் தேசிய மொழிகளில் கல்வி கற்ற மாணவர்களைப் பொறுத்தமட்டில், போதிய அளவுக்கு ஆங்கில அறிவின்மை தமது தொழில் முன்னேற்றத்திற்கான ஓர் இடையூறாக இருந்து வந்துள்ளது. இலங்கையில் 1978 இல் தாராளமயமாக் கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதை யடுத்து ஆங்கில மொழி அறிவுக்கான தேவை அதிகரித்தது. இது ஆங்கிலம் பேசாத பின்னணிகளில் இருந்து வந்த இளைஞர்களின் விரக்தி நிலையை மேலும் தீவிரப்படுத்தியது. அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1

**பல்கலைக்கழக அனுமதி 1988/89**[13]

| | (A) | (B) | (C) |
|---|---|---|---|
| | | | 80 புள்ளிகள் அல்லது / வினாப் பத்திரமொன்றுக்கு 20% |
| மருத்துவம் | 279 | 199 | |
| பல் மருத்துவம் | 275 | 196 | 79 " " " 19.75% |
| கால்நடை மருத்துவம் | 271 | 195 | 76 " " " 19% |
| விவசாயம் | 262 | 193 | 69 " " " 17.25% |
| உயிரியல் விஞ். | 248 | 182 | 66 " " " 16.5% |
| பொறியியல் I | 272 | 185 | 87 " " " 21.75% |
| பொறியியல் II | 265 | 192 | 73 " " " 18.25% |
| தொகை அளவை | 262 | 189 | 73 " " " 18.25% |
| கட்டடக் கலை | 224 | 190 | 34 " " " 8.5% |
| பௌதீக விஞ். | 219 | 180 | 39 " " " 9.75% |
| முகாமை | 263 | 220 | 43 " " " 10.75% |
| வர்த்தகம் | 247 | 203 | 44 " " " 11% |
| சட்டம் | 257 | 193 | 64 " " " 16% |
| Arts | 238 | 214 | 24 " " " 6% |

ஆதாரம் : திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

(A) விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்பட்ட உச்சமட்ட புள்ளிகள்
(B) விண்ணப்பதாரிகள் அனுமதிக்கப்பட்ட குறைந்தபட்ச புள்ளிகள்
(C) இரண்டுக்குமிடையிலான வித்தியாசம்

அட்டவணை 2

**பல்கலைக்கழக அனுமதி 1988/89**[14]

| | (A) பெறப்பட்ட ஆகக்கூடிய புள்ளிகள் | (B) மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட குறைந்தபட்ச புள்ளிகள் | (C) இரு மாறிகளுக்கும் இடையிலான இடைவெளி |
|---|---|---|---|
| | | | 154 புள்ளிகள் / வினாப் பத்திரமொன்றுக்கு 38.50% |
| மருத்துவம் | 353 | 199 | |
| பல் மருத்துவம் | 279 | 196 | 83 " " 20.75% |
| கால்நடை மருத்துவம் | 278 | 195 | 83 " " 20.75% |
| விவசாயம் | 283 | 193 | 90 " " 22.50% |
| உயிரியல் விஞ். | 279 | 182 | 97 " " 24.25% |
| பொறியியல் I | 376 | 185 | 191 " " 47.75% |
| பொறியியல் II | 297 | 192 | 105 " " 26.25% |
| தொகை அளவை | 265 | 189 | 76 " " 19.00% |
| கட்டடக் கலை | 270 | 190 | 80 " " 20.00% |
| பௌதீக விஞ். | 315 | 180 | 135 " " 33.75% |
| முகாமை | 327 | 220 | 107 " " 26.75% |
| வர்த்தகம் | 274 | 203 | 71 " " 17.75% |
| சட்டம் | 340 | 193 | 147 " " 36.75% |
| Arts | 322 | 214 | 108 " " 27.00% |

ஆதாரம் : திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு


ரீதியான சீராக்கல் கொள்கைகளின் அமுலாக்கமும் அதன் விளைவாகப் பொதுத்துறையின் வேலை வாய்ப்புக்கள் சுருக்கமடைந்து சென்றமையும் குறைந்த மட்டத்தில் ஆங்கில அறிவைப் பெற்றிருந்த பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு மூலங்களை குறைவடையச் செய்தன. நல்ல ஆங்கில அறிவு அவசியமாக இருந்த தனியார் துறை வேலை வாய்ப்புக்களின் பெருக்கம் ஆங்கிலம் கற்றவர்களுக்கும் ஆங்கிலம் கல்லாதவர்களுக்கும் இடையிலான பிளவினை மேலும் தீவிரப்படுத்தியது.

பட்டம் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் குடும்ப வாழ்க்கையில் பல பின்விளைவுகளை எடுத்து வந்தது. இது பெற்றோரின் தலைமையை அதிகரிப்பதுடன் நீடிக்கவும் செய்கிறது. மாணவர்கள் வயது முதிர்ந்தவர்களாக இருந்த போதிலும் முழு சுதந்திரத்தினையும் வேலை வாய்ப்பினையும் திருமண வாழ்க்கையையும் அனுபவிப்பதற்கு தயார் நிலையில் இல்லாவர்களாக உள்ளனர். பொதுவாப 17-28 வரையான வயதுப் பிரிவு பாலியல் உணர்வு அதன் உச்சத்தில் இருந்து வரும் பருவமாகக் கருதப்படுகின்றது. எனவே, இந்த நிலையில் திருமண வாழ்க்கையில் பிரவேசிக்கும் வாய்ப்பு தாமதமடையும் போது (திருமணமாகாமலேயே) இடம் பெறக்கூடிய பாலுறவுகள் அதிகரிக்க முடியும். இது நீண்ட கால குடும்ப விழுமியங்களையும் பாரம்பரியங்களையும் சீர்குலைக்க முடியும்.

கடந்த இரு தசாப்த காலமாக அவதானிக்கப்பட்டு வந்துள்ள ஒரு சிறப்பம்சம அதிகரித்த எண்ணிக்கையிலான பெண்கள் வீட்டுப் பணிப் பெண்களாக வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்து செல்வதாகும். 1994 இல் இவ்விதமாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு ஊடாக சென்றவர்களின் எண்ணிக்கை மட்டும் 36,105 ஆக இருந்தது. இந்தப் பெண்கள் இவ்விதம் தமது வீட்டுச் சூழலில் இருந்து வெளியே செல்வதற்கு உந்தித் தள்ளிய காரணிகள் குறித்து கண்டறிவதற்கென பாரிய ஆய்வுகள் எவையும் மேற் கொள்ளப்படவில்லை. ஆனால், ஒரு சில நுண்மட்ட ஆய்வுகள், இத்தகைய பெண்கள் வறிய சமூகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக உள்ளனர் என்பதையும், வாழ்க்கைப் போராட்டத்தின் நிர்ப்பந்தங்கள் காரணமாக வெளிநாடுகளுக்கு தொழில் புரிய செல்கின்றார்கள் என்பதனையும் எடுத்துக் காட்டியுள்ளன.

இவ்விதம் வெளிநாடு செல்பவர்களில், பிள்ளைகளைக் கல்வியூட்டுவதற்கென தமது சம்பாத்தியங்களை உபயோகித்துக் கொள்வோர் 5 17% வரையில் உள்ளனர். இத்தகைய குடியகல்வின் சமூகச் செலவுகளும் குடும்ப வாழ்க்கையின் மீது அது எடுத்துவரும் தாக்கங்களும் மிகவும் பாரதூரமானவையாகும். ஆனால், கல்வியமைப்பின் கடுமையான போட்டி இயல்பின் காரணமாகவே இந்நிலை தோன்றியுள்ளது எனக் கூறமுடியாது. வீட்டுப் பணிப் பெண்களாக வெளிநாடு செல்லும் பெண்களில் பெரும்பான்மையினர் கல்வி குறித்து சிந்திப்பதற்கு முன்னர், தமது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள வேண்டியவர்களாக இருந்து வருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய இலங்கையில் திருமண உறவு

ஆன் அபேசேகர

இலங்கையில் திருமணம் என்ற நிறுவனத்தின் நிலையை சரியாக எடுத்துக் காட்டுவதற்கான புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. எனினும், திருமண முறிவு விகிதங்கள் உயர் அளவில் இருந்து வருகின்றன என்பதனை வழக்கறிஞர்களும் ஆலோசனை உதவி வழங்குபவர்களும் சமூகப் பணியாளர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள். முன்னெப்பொழுதும் இருந்திராத அளவில் உயர் எண்ணிக்கையிலான தம்பதியர் இப்பொழுது விவாகரத்துக்களை மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இன்னமும் திருமண பந்தத்திற்குள்ளேயே நிலைத்து இருப்பவர்களில் ஒருசிலரும் கூட, ஒருவர் பால் ஒருவர் ஏமாற்றமடைந்து இருந்த போதிலும் தமது பிள்ளைகளுக்காக அல்லது வேறு ஏதேனும் சொந்தக் காரணங்களுக்காக அவ்வாறு இருந்து வருகின்றனர். தமது பெற்றோருக்கு இடையே பகிரங்கமாக நிலவி வரும் மோதல் நிலை காரணமாக பெருந்தொகையான இலங்கைச் சிறுவர்கள் துன்பம் மிகுந்த ஒரு வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர்.

திருமணங்கள் அதிகரித்த அளவில் முறிவடைந்து வருவதற்கான காரணங்களை கண்டறிவதற்கு சமூகவியலாளர்களின் ஆய்வுப் பணி அவசியமாக உள்ளது. என்னைப் பொறுத்தமட்டில், ஒரு குடும்ப ஆலோசகர் என்ற வரையறைக்குள் நின்று நான் இத்துறையில் பெற்றுள்ள அனுபவங்களின் அடிப்படையிலேயே தற்போதைய திருமண உறவுகள் குறித்து இங்கு கருத்துத் தெரிவிக்க முடியும். பெருந்தொகையானோர் இப்பொழுது (வேறு வகையைச் சேர்ந்த பிரச்சினையிலும் பார்க்க) மண வாழ்க்கை தொடர்பான பிரச்சினைகள் குறித்தே ஆலோசனை முகவரங்களில் இருந்து உதவியைக் கோரி வருகின்றார்கள். இன்றைய தம்பதியினர், முன்னைய தலைமுறைகளில் வாழ்ந்து வந்த தம்பதியினரிலும் பார்க்க பெருமளவுக்கு மன உளைச்சல்களையும் நெருக்குதல்களையும் சந்தித்து வருகின்றார்கள். இப் பிரச்சினைகளில் முதன்மையானது நிதி தொடர்பான பிரச்சினையாகும். செல்வந்தர்களைத் தவிர ஏனைய அனைவரும் இப் பிரச்சினையை ஏதோ ஒரு வடிவில் எதிர்கொண்டு வருகின்றார்கள். அடுத்தது வீட்டுப் பிரச்சினையாகும். அண்மையில் திருமணமாகிய எனக்குத் தெரிந்த ஒரு தம்பதி கொழும்புக்கு வெளியே ஒரு வீட்டை அல்லது ஒரு சிறு வீட்டு இணைப்பினைத் தேடுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டார்கள். இறுதியில் ஓர் அடுக்குமாடி வீட்டில் ரூபா 8000/- மாத வாடகையில் அவர்களுக்கு ஓர் இருப்பிடம் கிடைத்தது. ஒரு வருடத்திற்கான வாடகையை அவர்கள் முற்பணமாகச் செலுத்த வேண்டி இருந்தது. மாத வருமானத்தில் இவ்விதமாக ஒரு பெரிய தொகையை வாடகைக்கென செலவிட வேண்டி இருப்பதுடன், வாழ்க்கைச் செலவுகளும் இடையறாது அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில், மனைவி (ஏற்கனவே தொழில் புரிபவராக இல்லாவிட்டால்) தொழில் ஒன்றைத் தேடிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இருவரும் காலையில் அவசர அவசரமாக வேலைக்குச் செல்கின்றார்கள். நெருக்கடி மிகுந்த எமது பொதுப் போக்குவரத்து முறையில் அவர்கள் அனுபவிக்க வேண்டி இருக்கும் இன்னல்களை இங்கு எடுத்து விளக்க வேண்டிய அவசியமில்லை. இந்த நிர்ப்பந்தங்களின் விளைவாக அவர்கள் எளிதில் கோபப்படக் கூடியவர்களாகவும் ஒரு விதமான எரிச்சல் உணர்வினைக் கொண்டவர்களாகவும் மாறி விடுகின்றனர்.

கணவனும் மனைவியும் வகிக்கும் பாத்திரங்கள் இப்பொழுது தெளிவாக தனித்தனியாக வரையறுக்கப்பட்டிருக்க வில்லை. அவர்களில் பெரும்பாலானவர்கள் வேலைக்குச் செல்பவர்களாக உள்ளார்கள். ஆனால், வீட்டில் சமத்துவம் மிக அரிதாகவே காணப்படுகிறது. சமையல் வேலை, பாத்திரங்களைக் கழுவுதல், ஆடைகளைச் சலவை செய்தல் மற்றும் குழந்தை வளர்ப்பு போன்ற பணிகள் பொதுவாகப் பெண்களைச் சார்ந்த பணிகளாகவே கருதப்படுகின்றன. 'அவர் எந்த ஒரு உதவியையும் செய்வதில்லை என்ற வகையில் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதனை நான் அடிக்கடி கேட்டிருக்கின்றேன். ஆண் ஓரளவுக்கு கல்வி அறிவும் புரிந்துணர்வும் கொண்டவராக இருந்து, வீட்டு வேலைகளை தனது மனைவியுடன் பகிர்ந்து கொள்ளக் கூடியவராக இருந்துவரும் சந்தர்ப்பங்களிலும் கூட சில காலத்தின் பின்னர் நிலைமை மோசமான விதத்தில் மாற்றமடைய முடியும்.

வேலைக்குச் செல்லும் மனைவி/தாய் ஒரு புதிய எதிர்பார்ப்பினையும் கொண்டுள்ளார். அவள் வீட்டுக்கு நிதிசார் ரீதியில் ஒரு பங்களிப்பினை வழங்குகிறாள். நாளின் முடிவில் கணவனைப் போலவே மனைவியும் களைப்புற்ற நிலையில் வீடு திரும்புகிறாள். இந்த நிலையில், கணவன் சாவகசமாக தொலைக் காட்சியின் முன் அமர்ந்து, மனைவி தனக்குத் தேனீரும் உணவும் தயாரிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது எந்த விதத்திலும் நியாயமாகாது. ஓரளவுக்கு விட்டுக் கொடுத்தால், தான் வகிக்க வேண்டி இருக்கும் பாத்திரம் தலைகீழாகிவிடும் எனக் கணவன் அஞ்சுகின்றான். இத்தகைய முரண்பாடுகள் திருமண பந்தம் ஒன்றை முறிவு நிலைக்குத் தள்ளிவிட முடியும். மனந்திறந்து நட்புறவுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கூடாக மட்டுமே இப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வாய்ப்புக் கிட்டும்.

திருமணமானவர்கள் ஒருவருக்கு ஒருவர் துரோகம் செய்வது ஒரு புதிய விடயமல்ல. ஆனால், இன்றைய நவீன பெண்ணைப் பொறுத்தமட்டில் இது அடிக்கடி இடம் பெற்றுவரக்கூடிய ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தை மாதிரியாகத் தென்படுகிறது. கணவனுக்குத் துரோகம் செய்யக்கூடிய மனைவிமார் நிறைய உள்ளனர். ஆனால், பொதுவாக நோக்கும்பொழுது பெண்களிலும் பார்க்க ஆண்களே திருமண பந்தத்தின் புனிதத்தை அதிக அளவில் பொருட்படுத்தாதவர்களாக இருந்து வருகின்றனர். எனது 21 வருட காலக் குடும்ப ஆலோசனை அனுபவத்தில் இரு தடவைகள் மட்டுமே மனைவிமாரின் நடத்தையினால் வேதனையுற்றிருந்த ஆண்களை சந்தித்துள்ளேன். அநேகமாக ஒவ்வொரு வாரமும் தமது கணவர்மார் முக்கோண காதல் பிரச்சனை ஒன்றை உருவாக்கியுள்ளார்கள் என முறையிடும் பெண்களை நான் சந்திக்கின்றேன். இந்த விடயத்தை அவ்வளவு தூரம் பெரிது படுத்தவேண்டிய அவசியம் இல்லை என்ற மனப்போக்கிலேயே சம்பந்தப் பட்ட ஆண்கள் நடந்து கொள்கின்றனர். சிலர் ஆலோசனை மையங்களுக்கு தமது மனைவிமாருடன் வருகின்றனர். "நான் என்மனைவிக்கு அனைத்து வசதிகளையும் வழங்கியுள்ளேன்; அவள் நல்லமுறையில் வாழ்ந்து வருகின்றாள். நான் குறை எதுவும் வைக்கவில்லை. எனவே, அவள் முறைப்பாடு செய்யவேண்டிய அவசியம் எதுவும் இல்லை" என்று அவர்கள் சாதாரணமாகக் கூறிவிடுகிறார்கள். திருமணம் என்பது, பிரத்தியேகமாக ஒருவனுக்கு ஒருத்தி என்ற உறவின் அடிப்படையில் இருந்து வரவேண்டும் என ஒரு பெண் கருதுவது நியாயமற்றது என இவர்கள் நினைக்கிறார்கள். இங்கு இன்னொரு விடயத்தையும் நான் சுட்டிக்காட்ட வேண்டும். வேலைக்குச் செல்லும் பெண்களைப் பொறுத்தமட்டில் பிற ஆடவருடன் நெருங்கிப் பழகுவதற்கு அவர்களுக்கு நிறைய சந்தர்ப்பங்கள் கிட்டுகின்றன. இந்த நிலையில், ஒரு சிலர் இரகசியமான காதல் விவகாரங்களை வைத்துக் கொள்வதற்கும் தூண்டப்படுகின்றனர். திருமணத்திற்கு வெளியிலான பாலுறவு இப்பொழுது அதிகரித்து வருவது போல் தோன்றுகிறது. இது குறித்த பழைய தடைகள், இத்தகைய உறவில் ஈடுபட்டு வரும் சிறு எண்ணிக்கையிலான பெண்களைத் தடுத்து நிறுத்தியிருப் பதாகத் தெரியவில்லை.

மதுப் பழக்கம், மண வாழ்க்கையில் பெருமளவுக்கு துன்பத்தை எடுத்துவரும் ஒரு விடயமாக இருந்து வருகின்றது. அநேகமாக இது சமூகத்தின் முதன்மையான தொல்லை யாக காணப்படுகின்றது. இரகசியமாக மதுப் பழக்கத்தில் ஈடுபட்டுள்ள ஓரிரு பெண்கள் இருக்க முடியும்; ஆனால், இலங்கையைப் பொறுத்தமட்டில் பெண்களிலும் பார்க்க ஆண்களே அதிகளவுக்கு மதுப் பழக்கத்திற்கு அடிமையாகி வருகின்றனர். ஆனால், பெருந் தொகையான மனைவிமார் இந்தப் பிரச்சினைக்கு மத்தியில் எப்படியோ சமாளித்து, மிகவும் கடினமான சூழ்நிலைகளில் குடும்பத்தைப் பிரியவிடாது பாதுகாத்து வருவதனைக் காண முடிகிறது. மதுப் பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ் வளிக்கும் 'மெல் மதுர' நிலையத்தின் ஒரு பணிப்பாளர், இந்தப் பிரச்சினைக்கு மத்தியிலும் திருமண பந்தத்தை தொடர்ந்து வைத்து இருக்கும் மனைவி மார் குறித்து தான் வியப்படைவதாக ஒருமுறை கூறினார்.

அண்மைக்காலத்தில், "Women - In-Need" என்ற அரசு சாரா அமைப்பு கணவர்களினால் துன்புறுத்தப்படும் மனைவிமாருக்கு உதவவென உருவாக்கப்பட்டுள்ளது. இது அத்தகைய கணவர்களுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்கு கிறது. மனைவிமாரை அடித்துத் துன்புறுத்தும் பழக்கம் அநேகமாக சமூகத்தின் அனைத்து பிரிவின ரிடையேயும் நிலவி வரும் ஒரு இரகசியமான பழக்கமாகும். அது இந்த அமைப்பின் ஸ்தாபிதத்துடன் முதல் தடவையாக அம்பலத்திற்கு வந்துள்ளது. இப்பொழுது மனைவிமார் இந்த அவலம் தொடர்பாக வெளியில் வந்து சொல்லக்கூடிய துணிச்சலைப் பெற்றி ருப்பதனால், கணவர்கள் சற்று பின்வாங்க வேண்டிய ஒரு நிலை தோன்றியுள்ளது. பொலிஸ் நிலையங்களில் மகளிரின் முறைப்பாடு களைப் பதிவு செய்து அவற்றிற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவென பயிற்றப்பட்ட மகளிர் பொலிசாரைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள பிரிவுகளும் பெருமளவுக்கு பயனுள் ளவையாகும். தொடர்பு சாதனங்களும் இப்பொழுது இந்த விடயம் தொடர்பாக பெருமளவுக்கு கவனம் செலுத்தி வருகின்றன. தமது கணவர்மாரிடம் இருந்து தாம் தொடர்ந்தும் அடி, உதைகளை வாங்கிக்கொண்டு மௌனமாக வாழ்ந்து வர வேண்டிய அவசியம் இல்லை என்பதனைப் பெருந்தொகையான பெண்கள் இப்பொழுது உணரத் தொடங்கி உள்ளார்கள். ஆனால், இன்னமும் கூட, ஒரு சில பெண்கள் தமது கணவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் பயந்து இந்த அநியாயங்களை வெளியில் சொல்லாது வாளாவிருக்கின்றனர். "நான் ஒரு தப்பு செய்துவிட்டேன்; அதனால் என்னை அடிப்பதற்கு அவருக்கு உரிமை உள்ளது" என கிராமத்துப் பெண்கள் அடிக்கடி கூறுகின்றார்கள் என ஓர் குடும்ப நல ஆலோசகர் என்னிடம் தெரிவித்தார்.

மாமியார் உபத்திரவம் பொதுவாக உலகெங்கிலும் நன்கு அறியப்பட்டுள்ள ஒரு விடயமாகும். ஆனால், இலங்கையைப் பொறுத்த மட்டில் தமது பிள்ளைகளின் திருமணத்தில் குறிப்பாக, ஆண்பிள்ளை களின் திருமணத்தில் மாமியாரின் செல்வாக்கு எந்த அளவுக்கு உயர் அளவில் இருந்து வருகின்றது என்பது வியப்பூட்டக்கூடிய ஒரு விடயமாகும். பெருந்தொகையான ஆண்கள் தமது தாய்மாருடன் நெருக்கமான ஒர பாசப் பிணைப்பைக் கொண்டுள்ளார்கள். இதன் காரணமாக, தமது தாய்மார் தவறு செய்யும் பொழுது கூட அதற்கு எதிராக வாய் திறக்கும் திராணி இவர்களிடம் இருப்பதில்லை. கணவன் தனது மனைவிக்கும் தாய்க்கும் இடையில் நின்று திண்டாட வேண்டிய நிலைமை கள் அடிக்கடி தோன்றுகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், தனது தாய்க்குச் சார்பாகவே அவன் நடந்து கொள்கின்றான். 'அவள் என்னுடைய் தாய்; நீண்ட காலம் அவள் வாழப்போவதும் இல்லை. எனது மனைவி அவளுடன் ஏன் சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்ளக்கூடாது' என்பதே இத்தகைய கணவர்களின் எண்ணப் போக்காக உள்ளது.

மற்றொரு புதிய பிரச்சினை வாழக்கை ஏணியில் உச்சத்திற்குச் சென்றுவிடத் துடிக்கும் இளம் அதிகாரிகள் தொடர்பான பிரச்சினை யாகும். இதன் காரணமாக இத்தகைய வர்களுக்கு தமது குடும்பத்தின் மீது செலவிடுவதற்கு போதியளவில் நேரம் கிடைப்பதில்லை. தமது மனைவி மாருக்கு எத்தகைய குறைகளும் இல்லையென அவர்கள் பொதுவாக நினைக்கிறார்கள். "குடும்பத்திற்குப் பல சொகுசுகளை நான் வழங்கியுள்ளேன்.


( 15 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடி நிலையில் குடும்பம்

டாக்டர் நந்தனி டி சில்வா



குடும்பம் ஒரு சமூக அலகு என்ற முறையில் உணர்வுபூர்வமான பிணைப்புக்கள், ஒரு வரலாறு மற்றும் ஓர் எதிர்காலம் என்பவற்றைப்பகிர்ந்து கொள்ளும் தனி நபர்களின் குழு ஒன்றைக் கொண்டதாக இருந்து வருகிது. குடும்பக் கட்டமைப்பு ஒவ்வொரு குடும்பம் தொடர்பாகவும் வேறுபட்டதாக இருந்து வர முடியும்; ஆனால், குடும்பத்தின் செய்ற்பாடுகள் ஒரே விதமானவையாகவே உள்ளன. கணவன், மனைவி மற்றும் பிள்ளைகள் (அல்லது பிள்ளைகள் இல்லாத தம்பதியினர்) என்போரைக் கொண்ட தனிக் குடும்பமும் பாட்டன், பாட்டி, மாமா அல்லது மாமி போன்றோரை உள்ளடக்கிய விஸ்தரிக்கப்பட்ட குடும்பமும் இலங்கையில் பொதுவாகக் காணப்படுகின்றது. இவை பாரம்பரிய குடும்ப அமைப்புக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. ஆனால், மேலைத் தேச சமூகங்களில் இத்தகைய பாரம்பரியக் குடும்பங்களைக் காண்பது மிக அரிதாகும். உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவில் 1991 இல் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு, தமது பிள்ளைகளுடன் வாழும் திருமணமான தம்பதியினர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட குடும்ப்பங்களில் 26% மான குடும்பங்களில் மட்டுமே இருந்து வந்தனர் என்பதை சுட்டிக் காட்டியது. பாரம்பரியக் குடும்பம் என்ற விதிமுறைக்கு உட்படாதவர்க்ள், திருமணமாகாமல் சேர்ந்து வாழும் தம்பதியினர் அல்லது தனியாக வாழ்ந்து வந்த வயது வந்தவர்கள் அல்லது ஓர் இரு பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த தனியொரு பெற்றோர் என பெரும்பாலாளவர்கள் இருந்து வந்தனர்.

குடும்பத்தின் கட்டமைப்பு என்னவாக இருந்த போதிலும், அது சில அடிப்படை கருமங்களை நிறைவு செய்து வருகின்றது. பாதுகாப்பு, உயிர் வாழ்க்கை, பிள்ளைகளை சமூகமயப் படுத்தல், ஆதரவு மற்றும் போஷித்து வளர்த்தல், பாலுறவுகளின் சட்டபூர்வத் தன்மை, மகப்பேறு, சமூக மற்றும் பொருளாதாரத தாபனம் என்பன இத்தகைய கருமங்களாகும்.

ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் சீவனோபாயத்திற்கான பங்கினை வகித்து வரும் தந்தை, வீட்டுப் பராமரிப்புப் பங்கினை வகித்து வரும் தாய் ஆகியோர் குறிப்பிட்ட சில பாத்திரங்களை வகிக்க வேண்டும் என்றும் பொதுவாக எதிர்பார்க்கப் படுகின்றது. அண்மைக் காலங்களில் இத்தகைய பாரம்பரிய பாத்திரங்கள் குறிப்பாக மேலைய சமூகங்களில் பொதுவாக மாற்றம் கண்டு வந்துள்ளன. சில சந்தர்ப்பங்களில் இந்த அமைப்பில் தலைகீழ் மாற்றங்களைக் கூட அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அதாவது, கணவர் வீட்டைக் கவனித்துக் கொள்ளும் பொழுது மனைவி வெளியில் சென்று தொழில் பார்க்கும் சந்தர்ப்பங்கள் பல தோன்றியுள்ளன. இலங்கையிலும் கூட, குடும்ப வருமானத்திற்கு குறைநிரப்புச் செய்யும் பொருட்டு பெண்கள் வெளியில் சென்று தொழில்புரியத் தொடங்கியுள்ளார்கள். குறிப்பாக, வளமான வருங்காலத்தைக் கருத்தில் கொண்டு தாய்மார் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் பொழுது ஒன்றில் கணவர் வீட்டில் நின்று பிள்ளைகளைப் பார்த்துக்கொள்கின்றார். அல்லது மாமியொருவரோ பாட்டியோ தாய்க்குப் பதிலாக அந்தக் குடும்பத்தின் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்கிறார்.

உறுதியான குடும்பம் ஒன்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் பல்வேறு விதமான உளைச்சல்களையும் நெருக்குதல்களையும் எதிர்கொள்ளும் பொழுது அக்குடும்பம் செயலிழக்கத் தொடங்கி விடுகின்றது. ஒரு குடும்பம் எதிர்நோக்கும் இத்தகைய மன உளைச்சல்கள் குடும்ப வாழ்க்கைச் சுழற்சியின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தைச் சேர்ந்தவையாகவோ அல்லது எதிர்பாராத சம்பவங்களின் விளைவுகளாகவோ இருக்க முடியும். குடும்ப வாழ்க்கைச் சுற்றுவட்டத்தில் பல்வேறு கட்டங்களிலும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சாதாரணமான உளைச்சல்கள் புதிதாக மணமான தம்பதியினர் திருமண வாழ்க்கைக்கு அனுசரித்துச் செல்வது தொடக்கம் பெற்றோருடன் முரண்படத் தொடங்கும் இளம் பருவத்தினரை சமாளித்தல் மற்றும் ஓய்வு பெற்ற நடுத்தர வயதினர் எதிர்நோக்கும் தனிமை என்பன வரையில் வேறுபட்டுச் செல்கின்றன. பிரிவு, மணவிலக்கு, நோய் அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவரின் மரணம், வேலை இழப்பு, நிதி நெருக்கடிகள், குடும்ப உறுப்பினர் ஒருவர் வெளிநாடு செல்லல் போன்ற நிகழ்வுகள் எந்த ஒரு குடும்பத்திற்கும் எந்த ஒரு நேரத்திலும் நேரிடலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் இந்நிலைமைகளை சமாளித்துக் கொள்ளும் இக்குடும்பங்களின் ஆற்றல் சம்பந்தப்பட்ட குடும்ப உறுப்பினர்களின் ஆளுமை, மன உறுதி, பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக ஒருவருடன் ஒருவர் தொடர்பாடும் திறன், கிடைக்கக் கூடியதாக இருக்கும் நிதி மற்றும் ஏனைய மூலவளங்கள், குடும்பத்தில் இருந்தும் நண்பர்களில் இருந்தும் கிட்டும் ஆதரவு என்பவற்றிலேயே தங்கியுள்ளது. இதனை வெற்றிகரமாக சமாளிக்க முடியாதவிடத்து குடும்பத்தில் ஒரு நெருக்கடி நிலை தோன்றுகின்றது.

## குடும்பத்தில் நெருக்கடி

நெருக்கடிகளை எதிர்கொள்ளும் குடும்பங்கள் மன உளைச்சல், தவிப்பு, உளவியல் சிதைவுகள் போன்ற பல பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியும். அது மட்டுமன்றி ஆஸ்துமா, குடல் நோய்கள் போன்ற சுகாதாரப் பிரச்சினைகளும் தோன்ற முடியும். சிறுவர்களிடையே படுக்கையில் சிறுநீர் கழித்தல், பயப் பிராந்தி போன்ற பிரச்சினைகள் உருவாகும். மதுப் பழக்கம், போதை வஸ்துப் பாவனை மற்றும் குடும்ப வன்முறை என்பன நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கும் இளைஞர்கள் மற்றும் வயது முதிர்ந்தோர் என்போரிடையே காணப் படும் சில சமூகப் பிரச்சினைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, நெருக்குதல் களை எதிர்நோக்கி இருக்கும் குடும்பங் களில் உயர் அளவில் நோய்வாய்ப்படும் தன்மை பொதுவாக நிலவி வருகின்றது. இந்த நோய்வாய்ப்படும் தன்மையின் அதிகரிப்புடன் இணைந்த விதத்தில் மருத்துவச் செலவுகளும் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில், பாதிப்புற்றிருக்கும் குடும்பங்களுக்கு மிகப் பொருத்தமான சிகிச்சையை அளிக்கக்கூடிய மருத்துவ நிபுணர் யார் என்ற கேள்வியும் எழுகின்றது.

நெருக்கடிகளை எதிர் கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு மருத்துவ உதவிகளையும் ஆதரவுச் சேவைகளையும் வழங்குவதற்கு (ஒரு குடும்ப சூழ்நிலைக்குள் தனி நபர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் பயிற்சி பெற்றுள்ள) ஒரு மருத்துவர் அவசியப் படுகிறார். சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ள மருத்துவ நிபுணர்கள் தாம் தேர்ச்சி பெற்றுள்ள துறையில் மட்டுமே நியுணத்துவம் பெற்றுள்ளார்கள். ஆனால்; குடும்ப மருத்துவர்கள் பல்வேறு நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கும் பொழுது குடும்பத்தைக் கருத்தில் கொண்டே சிகிச்சை அளிக்கின்றார்கள். எனவே, இந்த வகையில், நெருக்குதல்களை எதிர் கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு குடும்ப மருத்துவர்கள் மிகவும் பொருத்த மானவர்கள் ஆவார்கள்.

நோய் தொற்றுக்கள், மரபியல் அம்சங்கள் மற்றும் சுற்றுச் சூழல் அம்சங்கள் என்பன நோய்களை எடுத்துவரும் முக்கியமான கூறுகளாக உள்ளன. எனினும், இந்த விடயத்தில் குடும்ப நடைமுறைகள், உளவியல் காரணிகள் என்பனவும் நோய்களை எடுத்து வருவதில் ஒரு முக்கிய பங்கினை வகித்து வருகின்றன. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குடும்ப மருத்துவ ஆலோசனைகளில் சுமார் 15 35% வரையான ஆலோசனைகள் உளவியல் பிரச்சினைகள் காரணமாகவே ஏற்படுகின்றன என்பதனைக் காட்டுகின்றன. இத்தகைய நோய்களுக்கு மருந்துகள் மட்டுமன்றி ஆலோசனைச் சேவையும் உளவியல் ஆதரவு சிகிச்சையும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

சமூகத்தில் குடும்ப மருத்துவப் பராமரிப்பு குடும்ப மருத்துவர்களாலேயே வழங்கப்படுதல் வேண்டும்; ஏனெனில், இப்பங்கினை சரியான முறையில் வகிப்பதற்கு அவர்கள் தகுதி பெற்றுள்ளார்கள். தனி நபர்களும் குடும்பங்களும் தம்மைப் பாதித்து வரும் பெரும்பாலான மருத்துவப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு நன்கு பயிற்றப்பட்ட குடும்ப மருத்துவர்களின் தேவை முன்னொரு போதும் இல்லாத அளவில் இப்பொழுது அதிகரித் துள்ளது. இந்த விடயம் 1994 இல் உலக சுகாதார நிறுவனத்தினாலும் குடும்ப மருத்துவர்களின் உலக அமைப்பினாலும் அறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. குடும்ப மருத்துவர்களினால் அல்லது பொது மருத்துவர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் குடும்ப மருத்துவம் / பொது மருத்துவம் ஒருங்கிணைக்கப்பட்ட முழுமையான மருத்துவப் பராமரிப்பினை வழங்குவதில் அக்கறை கொண்டுள்ளது. மேலும், அது சமூகத்தில் வாழும் தனி நபர்களுக்கும் குடும்பங்களுக்கும் தனிப்பட்ட அடிப்படையில் மனிதாபிமான ரீதியில் வழங்கப்பட்டு வருகிறது. இங்கு ஒரு நோயாளியின் முழுமை அதாவது, நோயாளியின் உடல் கூறுமட்டுமன்றி உளவியல் மற்றும் சமூக அம்சங்களும் கூட கவனத்தில் எடுக்கப்படுகின்றது. நன்கு பயிற்றப் பட்ட ஒரு குடும்ப மருத்துவர் குறைந்த செலவில் ஒரு சில விசாரிப்புக்களின் பின்னர் நோயாளிக்கு சிகிச்சை அளிக்க முடியும். அவருடைய சிகிச்சை முறை நோயாளியின் குடும்பம், நிதி நிலை, விட்டு மற்றும் வேலைச் சூழல் என்பவற்றிற்கு பொருந்தக் கூடியதாகவும் அமையும். நோயாளி மிகவும் தீவிரமான ஒரு நோய்க் கூறினைக் கொண்டிருந்தால் அவரை குடும்ப மருத்துவர் ஒரு மருத்துவ நிபுணரின் சிகிச்சைக்கென அனுப்பி வைக்கலாம்; இச் சந்தர்ப்பத்திலும் கூட, நோயாளியின் பராமரிப்பைக் குடும்ப மருத்துவரே ஒருங்கிணைக்க வேண்டும்.

ஒரு குடும்ப மருத்துவர் இப்பணிகளை மேற்கொள்வதற்கென போதிய அளவில் பயிற்றுவிக்கப்படுதல் அவசியமாகும். இது மருத்துவக் கல்லூரியில் ஆரம்பித்து பட்டப் பின் படிப்பு மட்டம் வரையில் தொடர்ந்து இடம் பெற வேண்டும். மருத்துவக் கல்லூரிகள் நோயாளிகளில் ஒரு சிறு பிரிவினர் தொடர்பாக மட்டுமே கவனத் செலுத்தும் உயர் தொழில்நுட்ப மருத்துவமனை வைத்தியத்தில் மட்டுமே பெருமளவுக்கு கவனம் செலுத்தி வருவது கவலைக்குரிய ஒரு விடயமாகும். ஐக்கிய இராச்சியத்திலும் ஐக்கிய அமெரிக்காவிலும் 1961 இல் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில், குறிப்பிட்ட ஒரு மாதத்தில் 16 வயதுக்கு மேற்பட்ட 1000 பேரில், 750 பேர் நோய்க் குறிகளை அவதானித்து உள்ளனர் என்றும், இவர்களில் 250 பேர் மட்டுமே ஒரு மருத்துவரை சந்தித்துள்ளனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இந்த 250 பேரில் 235 பேர் குடும்ப மருத்துவரையே சந்தித்து உள்ளனர்; 09 பேர் பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட துடன், ஐவர் மருத்துவ நிபுணர்களைக் கலந்தாலோசித்தனர். ஒருவர் மட்டுமே (மருத்துவ மாணவர்கள் தமது பயிற்சியில் 90% த்தைப் பெற்றுக் கொள்ளும்) போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். இலங்கையின் 1994 ஆம் ஆண்டுக்கான வருடாந்த சுகாதார செய்தி விவரணம் அந்த வருடத்தில் 10,000 குடித்தொகையினரில் 179 பேர் மட்டுமே மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டார்கள் என்றும், 2000 பேர் வெளி நோயாளர்களாக சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்றும் குறிப்பிடுகிறது. இவை அனைத்தும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நோய்வாய்ப்படும் நோயாளர்களில் பெரும்பாலானவர்களுக்கு ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு மட்டத்தில் குடும்ப மருத்துவரினால் சிகிச்சை அளிக்க முடியும் என்பதனையே காட்டுகின்றன.

மேலைய நாடுகளில் குடித் தொகையில் பெரும்பான்மையினரின் மருத்துவத் தேவைகளுக்கும் மருத்துவக் கல்லூரிகளில் வழங்கப்பட்டு வரும் போதனைகளுக்கும் இடையில் நிலவி வரும் பொருத்தமின்மை நிலை இனங்காணப்பட்டுள்ளதுடன், மருத்துவக் கல்லூரிகளின் பாடத் திட்டங்கள் பெருமளவுக்கு மாற்றி யமைக்கப்பட்டுள்ளன. மருத்துவக் கல்வியில் குடும்ப மருத்துவம் மற்றும் ஆரம்ப நிலை மருத்துவப் பராமரிப்பு என்பவற்றின் மீது இப்பொழுது அதிக அளவில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. குடும்ப மருத்துவத்திற்கான பயிற்சி ஐக்கிய இராச்சியத்தில் இப்பொழுது உரிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இலங்கையைப் பொறுத்தமட்டில், மருத்துவக் கல்லூரிகளில் குடும்ப மருத்துவம் தொடர்பான போதனை இதுவரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் குறைந்த மட்டத்திலேய இடம் பெற்று வந்துள்ளது. பாரம்பரிய மருத்துவக் கல்லூரிகள் மாற்றத்தை எதிர்த்து நிற்பதே இதற்கான முக்கிய காரணமாகும். எனினும், அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட களனி மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்கள் தமது பாடத் திட்டங்களில் குடும்ப மருத்துவத்தையும் சேர்த்துக் கொண்டுள்ளன.

இலங்கையில், 1995 க்கும் 2001 க்கும் இடைப்பட்ட காலத்தில் சுமார் 4,475 மருத்துவப் பட்டதாரிகள் தகைமை பெறுவார்கள் என கிடைக்கக்கூடியதாக இருக்கும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இந்த எண்ணிக்கை, அரச சுகாதார சேவைகளில் வேலையில் அமர்த்தப்படக்கூடிய மருத்துவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க பெருமளவுக்கு உயர்வானதாக உள்ளது. வருங்காலத்தில் பெருந்தொகையான மருத்துவர்கள் அரச துறையில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு நிலை தோன்றும் என்பதனை சுகாதார அமைச்சரை உள்ளிட்ட பலர் ஏற்கனவே சுட்டிக் காட்டி உள்ளனர். எனவே, புதிதாக தகைமை பெறும் மருத்துவப் பட்டதாரிகள் தனியார் துறையில் குடும்ப மருத்துவர்களாக பணியாற்றுவதற்கு உரிய முறையில் பயிற்றுவிக்கப்பட வேண்டிய அவசியத்தை இது வலியுறுத்துகின்றது. இரு புதிய மருத்துவ பீடங்களும் அண்மையில் ஸ்தாபிக்கப் பட்ட சமூக மருத்துவ மற்றும் குடும்ப மருத்துவ துறைகளும் இந்த வகையில் தொலை நோக்குடன் செயற்பட்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் 1994 இல் சமூக மற்றும் குடும்ப மருத்துவத் துறையை ஸ்தாபித்தது. இத்துறை குடும்ப மருத்துவ போதனையில் இப்பொழுது நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. பல்கலைக்கழக குடும்ப மருத்துவ நிலையம் மருத்துவ மாணவர்களுக்கு போதனை அளித்து வரும் அதே வேளையில், சமூகத்திற்கு ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு சேவையையும் வழங்கி வருகிறது. இந்த மருத்துவ நிலையம் வீடியோ உபகரணங்கள், கம்பியூட்டர் மருத்துவப் பதிவு முறைகள் போன்ற நவீன போதனை முறைகளையும் உபயோகித்து வருகின்றது.

பொது மருத்துவர்களாக சிகிச்சை அளிக்கக்கூடிய மருத்துவர்களை உருவாக்குவதனையே அனைத்து மருத்துவக் கல்லூரிகளும் தமது நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். எதிர்காலத்தில் தனியார் துறையில் குடும்ப மருத்துவர்களாக அல்லது அரச துறையில் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு மருத்துவர்களாகப்பணியாற்றுவதற்கு பட்டத்திற்குப் பின்னரான பயிற்சி கட்டாயமாக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யுமிடத்து, பொதுவான சுகாதாரப் பிரச்சினைகளையும் உளவியல் பிரச்சினைகளையும் கவனத்தில் எடுத்து, சிகிச்சை அளிப்பதற்கு தகுதி பெற்றுள்ள மருத்துவர்கள் உருவாக முடியும். தேவையானவிடத்து பொருத்தமான மருத்துவ நிபுணர்களின் சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவர்கள் ஆலோசனை வழங்கக் கூடியவர்களாக இருப்பார்கள்.

இன்றைய நவீன யுகத்தில், வாழ்க்கை, நெருக்குதல்களும் நிர்ப்பந்தங்களும் சூழ்ந்த ஒரு போராட்டமாக இருந்து வருகின்றது. இதன் விளைவாக, முன்னெப்பொழுதும் இருந்திராத அளவில் பெருந் தொகையான குடும்பங்கள் மன உளைச்சலினால் பாதிக்கப்பட்டு வருகின்றன. உயர் அளவில் எழுத்தறிவு விகிதங்களைக் கொண்ட இலங்கையைப் பொறுத்தமட்டில், மக்கள் குறைந்த செலவில் சிறந்த மருத்துவப் பராமரிப்பினை எதிர்பார்க்கிறார்கள். எனவே, குடும்பத்தினதும் அதனை அடியொட்டிய விதத்தில் சமூகத்தினதும் மாறிவரும் மருத்துவத் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் நாட்டின் சுகாதாரப் பராமரிப்பு முறையில் தேவையான மாற்றங்களை எடுத்து வருவதற்கு கொள்கை வகுப்போரும், நிர்வாகிகளும், மருத்துவக் கல்வியாளர்களும் ஒன்றாக இணைந்து செயற்படுவதற்கு இப்பொழுது தருணம் வந்துள்ளது.

( 12 ஆம் பக்கத் தொடர்ச்சி)


நான் கஷ்டப்பட்டு உழைப்பதால்தான் அவ்விதம் வசதிகளை செய்து கொடுக்க முடிகின்றது" என அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், ஒரு மனைவியைப் பொறுத்தவரையில் ஆடம்பர வாழ்க்கை மட்டும் அவளைத் திருப்தி செய்துவிட முடியாது; கணவன் அதிக நேரத்தை தன்னுடனும் தன் குழந்தைகளுடனும் செலவிடுவதனையே மனைவி விரும்புகின்றாள். கணவன் பிடிவாதமாக நின்று தனது வாழ்க்கை மாதிரிகளை மாற்றிக்கொள்ள மறுக்கும் பொழுது, இத்தகையவர்களின் மண வாழ்க்கையில் கசப்பும் விரக்தி நிலையும் தோன்றுகின்றது.

கலப்புத் திருமணங்கள் அதாவது பல்வேறு இனங்களைச்சேர்ந்தவர்கள் பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள் என்போருக்கு இடையிலான திருமண பந்தங்கள் கடந்த காலத்திலும் பார்க்க இப்பொழுது அதிக அளவுக்கு இடம்பெற்று வருவதனைக் காண முடிகிறது. இத்தகைய திருமணங்கள் தமக்கே உரித்தான சில பிரச்சினைகளைக் கொண்டுள்ளன. ஆனால், துரதிர்ஷ்டவசமாக பெரும்பாலான தம்பதியினர் திருமணத்திற்கு முன்னர் இத்தகைய பிரச்சினைகள் குறித்து பேசுவதில்லை. தம்மை ஒன்றாகப் பிணைக்கும் காதல் உறவுக்கு மத்தியில் இப்பிரச்சினைகள் மிக அற்பமானவை எனக் கருதி அவற்றை தட்டிக் கழித்து விடுகின்றார்கள். பொதுவாக மதம் சம்பந்தப்பட்ட விடயங்கள் இரு குடும்பங்களுக்கும் இடையே (முக்கியமாகக் குழந்தைகள் வளரும் பொழுது) உணர்வு பூர்வமான பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன. இந்த மதப் பிரச்சினைகள் இறுதியில் பல திருமணங்களின் முறிவுக்கும் கூட வழிகோலி விடுகின்றன. கலாசார அணுகுமுறைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றிலான வேறுபாடுகளும் பிரச்சினைகளை எடுத்துவர முடியும். எமது நாட்டில் இப்பொழுது இடம் பெற்று வரும் இனப் பிரச்சினையும் கூட இரு பிரதான சமூகங்களுக்கு இடையிலான திருமண பந்தங்களிலும் நெருக்குதல்களை எடுத்துவர முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இலங்கைச் சமூகத்தில் குடும்ப கட்டமைப்பு



**பீ. ஏ. டெனிசன் பெரேரா**
(முதுநிலை விரிவுரையாளர், சமூகவியல் மற்றும் மானிடவியல் துறை,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)

நவீன இலங்கைச் சமூகத்தில் குடும்பத்தின் கருமங்கள் மாற்றமடைந்துள்ளனவா என்பதனை நாங்கள் நிர்ணயித்துக் கொள்வதற்கு முன்னர், சமூக விஞ்ஞானிகளால் முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் மானிடக் குடும்பம் என்ற விடயத்தை சற்று விரிவாக நோக்குவது அவசிய மாகும். உலகெங்கணும் உள்ள பல்வேறு சமூகங்களில் பல்வகைப்பட்ட குடும்ப வகைகள் இருந்து வருகின்றன என்பதனை சமூக விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். நவீன நாகரீகத்தை எதிர்கொள்ளாத எளிமை யான சமூகங்களிலும் கிராமிய சமூகங் களிலும் விரிவாக்கப்பட்ட குடும்பங்களை யும் பலதார திருமண வழக்கங்களைக் கொண்ட குடும்பங்களையும் காண முடிகிறது. இந்தக் குடும்பங்களைப் பொறுத்தமட்டில், குடும்ப உறவுகள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளன என்பதே சமூக விஞ்ஞானிகளின் அபிப்பிராயமாகும். எனினும், இன்றைய நவீன கைத்தொழில் சமூகங்களில் சிறிய அடிப்படைக் குடும்ப வகையையே காணக்கூடியதாக உள்ளது.

நவீனமயமாக்கலின் விளைவாக எமது சமூகம் பாரம்பரியத்தின் தளைகளில் இருந்து விடுபட்டு, படிப்படியான ஒரு நிலைமாற்றத்தை எதிர்கொண்டு வந்துள்ளது பாரம்பரிய சிங்கள சமூகத்தில் விஸ்தரிக்கப்பட்ட குடும்ப மாதிரி முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. ஆனால், அந்த சமூகம் இப்பொழுது கணிசமான அளவில் மாற்றம் கண்டுள்ளது. முதன்மைக் குடும்பம் என்ற முறையில் சிறு குடும்ப அலகே இப்பொழுது முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்த சிறு குடும்ப அலகு என்ற பதத்திற்கு சமூக விஞ்ஞானியான ஜி.பி.மர்டோச் என்பவர் "திருமணமான பெண் அவளுடைய கணவன் மற்றும் அவர்களுடைய பிள்ளைகள் ஆகியோரை உள்ளடக்கிய அகிலம் தழுவிய சமூக நிறுவனம்" என வரைவிலக்கணம் வழங்கியுள்ளார். சில சந்தர்ப்பங்களில், வளர்ப்புப் பிள்ளைகளும் குடும்ப உறுப்பினர்களாக கருதப்படுகின்றனர். மானிடக் குடும்பத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கருமங்கள் நான்கு வகைப் பட்டவையாகும் என மர்டோச் சுட்டிக் காட்டுகிறார்: சமூக வாழ்க்கை, பொருளாதார ஒத்துழைப்பு, இனப் பெருக்கம் மற்றும் கல்வி.

சிறிய குடும்ப அலகின் இரு அம்சங்கள் - அதாவது, குடும்ப அனுசரிப்பு மற்றும் குடும்ப பெருக்கம் என்பன- வலியுறுத்தப்படுகின்றன. ஒரு நபர் அனுசரிப்பு குடும்பம் ஒன்றில் ஒரு பிள்ளையாக செயற்பட்டு வருகிறார். ஆனால், அதே வேளையில் அவர் உருவாக்கியுள்ள குடும்பத்தில் ஒரு தந்தையாக அவர் செயற்படுகிறார். இன்றைய நவீன சிங்கள சமூகத்தில் அனுசரிப்புக் குடும்பத்திற்கும் பெருக்கக் குடும்பத்திற்கும் இடையே ஒழுக்கவியல் விழுமியங்கள் மற்றும் அணுகுமுறைகள் என்பவற்றைப் பொறுத்தமட்டில் மிக முக்கியமான பல வேறுபாடுகள் நிலவி வருகின்றன என்பதனை இங்கு சுட்டிக் காட்டுவது அவசியமாகும்.

சமூக வாழ்க்கை குடும்பத்தின் தொடர்ச்சியில் முக்கியமான ஒரு தாக்கத்தைக் கொண்டிருப்பதுடன், பண்டைக் கால சிங்கள சமூகத்தின் ஒரு சிறப்பம்சமாகவும் இருந்து வந்துள்ளது. சமூக வாழ்க்கை என்ற பதம் ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒரு கூரையின் கீழ் சேர்ந்து வாழ்வதனையே குறிக்கின்றது. கணவனும் மனைவியும் ஒரே கூரையின் கீழ் சேர்ந்து வாழும் பொழுது, நவீன இலங்கைச் சமூகத்தின் பொருளாதார மற்றும் சமூக சிக்கல்கள் காரணமாக சில பிரச்சினைகள் தோன்ற முடியும். சில வேளைகளில் வேலைவாய்ப்பு போன்ற காரணிகளால் கணவனும் மனைவியும் தற்காலிகமாக பிரிந்து வாழ்வதற்கும் கூட நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். எனினும், இந்த நிலைமைகளின் கீழும் கூட இவ் விருவருக்குமிடையே ஓர் ஒற்றுமை. ஓர் உளவியல் பிணைப்பு நிலவி வருவது அவசியமாகும். கணவன் அல்லது மனைவி சமூக வாழ்க்கையில் இருந்து திடீரெனப் பிரிந்து செல்வது சிறு குடும்ப அலகின் இருப்புக்கே ஒரு சவாலாகி விடுகின்றது.

மூன்றாவது மண்டலத்தைச் சேர்ந்த ஒரு வளர்முக நாடு என்ற முறையில் இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் அதன் சமூக வாழ்க்கையில் தாக்கங்களை எடுத்து வருகின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மேலும், போட்டி மலிந்த சமூகத்தின் பொருளாதாரக் கட்டுக்கோப்புக்கள் சமூக, குடும்ப வாழ்க்கையின் இருப்புக்கு சவால்விடக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன என்பதும் உண்மையாகும். மக்கள் பன்முகப்பட்ட அபிலாஷைகளையும் எதிர் பார்ப்புக்களையும் உருவாக்கிக் கொள்வதற்கு தூண்டுதல் அளிக்கும் ஒரு திறந்த சமூகம் இலங்கையில் இப்பொழுது இருந்து வருகின்றது. இத்தகைய சூழ்நிலைகளின் கீழ் தம்பதியரிடையே மனப் போராட்டங்கள் தோன்றுவது தவிர்க்க முடியாததாகும். எவ்வாறிருந்தபோதிலும், குடும்ப அலகின் தொடர்ச்சியான இருப்புக்கு சமூக வாழ்க்கை அவசியமானது என சமூக விஞ்ஞானிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

குடும்பத்தின் இருப்பினை நிலைக்கச் செய்யும் மற்றும் ஒரு காரணி பொருளாதார ஒத்துழைப்பாகும். எளிமையான சமூகங்களில் பொருளாதார ஒத்துழைப்பைப் பேணி வருவதில் பால் அடிப்படையிலான ஊழியப் பகிர்வு முக்கியத்துவம் பெறுகின்றது. அத்தகைய சமூகங்களில் வீடு கட்டுதல், வேட்டையாடுதல், மீன் பிடித்தல் போன்ற சமூகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மைக் கருமங்கள் பொதுவாக ஆண்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. அதே வேளையில், மரக்கறிகளை சேகரித்தல், உணவு தயாரித்தல் மற்றும் பிள்ளை வளர்ப்பு போன்ற கருமங்கள் பெண்களுக்கென ஒதுக்கப் பட்டுள்ளன. ஆனால், இன்றைய நவீன சமூகங்களில் பொருளாதார ஒத்துழைப்பு சிறு குடும்ப அலகுக்குள் இடம்பெறவில்லை; மாறாக வெளி உலகுடனேயே இடம்பெற்று வருகின்றது. உதாரணமாக, எமது சமூகத்தில் திருமணமான தம்பதியரில் பெரும்பாலானவர்கள் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

இனப் பெருக்கம் மானிடக் குடும்பத்தின் அத்தியாவசியமான ஒரு கருமமாகும். அது சமூகத்தின் தொடர்ச்சியை நிர்ணயிப்பதுடன், குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்கான சுதந்திரத்தையும் பெற்றோருக்கு அளிக்கின்றது. சாத்தியமான வரையில் மிகக் கூடுதலான பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதே பாரம்பரிய விவசாய சமூகங்களின் போக்காக இருந்து வந்தது. கிராமப் பகுதிகளில் வயல்களிலும் நிலங்களிலும் குடும்ப உறுப்பினர்களை வேலையில் அமர்த்துவது வெளியாளரை வேலையில் அமர்த்துவதிலும் பார்க்க இலாபகரமானது என்ற உண்மையின் அடிப்படையிலேயே இப்போக்கு தோன்றியிருந்தது. இன்றும் கூட சில கிராமிய குடும்பங்களில் வயல்களில் வேலை செய்வதற்கு குடும்ப ஊழியத்தை மட்டும் பயன்படுத்தும் பொருட்டு அதிக அளவில் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளும் ஒரு போக்கு காணப்படுகின்றது. எவ்வாறிருப்பினும், பெரிய குடும்பங்களைக் கொண்டிருக்கும் மனப்போக்கினை இலங்கையின் குடும்ப அமைப்பில் இப்பொழுது காண முடியவில்லை. குடும்பத் திட்டமிடல் மற்றும் கருத்தடை நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன தம்பதியரிடையே சிறு குடும்பங்களின் அனுகூலங்கள் குறித்து விழிப்புணர்வினைத் தூண்டிவிட்டுள்ளன.

பெற்றோர் தமது தொழிலைத் தம் பிள்ளைகளுக்கும் பயிற்றுவிக்கும் ஒரு கல்வி முறை தொடக்கத்தில் கிராமிய சமூகங்களில் நிலவி வந்தது. இதனை மானிடக் குடும்பத்தினால் நிறைவு செய்யப்படும் கல்விப் பணி என வர்ணிக்க முடியும். எனினும் இன்று இந்நிலைமை மாற்றமடைந்துள்ளது. கல்விப் பொறுப்பு குடும்பத்திற்கு வெளியே இருக்கும் நிறுவனங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இன்று வரையில், குழந்தையை சமூகமயப் படுத்தலே குடும்பத்தின் ஆரம்ப கல்விப் பணியாக இருந்து வருகின்றது. உணவு உட்கொள்ளல், ஆடை அணிதல் மற்றும் தற்சுகாதாரம் போன்ற அடிப்படைக் கலாசார நடவடிக்கைகளின் அறிவினை குடும்ப அலகுக்கூடாகவே ஒருவர் பெற்றுக் கொள்கிறார். இத்தகைய கருமங்களை நிறைவு செய்வதற்கென சமூகத்தில் இதுவரையில் ஒரு மாற்று நிறுவனம் தோன்றவில்லை என்பதே சமூக விஞ்ஞானிகளின் அபிப்பிராய மாகும்.

சிறு குடும்ப அலகு என்பது ஒரு தனித்துவமான சமூக முறையாக இருந்து வருகின்றது. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவுகள் மற்றும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான உறவுகள் என்பவற்றிற்கு ஊடாக இது ஸ்தாபிக்கப் பட்டுள்ளது. பால் மற்றும் வயதுக் காரணிகள் என்பன குடும்ப அமைப்பின் கருமங்களில் ஒரு நேரடித் தாக்கத்தைக் கொண்டுள்ளன. உளவியல் கண்ணோட்டத்தில் தனது தாய், தந்தை மற்றும் சகபாடிகளுடன் ஒரு குழந்தை கொண்டுள்ள உறவு அதன் ஆளுமையின் உருவாக்கத்தில் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.


நவீன சமூகத்தின் குறிப்பிடத் தகுந்த ஓர் அம்சம், குடும்ப உறுப்பினர்கள் குறிப்பாக கணவன் மற்றும் மனைவி ஆகியோர் குறிப்பிட்ட சில நடவடிக்கைகளில் சுயமாக சிந்தித்து செயல்படும் ஒரு போக்கினைக் காட்டி வருவதாகும். நீண்ட காலப் பிரிவில் குடும்ப ஒழுக்கவியலிலும் விழுமியங்களிலும் படிப்படியாக ஏற்பட்டு வரும் மாற்றங்களே இதற்கான காரணமாகும். இன்றைய நவீன இலங்கையின் குடும்ப அமைப்பில் ஊழியப் பிரிவு தெளிவற்றதாக இருந்து வருகின்றது. இப்பொழுது பெண்கள் ஆண்களின் வேலைகளில் ஈடுபட்டு வருவதனால் பண்டைய சமூகங்களில் நிலவி வந்த ஊழியர் பகுப்பு முறையை காண முடியாதுள்ளது. நகர்ப்புறங்களிலும் அதேபோல கிராமப்புறங்களிலும் உருவாகியுள்ள கைத்தொழில்களிலும் வணிக முயற்சிகளிலும் பெண்கள் பல்வேறு மட்டங்களில தொழில்களில் அமர்த்தப்பட்டுள்ளனர். சில வருடங்களுக்கு முன்னர் எமது சமூகத்தில் பெண்கள் தொழில்களுக்கு செல்லக் கூடாது என்றும், திருமணம் செய்து அவர்கள் வீட்டு வேலைகளைக் கவனித்துக்கொண்டு இருக்க வேண்டும் என்றும் ஒரு நம்பிக்கை நிலவி வந்தது. ஆண்கள் சமூகத்தில் பல சலுகைகளை அனுபவித்து வந்தனர். ஆனால், இப்பொழுது இந்நிலைமை படிப் படியாக மாற்றமடைந்து வருகிறது. கிராமப் பிரதேசங்களில் நிலங்கள் துண்டாடப்பட்டமையும் நில உரித்தில் ஏற்பட்டு வந்த மாற்றங்களும் பாரம்பரியக் குடும்ப அமைப்பில் ஒரு தாக்கத்தை எடுத்து வந்திருந்தது. இந்தப் பின்னணியில், கிராம மக்கள் தொழில்களைத் தேடி நகரங்களுக்கு குடிபெயர்ந்து செல்லத் தொடங்கினர். கிராமிய சமூகங்களின் கருமங்களிலும் மனப் பாங்குகளிலும் மாற்றத்தை எடுத்து வருவதில் இந்த நகர்வு ஒரு முக்கிய பங்கினை வகித்து வந்துள்ளது. சமூக மாற்றத்தின் முக்கிய கருவிகள், எனக் கருதப்பட்டு வரும் நகர்மயமாக்கலும் கைத்தொழில்மயமாக்கலும் மானிடக் குடும்ப அமைப்பை மட்டுமன்றி ஏனைய பாரம்பரிய சமூக நிறுவனங்களையும் மாற்றியமைத்துள்ளன.

இன்றைய சமூகத்தில் நிலவி வரும் தனிநபர் சார்ந்த கருதுகோள்களின் விளைவாக எமது குடும்ப அமைப்பில் பல பிரச்சினைகள்தோன்றியுள்ளன. இது குடும்ப உறவுகள் பெருமளவுக்கு சீர்குலைவதற்கு வழிகோலியுள்ளது. ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் ஏதோ ஒரு வகையில் ஒரு வருமான வழியைப் பெற்றிருப்பதற்கு முயன்று வருகின்றார். இன்று நகர்ப்புற குடும்ப அமைப்பில், திறந்த பொருளாதார அமைப்பு எடுத்து வந்துள்ள சொகுசு வாழ்க்கை வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்குக் கடுமையான ஒரு பந்தயம் இடம் பெற்று வருவதைக் காண முடிகிறது. பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடாது இருக்கும் எவரும் சமூகத்திற்கு ஒரு சுமையாக கருதப்பட்டு வருகின்றார். இதன் காரணமாக, மேலைய சமூகங்களைப் போலவே இப்பொழுது நம் நாட்டிலும் பல முதியோர் காப்பகங்கள் உருவாகியுள்ளன.

( 20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப கட்டமைப்பில் மேலைத்தேச செல்வாக்குகள்



**கலாநிதி சிரி கமகே**
நிவ் இங்கிலாந்து பல்கலைக்கழகம்,
அவுஸ்திரேலியா

மாறிவரும் குடும்ப அமைப்பைப் புரிந்து கொள்ளும் பொருட்டு, அதனைக் குறிப்பிட்ட வரலாற்று, சமூகப் பின்புலத்தில் வைத்து நோக்குவது அவசியமாகும் என சமூக விஞ்ஞானிகள் வலியுறுத்தி வருகின்றனர். அவுஸ்திரேலியா போன்ற மேலைய சமூகங்களில் மாறி வரும் குடும்ப வாழ்க்கை அமைப்பை நாங்கள் நோக்கும் பொழுது, குடும்ப வடிவங்கள் மற்றும் அவை வகிக்கும் பாத்திரங்கள் என்பவற்றின் சிக்கலான தன்மையையே முக்கியமாக எம்மால் நோக்க முடிகிறது. இந்நிலைமைகளை உருவாக்கிய காரணிகளும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. இந்நிகழ்வுப்போக்கில் குடும்பத்தின் கருமங்களும் கூட மாற்றம் அடைந்துள்ளன. இக் கட்டுரை மேலைத்தேச சமூகத்தில் மாறிவரும் குடும்ப அமைப்பின் பிரதான அம்சங்களை எடுத்து விளக்குகின்றது.

குடும்ப அலகில் ஏற்பட்டு வரும் மாறுதல் போக்குகள் குறித்து பேசுபவர்கள் குடும்ப அமைப்பிலும் அதன் கருமங்களிலும் ஏற்பட்டு வரும் மாற்றங்களைப் பொதுவாக குறிப்பிடுகின்றனர். உதாரணமாக அவுஸ்திரேலியாவைப் பொறுத்த வரையில் குறைந்த எண்ணிக்கையினரே திருமணம் புரிந்து கொள்கின்றனர். தம்பதியினர் மிகக் குறைந்த அளவிலேயே பிள்ளைகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள். சிலர் பிள்ளை பெற்றுக் கொள்ளாமலேயே வாழ்ந்து வருகிறார்கள். மண விலக்குகள் அதிகரித்து வருகின்றன. திருமண வாழ்க்கையின் சீர்குலைவின் தாக்கத்தினால் பெரும்பாலான பிள்ளைகள் உளவியல் ரீதியான தாக்கங்களை அனுபவித்து வருகின்றார்கள். தனியொரு பெற்றோரைக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. மேலும், கலப்புக் குடும்பங்களின் எண்ணிக்கையிலும் (அதாவது, முன்னைய குடும்பங்களின் குழந்தைகளை வைத்திருக்கும் தம்பதியினரின் எண்ணிக்கையும்) அதிகரித்து வருகின்றது. பெற்றோரின் ஆதிக்கம் தளர்ந்து வருதல், பாரம்பரியக் குடும்பப் பாத்திரங்களில் இருந்து பெண்கள் விடுதலை அடைதல், பாலியல் உறவுகளின் மாறிவரும் இயல்பு, ஆண்/பெண் வகிக்கும் பாத்திரங்களில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் (உழைக்கும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் நாளின் பெரும்பகுதியை வீட்டுக்கு வெளியே செலவிடுதல் போன்ற) சமூகமயமாக்கல முறைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் என்பன ஏனைய மாற்றங்களாகும். பல்வேறு வெளிக் காரணிகளினாலும் செல்வாக்குகளினாலும் சாதாரண குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் இடையூறுகள், குடும்பம் ஒரு சமூக பொருளாதார மற்றும் உளவியல் அலகு என்ற முறையில் எதிர்கொண்டு வரும் மாற்றங்களின் ஒரு பாகமாக உள்ளது.

பொருளாதாரம், அரசியல், கலாசாரம், கல்வி மற்றும் சமயம் போன்ற ஏனைய சமூக நிறுவனங்களில் ஏற்பட்டுவரும் மாற்றங்களுடன் இணைந்த விதத்தில் குடும்ப அமைப்பிலும் மாற்றங்கள் இடம் பெற்று வந்துள்ளன. தந்தை, தாய் மற்றும் பிள்ளைகள் என்போரைக் கொண்ட பாரம்பரிய வகையைச் சேர்ந்த குடும்பம் தொடர்பான கருத்து இப்பொழுது மாற்றம் கண்டு வருகின்றது. அதனிடத்தில் வேறு வகையைச் சேர்ந்த குடும்ப வடிவங்கள் தோன்றியுள்ளன. அவுஸ்திரேலிய புள்ளிவிபரப் பணியகத்தின் 1991 ஆம் ஆண்டுக்கான தரவுகளின் பிரகாரம் அந்நாட்டில் பின்வரும் வகைகளைச் சேர்ந்த குடும்பங்கள் அவதானிக்கப் பட்டுள்ளன:

| | |
|---|---|
| திருமணமான தம்பதியர் (வீட்டில்) பிள்ளைகள் இல்லை | 27.8% |
| சேர்ந்து வாழும் தம்பதியினர் (வீட்டில்) பிள்ளைகள் இல்லை | 2.8% |
| தங்கியிருப்போருடன் வாழும் திருமணமான பெற்றோர் | 42.8% |
| தங்கியிருப்போருடன் வாழும் (திருமணமாகாத) பெற்றோர் | 1.8% |
| பெற்றோரில் ஒருவரும் தங்கியிருப்போரும் | 7.8% |
| தம்பதி + வயது முதிர்ந்த குடும்ப உறுப்பினர்கள் | 10.8% |
| உறவுமுறை கொண்ட வயது முதிர்ந்தோர் (தம்பதியினர் அல்லது பெற்றோரில் தங்கியிருக்கும் பிள்ளைகள் இல்லை) | 6.2% |

அவுஸ்திரேலியாவில் 1982 க்கும் 1986 க்கும் இடைப்பட்ட காலத்தில் சேர்ந்து வாழும் பெற்றோர் மற்றும் தங்கியிருப்போர் என்போரில் 20% அதிகரிப்பும், தம்பதி மற்றும் வயது முதிர்ந்த குடும்ப உறுப்பினர் என்போரில் 21% அதிகரிப்பும், தனியொரு பெற்றோர் மற்றும் தங்கியிருப்போர் என்போரில் 13% அதிகரிப்பும் ஏற்பட்டு வந்துள்ளது. நாம் அறிந்த பாரம்பரியக் குடும்பம் படிப்படியாக நலிவுற்று வருகின்றது என்பதையும், புதிய குடும்ப வடிவங்கள் எழுச்சிகண்டு வருகின்றன என்பதனையும் இத்தரவுகள் காட்டுகின்றன. அதிகரித்து வரும் விவாகரத்து விகிதங்கள் இப்போக்கின் மற்றொரு குறிகாட்டியாகும். 1971 க்கும் 1986க்கும் இடைப்பட்ட காலத்தின் போது விவாகரத்து விகிதம் மும்மடங்கினால் அதிகரித்துச் சென்றுள்ளது. மேலைய சமூகத்தைச் சேர்ந்த குடும்பத்தின் கட்டமைப்பு மற்றும் கருமங்கள் என்பவற்றில் மாற்றங்களை எடுத்து வருவதற்குப் பங்களிப்புச் செய்த காரணிகளில் ஊழியர் படையில் மகளிரின் அதிகரித்த அளவிலான பங்கேற்பு, (உதாரணமாக விவாகரத்து போன்ற) சட்டவாக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்கள், கூட்டுப் பொறுப்புக்குப் பதிலாக தனிநபர் சுதந்திரம் தொடர்பான கருதுகோள்கள், அரசினால் வழங்கப்பட்ட மாற்று நிதி மற்றும் ஏனைய ஆதரவு வழிமுறைகள், அதிகரித்த அளவிலான ஓய்வு மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி நபர்களின் மீது சமய நிறுவனங்களின் செல்வாக்கு வீழ்ச்சி கண்டு வந்துள்ளமை என்பவற்றை இனம் காண முடியும்.

குடும்பம் சாராத வாழ்க்கை மாதிரியொன்றுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, குடும்பம் சார்ந்த வாழ்க்கை மாதிரி பல சுமைகளை தன்னகத்தே கொண்டதாக இருந்து வருகிறது. இடையறாத உழைப்பு, வீட்டுப் பராமரிப்பு, கல்வி, விளையாட்டு மற்றும் கேளிக்கை போன்ற பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்தல், அன்றாடம் செய்ய வேண்டிய வழமையான வேலைகள் என்பன குடும்ப வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டுள்ளன. குடும்ப அலகொன்று இல்லாத வாழ்க்கை மாதிரிகள் தனி நபர்களுக்கு தனித்துவமான ஒரு சுதந்திரத்தையும் ஒருவகையான ஆனந்தத்தையும் அளிக்கின்றன. குடும்ப அமைப்பில் இத்தகைய சுதந்திரமும் ஆனந்தமும் கிடைப்பதில்லை. இன்றைய பொருள் முதல்வாத உலகில் பாரம்பரியக் குடும்பங்களின் தொடர்ச்சி இப்பொழுது கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றது. சில தனி நபர்கள் தமக்கு வசதியான சூழ்நிலைகளின் கீழ் வாழ்வதற்கு விரும்புகின்றார்கள். இது பாரம்பரியக் குடும்ப கட்டமைப்புக்கு சவால்களை எடுத்து வருகின்றது.

பல தேசிய அரசாங்கங்கள் உலகளாவிய பொருளாதார செல்வாக்குகளின் கீழ் பல்வேறு வகையான பொருளாதார மீளமைப்பு நிகழ்வுப் போக்குகளில் ஈடுபட்டு வருகின்றன. பல்வேறு அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் ஊழியர் படையின் அளவைக் குறைப்பதும் இதில் ஓர் அம்சமாகும். வாழ்க்கைத் துணை ஒருவர் தனது தொழிலை இழக்கும் போது, தொடர்ந்து வீட்டுக் கடன் தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதும், குடும்பத்தினர் முன்பு அனுபவித்து வந்த சலுகைகளை அதே அளவில் வழங்குவதும் சிரமமாகி விடுகின்றது. அவர்கள் தமது குடும்ப வீட்டை விற்பதற்கு நிர்பந்திக்கப்படலாம்; வாழ்க்கை வசதிகளைக் குறைத்துக் கொள்ளவும் நேரிடலாம். சில சந்தர்ப்பங்களில் இப்புதிய சூழ்நிலைகளில் சில குடும்பங்கள் பிரிந்து செல்லவும் முடியும். வேறு சில குடும்பங்களில் அத்தகைய மன உளைச்சல்கள் ஆட்களுக்கிடையிலான மோதல்களைத் தோற்றுவித்து, சிறுவர் துஷ்பிரயோகத்திற்கும் வன்செயல்களுக்கும் வழிகோலுகின்றன. பாசப் பிணைப்பு, அன்பு என்பனவும் இல்லாமல் போகக் கூடிய ஒரு சூழ்நிலையும் உருவாக முடியும். இந்த நிலையில், குடும்பம் என்பது, இதயமற்ற ஓர் உலகில் வேண்டப்படாத ஒரு பொருளாகி விட்டது. தேசியப் பொருளாதாரங்கள் பின்னடைவு நிலையில் இருந்து, பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகர்ந்து செல்லும்பொழுது இந்நிலைமைகள் ஓரளவுக்கு திருப்திகரமான முறையில் மாற்றம் அடைகின்றன. எனினும், அப்பொழுது சீர்குலைந்த குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் (தாம் ஏற்கனவே மாற்று வாழ்க்கை முறைகளுக்குப் பழகிக் கொண்டு இருப்பதனால்) பழைய குடும்ப அமைப்பில் இணைந்து கொள்ள முடியாதவர்களாகின்றனர்.

பாரம்பரிய சமூகங்களுடன் ஒப்பிடும் பொழுது மேலைய சமூகங்களில் தனிநபர் சுதந்திரம், அந்தரங்கம், தனியார் உரிமைகள், தோழமை என்பன தொடர்பான விழுமியங்களும் நெறிமுறைகளும் வேறுபட்டவையாக இருந்து வருகின்றன. பாரம்பரியத்திற்கு வெளியிலான குடும்ப அலகுகளில் வாழ விரும்பும் தனி நபர்களுக்கு எதிரான கலாசாரத் தடைகள் இச்சமூகங்களில் மிகக் குறைந்த அளவிலேயே நிலவி வருகின்றன. மேலும், தமது குடும்ப அலகுகளில் இருந்தும் திருமணப் பந்தங்களில் இருந்தும் விலகிச் சென்றிருப்பவர்கள் சமூகத்தில் இருந்து பகிஷ்கரிக்கப் படுவதும் இல்லை. திருமண பந்தங்களையும் குடும்பங்களையும் கட்டுறுதியாக வைத்திருப்பதற்கான ஏற்பாடுகளையும் சட்டம் கொண்டிருக்க வில்லை. குழந்தைகளைப் பராமரிப்பது போன்ற ஒரு சில பொருள்சார் ஏற்பாடுகளை மட்டுமே அது கொண்டுள்ளது. பாலியல் உறவு கண்டிப்பான முறையில் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கவில்லை. திருமணமான பலர் பெருந்தொகையான விவாகரத்துக்களையும் சேர்ந்து வாழும் ஏற்பாடுகளையும் பாலியல் தொடர்புகளையும் வைத்துக் கொண்டுள்ளனர். வாழ்க்கையின் இத்தகைய சட்டங்களைத் தாண்டி வந்திருக்கும் ஒருசில தனி நபர்கள் தமது வாழ்வின் பிற்பகுதியில், ஏனைய கலாசாரங்களில் இருந்து பிள்ளைகளைத் தத்தெடுத்து, பிற கலாசாரங்களில் இருந்து திருமண பந்தங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கூடாக வாழ்க்கையில் ஒருவிதமான உறுதிப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறார்கள்.

வேறு எந்த ஒரு சமூகத்திலும் போலவே அவுஸ்திரேலிய சமூகத்திலும் பள்ளி வாழ்க்கை, உயர் கல்வி, வேலை, கேளிக்கை, பிரயாணம் மற்றும் ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் எனபன் இளைஞர்கள் தமது பாலியல் பங்காளர்களையும் வாழ்க்கைத் துணைகளையும் தேடிக் கொள்வதற்கான வழிகளை வழங்குகின்றன. திருமணத்திற்கு முன்னரான பால் உறவு பெற்றோராலோ அல்லது ஏனைய சமூக நிறுவனங்களாலோ கண்டிப்பான முறையில் வரையறுக்கப்பட்டிருக்க வில்லை. குறிப்பிட்ட ஒரு வயதுத் தொகுதிக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சமூக நலக் கொடுப்பனவுகள், இளைஞர்கள் தமது பெற்றோரின் இல்லங்களில் இருந்து வெளியேறிச் செல்வதற்குத் தூண்டுதல் அளிக்கின்றது. இத்தகைய அனுபவங்களைத் தேடிச் செல்லும் பெருந் தொகையான இளைஞர்கள் நியாயமான உயர்கல்வி ஒன்றையும் சிறந்த தொழில் வாய்ப்பொன்றையும் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை இழந்து விடுகின்றனர். அங்கீகரிக்கப் பட்ட திறன்களையும் தகைமைகளையும் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்ட பின்னர் பிற்காலத்தில் சிலர் இந்நடவடிக்கைகளுக்கு திரும்பி வருகின்றனர். அரசாங்கத்தின் ஆதரவில் வாழ்ந்து வருபவர்கள் நிலையான குடும்பம் ஒன்றை உருவாக்கிப் பராமரித்து வருவது தம்மைப் பொறுத்தவரையில் ஒரு சிறப்பான காரியமாக இருந்து வருகின்றது என்பதனை உணர்கின்றனர்.

கலாசார ரீதியிலும் மொழி அடிப்படையிலும் வேறுபட்ட பின்னணிகளைக் கொண்டிருக்கும், மேலைய சமூகங்களுக்கு குடிபெயர்ந்து வந்து வாழும் குடும்பங்கள் தமது பிள்ளைகள் தொடர்பாக ஒருவிதமான தடுமாற்ற நிலையை எதிர் கொண்டு வருகின்றனர். இவர்களில் பெருந்தொகையானவர்கள் தாம் வாழும் குறிப்பிட்ட பிரதேசங்களில் தமது சொந்த இனத்துவ, கலாசார நிறுவனங்களை ஸ்தாபித்துக் கொண்டுள்ளார்கள். அந்த வகையில் அவர்கள் தமது பாரம்பரிய கலாசாரம், கல்வி, மொழி, சமயம் மற்றும் சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேளிக்கை முறைகள் என்பவற்றைப் பேணிக் காத்துக் கொள்வதற்கு முயன்று வருகின்றார்கள்.

இத்தகைய சமூகங்களுக்கும் அவர்களுடைய தாய் நாடுகளுக்கும் இடையே உறுதியான பிணைப்புக்கள் நிலவி வருகின்றன. எனினும், இக்குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் மேலைத்தேயக் கல்வி முறையில் பயிற்றுவிக்கப்படுவதுடன் அந்நாடுகளைச் சேர்ந்த தமது சகாக்களுடன் இணைந்து சமூகமயமாக்கலை அனுபவித்து வருகின்றனர். கலாசார அபிலாஷைகள் மற்றும் விழுமியங்கள் என்பவற்றைப் பொறுத்தவரையில் அவர்கள் பல முரண்பாடுகளை சந்திக்கின்றார்கள். இதன் இறுதி விளைவாக இவர்களுடைய பெற்றோர்களின் அபிலாஷைகளுக்கு முரணான வகையில் இவர்கள் வளர்கிறார்கள். குடியகல்வுக் காலம், இனத்துவக் குழு கொண்டுள்ள சக்தி மற்றும் வழங்கப்படும் வாய்ப்புக்கள் என்பவற்றைப் பொறுத்து இப் பிள்ளைகளின் மீது ஏற்படும் தாக்கம் வேறுபட்டதாக அமைகிறது. வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்து கொள்வதிலும் இந்த இளைஞர்கள் தமது பெறறோரின் செல்வாக்கிலும் பார்க்க சகாக்களின் செல்வாக்கிற்கே அதிக அளவில் உட்படுகின்றனர். எனவே, குடியகல்வுக் குடும்பங்களைச் சேர்ந்த சில பிள்ளைகள் முன்னர் விவரிக்கப் பட்ட பாரம்பரியக் குடும்ப மாதிரிகளில் இருந்து வேறுபட்டவையாக இருந்து வரும் குடும்ப வகைகளில் வாழ்ந்து வருகின்றனர். எனினும், பெரும்பாலானவர்கள் தமது கல்வியை முடித்துக் கொண்ட பின்னர் பாரம்பரிய வகையைச் சேர்ந்த குடும்பங்களில் வழ்வதனை தெரிவு செய்து கொள்கின்றனர்.

இக்கட்டுரையில், இந்தக் குடும்ப மாற்றங்களில் சமூக வர்க்கம் எடுத்து வரும் தாக்கங்களை நான் எடுத்துக் காட்டவில்லை. எனினும், இது விரிவான கலந்துரையாடலை வேண்டி நிற்கும் ஒரு முக்கியமான துறையாக உள்ளது. அதே போல, குடும்பங்களின் உருவாக்கத்தில் கலாசார வேறுபாடுகளும் குடும்ப பாரம்பரியத் தொடர்பான கலாசாரக் கூறுகளும் முறையான ஆழந்த ஆய்வினை வேண்டி நிற்கும் துறைகளாக உள்ளன.

கைத்தொழில்மயமாகி உள்ள நகர, பெருநகர பகுதிகளோடு ஒப்பிட்டு நோக்கும் பொழுது கிராமப் பகுதிகளில் பாரம்பரிய இயல்பினைக் கொண்ட குடும்ப அலகு தொடர்ந்து நிலைத்து வருவதை அவதானிக்க முடிகிறது. கிராமப்புறங்களைச் சேர்ந்த குடும்பங்கள் அதிக எண்ணிக்கையிலான பிள்ளைகளைக் கொண்டிருப்பதுடன் குடும்ப உறவு முறைகளையும் விழுமியங்களையும் நன்கு பேணி வருகின்றன. இது தனிப்பட்ட அவதானிப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு கூற்றாகும். இந்த அவதானிப்புக்கள் குடும்ப அலகின் இயக்கம், குடும்பங்களிற்கு இடையிலான உறவுகள் என்பன தொடர்பான பல பயனுள்ள படிப்பினைகளைத் தருகின்றது. உதாரணமாக, அவுஸ்திரேலியாவில் எமது அயல்வீட்டுக்காரர் வயது முதிர்ந்த ஒரு தம்பதியினராவர். இவர்கள் அநேகமாக ஒவ்வொரு வார இறுதியிலும் தமது பிள்ளைகளையும் பேரப் பிள்ளைகளையும் வரவழைத்து விருந்தளித்து மகிழ்கின்றனர். பெற்றோர் வேலைக்குச் செல்லும் பொழுது அவர்கள் தமது பேரப் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்கின்றனர். ஏனைய குடும்பங்களும் கூட இத்தகைய நிலைமைகளை அனுபவித்து வருகின்றன. நாட்டுப்புற வாழ்க்கை மாதிரி உறுதியான குடும்ப உறவுகளைப் பராமரித்து வருவதற்கு சாதகமான நிலைமைகளை வழங்குகின்றது.

( 17 ஆம் பக்கத் தொடர்ச்சி)


இன்று குடும்ப வாழ்க்கைக்குள் பல மோதல்களும் மனப்போக்குகளும் தோன்றியுள்ளன. நவீன கல்வி முறையும் திறந்த பொருளாதாரக் கொள்கையும் சமூகத்தில் சுய நலவேட்கையும் தனிநபர்வாதமும் தலை தூக்குவதற்கு வகை செய்துள்ளது. பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளும் கூட, இப்பொழுது தமக்கென வருமான வழிகளை வைத்துக் கொண்டுள்ளனர். பிள்ளைகளைக் கட்டுப் பாட்டில் வைத்து இருப்பதும் இப்பொழுது பெற்றோரைப் பொறுத்தவரை ஒரு பிரச்சினையரக இருந்து வருகிறது. முன்னர் பிள்ளைகளின் திருமண விடயத்தில் குடும்பம் ஒரு முக்கியமான பங்கினை வகித்து வந்துள்ளது. ஆனால், இப்பொழுது இளைஞர்களும் யுவதிகளும் தாம் விரும்பும் விதத்தில் தமது வாழ்க்கைத் துணைகளைத் தேர்ந்து எடுத்துக் கொள்கின்றனர். மேலைய சமூகத்தில் ஒரு பொது மரபாக இருந்து வரும் காதல் வயப்படும் நிலை இப்பொழுது எமது சமூகத்திலும் வேரூன்றியுள்ளது. திருமண வயதும் கூட உயர்ந்து சென்றுள்ளது. மேலும், நகர்மயமாக்கல் மற்றும் கைத்தொழில் மயமாக்கல் என்பவற்றின் விளைவாக அடிப்படைக் குடும்பத்திற்கு வெளியிலான குடும்ப உறவு முறைகள் இப்பொழுது தமது முக்கியத்துவத்தை இழந்துள்ளன.

குடும்பத்தின் கருமங்கள் பெருமளவுக்கு மாற்றமடைந்து வந்துள்ளன என்பது தெளிவாகும். ஏற்கனவே உள்ள அந்தஸ்திலும் பார்க்க ஈட்டிக்கொள்ளப்படும் அந்தஸ்தே இப்பொழுது முக்கியத்துவம் பெறுகின்றது. ஆண், பெண் உறவுகளிலும் சுமார் இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் இருந்து வந்துள்ள நிலைமை இப்பொழுது மாற்றமடைந்துள்ளது. கணவனைப் போலவே மனைவியும் ஒரு சமூக அந்தஸ்தை அனுபவித்து வருகின்றாள். பெண்கள் உயர் கல்வியைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், சில சந்தர்ப்பங்களில் மனைவி, கணவனையும் பார்க்க உயர் தொழிலில் ஈடுபட்டு வருவதனைக் காணமுடிகிறது. பெண்களின் இடம் சமையலறையே என்ற மனப்பாங்கு இப்பொழுது மானிடக் குடும்பத்தில் இருந்து படிப்படியாக விலகிச் சென்றுள்ளது. குடும்ப அமைப்புக்குள் பழமை பேண் அணுகுமுறைகளுக்குப் பதிலாக தீவிர அணுகுமுறைகள் ஆதிக்கம் பெறத் தொடங்கியுள்ளன. ஆணாதிக்கம் ஓரளவுக்கு அதன் பிடியை இழந்துள்ளது. 21ஆம் நூற்றாண்டளவில் எமது குடும்ப அமைப்பில் மேலும் அதிகரித்த அளவிலான கருதுகோள் ரீதியான மாற்றங்களையும் அமைப்பு ரீதியாக மாற்றங்களையும் நாம் எதிர்பார்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப உளவியல்



**டாக்டர் காமினி பிரேமதிலக**

நாங்கள் அனைவரும், இன்றில்லாவிட்டாலும், முன்னர் குடும்ப உறுப்பினர்களாக இருந்து வந்துள்ளோம். குடும்பம் என்பது சமூகத்தின் தனி அலகாகும். உதாரணமாக, குடும்பத்தின் உளவியல் காரணங்களை எடுத்து நோக்குவோம். மனிதப் பிறவிகள் தனித்து வாழும் பிராணிகள் அல்ல; அவர்கள், விளைவும் எதிர்விளைவும் காட்டும் சமூகக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் அனுபவிப்பவை அனைத்தும் வெளி மற்றும் உள் செல்வாக்குகளில தங்கியுள்ளன. குடும்பம் என்பது, இந்த நிகழ்வுப்போக்கின் மிக முக்கியமான ஒரு காரணியாக இருந்து வருகின்றது. குடும்பம் என்பதை உள்ளத்தின் வெளி உறுப்பு என வர்ணிக்க முடியும்.

குடும்பத்தின் உளவியல் சமூக அம்சங்களைப் புரிந்து கொள்வதற்கான மிகப் பொருத்தமான வழி அதனை ஓர் அமைப்பாகக் கவனத்தில் எடுப்பதாகும். பொது முறைமைகள் கோட்பாட்டின் பிரகாரம், ஒரு முறைமை என்பது குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் இருந்து வரும் ஒன்றுக்கு ஒன்று எதிர் விளைவு காட்டும் கூறுகளின் ஒரு தொகுதியாக உள்ளது. சுற்றுச் சூழலுடனும் அது திறந்த முறையில் தொடர்பு கொள்கின்றது. குடும்பம் என்பது இயக்கவிசை கொண்ட ஒரு கருதுகோளாக இருந்து வருகின்றது என்பதும் - அதாவது, அது வளர்ச்சி, சேர்க்கைகள், இழப்புக்கள்அல்லது புதிய குடும்ப அலகுகளின் உருவாக்கம் என்பவற்றுடன் மாற்றமடைந்து வருகின்றது என்பதும் மற்றொரு முக்கியமான உண்மையாகும்.

**குடும்ப இயங்கியல் :** குடும்ப இயங்கியலை எடுத்து விளக்குவதற்காக, ஒரு புதிய குடும்பத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் புதிய தம்பதியினருடன் ஆரம்பிப்போம். இங்கு இரு வேறுபட்ட குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருவர் தமது ஆரம்ப குடும்பங்களை விட்டு விலகி, ஒரு புதிய குடும்பத்தை உருவாக்குவதற்காக ஒன்றிணைந்துள்ளார்கள். இந்த நிகழ்வுப்போக்கில் பல சமூக, உளவியல் செயற்பாடுகள் சம்பந்தப்பட்டுள்ளன. ஒருவரை ஒருவர் பரிச்சயம் செய்து கொள்ளல் (பரஸ்பரம் விட்டுக்கொடுத்தல்) மூலக் குடும்பத்தில் இருந்து பிரிதல், பெற்றோருடன் வித்தியாசமான உறவு முறைகளைப் பேணி வருதல், சகாக்கள் மற்றும் வாழ்க்கைத் துணையின் சகோதர சகோதரிகளுடன் உறவுகளை வைத்துக் கொள்ளல் என்பவற்றை உதாரணங்களாகக் கூற முடியும். இது தவிர, வேலை, கடமைகள், ஓய்வு நேர நடவடிக்கைகள் மற்றும் நண்பர்கள் என்பவற்றிலும் கூட ஒருவகையான மீள் ஒழுங்குபடுத்தல் முறையொன்று அவசியப்படுகின்றது. மேலும், ஒரு புதிய குடும்பத்தின் உறுப்பினர்கள் இருவரும் தமது வாழ்க்கைத் துணையின் குடும்பங்களுடன் தொடர்புகளை உருவாக்கிக் கொள்ள வேண்டியிருப்பதுடன், சம்பந்தப்பட்ட அந்தக் குடும்பங்கள் தமது உறுப்பினர் ஒருவரின் பிரிவுக்கு ஏற்ப அனுசரித்துச் செல்ல வேண்டியும் உள்ளது. குழந்தை பிறக்கும் பொழுது, பராமரிப்புத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு வாழக்கைத் துணையின் கருமங்கள் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். இந்த நிலையில், இருவரைக் கொண்ட ஓர் அமைப்பு மூவரைக் கொண்ட ஓர் அமைப்பாக அபிவிருத்தி அடைகின்றது. இது மிக முக்கியமான ஓர் கட்டமாக இருந்து வருவதுடன், இக்கட்டத்தில் பெற்றோர் இருவரிடமும் பாரிய அளவிலான சமூக, உளவியல் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது. குழந்தை படிப்படியாக வளர்ச்சியடைந்து, பாடசாலைக்குச் சென்று, இளைஞனாகவும் பின்னர் வயது முதிர்ந்தவனாகவும் மாற்றம் அடையும் பொழுது குடும்பக் கட்டமைப்பு கணிசமான அளவில் மாற்றமடைய வேண்டி உள்ளதுடன், பெற்றோர் பெருந்தொகையான பொறுப்புக்களையும் ஏற்க வேண்டியுள்ளது. தற்பொழுது எமது கலாசாரத்தில் பள்ளிக்கல்வி, பரீட்சைகள், உயர்கல்வி, வேலை வாய்ப்பு, சகாக்களின் குழுக்கள் போன்ற காரணிகளின் செல்வாக்கினால் இந்தக் கட்டம் மிக முக்கியமான ஒரு கட்டமாக மாற்றமடைந்துள்ளது. வயது வந்தவனாக வளர்ச்சி அடையும் பிள்ளை, பின்னர் தனக்கென ஒரு புதிய குடும்பத்தை உருவாக்கிக் கொள்வதற்காக தான் பிறந்து வளர்ந்த குடும்பத்தைப் பிரிந்து செல்ல வேண்டி உள்ளது. இச்சக்கரம் இவ்விதமாக இடையறாது சுழல்கிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் சமத்துவத்தைப் பேணிவருவதற்காக அக்குடும்ப உறுப்பினர்கள் ஒரே மாதிரியிலான கொடுக்கல் வாங்கல் முறைகளை வளர்த்துக் கொள்கிறார்கள். அதாவது, ஒவ்வொரு உறுப்பினரும் ஏனைய உறுப்பினர்களின் நடத்தையைத் துண்டி கண்காணித்து வருவதுடன், முன்னைய நடத்தை மாதிரிகளின் செல்வாக்குக்கும் உட்படுகின்றனர். இந்த கொடுக்கல் வாங்கல் மாதிரிகள், பல குடும்ப நிலைமைகளை ஒழுங்குபடுத்தும் ஒன்றுக்கொன்று குறைநிரப்புச் செய்யும் தேவைகளின் ஒரு கட்புலனாகாத தொகுதி ஒன்றை உருவாக்குகின்றது.

ஒரு குடும்பத்தினைப் பொறுத்தவரையில் இரு முக்கிய கருமங்கள் இருந்து வருகின்றன. இதில் ஒன்று உள்ளக கருமமாகும்; அதாவது அதன் உறுப்பினர்களின் உளவியல், சமூக பாதுகாப்பாகும். அடுத்தது வெளிக் கருமம்; அதாவது, குறிப்பிட்ட கலாசாரத்தில் இடமளிப்பதும் அந்தக் கலாசாரத்தை ஊடுகடத்துவதும். குடும்பம் அதன் உறுப்பினர்களிடையே சுயதன்மையைப் பதியச் செய்கின்றது.

இனம் காண்பது தொடர்பான மானுட அனுபவம் இரு கூறுகளைக் கொண்டுள்ளது. தான் ஒன்றுக்கு சொந்தமாக இருந்து வருகின்றோம் என்ற உணர்வும் தனித்த ஒரு கூறாக இருந்து வருகின்றோம் என்ற உணர்வும் ஆகும். இந்த இரு அம்சங்களையும் ஒன்றாகக் கலப்பது ஒரு குடும்பத்தின் பணியாகும். சமூகமயப்படுத்தல் குறித்த இந்த தொடக்க நிகழ்வுப்போக்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையும், நடத்தையும் தன்னை அடையாளம் காட்டுவது தொடர்பான அதன் உணர்வும் குடும்பத்தினால் வார்க்கப்பட்டு ஒழுங்குபடுத்தப் படுகின்றது. குடும்பக் குழுவுக்குள் பிள்ளையை ஒரு பாகமாக ஏற்றுக் கொள்வதுடன், தான் ஒன்றுக்கு சொந்தமாக இருக்கின்றேன்' என்ற உணர்வு தோன்றுகின்றது. ஒவ்வொரு குடும்ப உறுப்பினரதும் அடையாள உணர்வு குறிப்பிட்ட ஒரு குடும்பத்திற்கு தான் சொந்தமாக இருக்கின்றோம் என்ற உணர்வினால் செல்வாக்குப் படுத்தப்படுகின்றது.

பல்வேறு குடும்ப சூழ்நிலை களில், பல்வேறு குடும்ப உபமுறை களில் பங்குபற்றுவதற்கு ஊடாகவும் குடும்பத்திற்கு வெளியிலான நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கு ஊடாகவும் தனித்துவ உணர்வும் தனிநபர் உணர்வும் ஏற்படுகின்றன. பிள்ளையும் குடும்பமும் சேர்ந்து வளர்ந்து வரும் பொழுது, பிள்ளையின் தேவைகளைக் குடும்பம் நிறைவு செய்து வைக்கும் அளவு,ஒரு தனிநபர் என்ற முறையில் அந்தப் பிள்ளை அனுபவித்து வரும் தன்னாதிகத்தின் எல்லைகளை வரையறுக்கின்றது. அந்த நிலையில், குறிப்பிட்ட பிள்ளைக்கென ஓர் உளவியல் மற்றும் கொடுக்கல் வாங்கல் தொடர்பைக் கொண்ட ஒரு பிரதேசம் உருவாக்கப்படுகின்றது. எனினும், ஒவ்வொரு தனி நபரினதும் சுய அடையாள உணர்வு பல்வேறு குழுக்களுக்கும் தாம் சொந்தமாக உள்ளோம் என்ற உணர்வில் இருந்தே தோன்றுகிறது.

மேலும், குடும்பம் சமூகத்திற்கு ஏற்ப தன்னை அனுசரித்துச் செல்ல வேண்டி உள்ளதுடன், அதன் கலாசாரத்தின் தொடர்ச்சியையும் ஓரளவுக்கு உறுதிப்படுத்த வேண்டி உள்ளது. சமூகம் மாற்றமடைந்து வரும் பொழுது, குடும்பத்தின் கருமங்கள் தொடர்பான கருதுகோள்களும் மாற்றமடைகின்றன. சில சந்தர்ப்பங் களில், நகர்ப்புற இலங்கையில் தீவிரமாக மாற்றமடைந்து வரும் கலாசாரத்தை ஒத்த சில கலாசார அமைப்புக்கள் குடும்பத்தை ஓர் இடையூறாகக் கருதுகின்றன. பல கலாசாரங்களில் கொந்தளிப்பு நிலவி வந்த கால கட்டங்களில் (ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இடம்பெற்றது போல) குடும்பம் என்ற அமைப்பு தாக்குதல் களை எதிர் கொண்டது. பெண்ணிலை வாத இயக்கங்க்ள, குடும்பத்தினை, ஆணாதிக்கத்தின் ஓர் அங்கமாக நோக்கி வருகின்றன.

குடும்பத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை அனுசரித்துச் செல்லும் போருட்டு, சமூகம் குடும்பத்திற்கு வெளியிலான புதிய கட்டமைப்புக்களை வளர்த்தெடுக்க வேண்டி உள்ளது. வேலைக்குச் செல்லும் பெற்றோரின் பிள்ளைகளைக் கவனித்துக் கொள்வதற் கென உருவாக்கப்பட்டுள்ள பகல் நேர பராமரிப்பு நிலையங்கள் இதற்கான ஓர் உதாரணமாகும். பிள்ளையை சமூகமயமாக்கும் அதன் பங்கினைக் குடும்பம் படிப்படியாகக் கையுதிர்த்து வருகிறது. வளர்ந்த பிள்ளைகளுக்கான வழிகாட்டுதல் மற்றும் கல்வி என்பவற்றை பாடசாலைகளும் தொடர்பு சாதனங்களும் சகாக்களைக் கொண்ட குழுக்களும் இப்பொழுது படிப் படியாகப் பொறுப்பேற்று வருகின்றன. இந்த வகையில் ஒரு தலைமுறை இடைவெளி உருவாக்கப்படுகின்றது.

**மாற்றம்** : மாற்றம் என்பது எப்பொழுதும் சமூகத்தில் இருந்து குடும்பத்தை நோக்கி செல்கின்றது. மறுவழியில், அதாவது குடும்பத்தில் இருந்து சமூகத்தை நோக்கி அது செல்வதில்லை. குடும்பம் மாற்றம் அடைய முடியும். ஆனால், தீவிரமாக மாற்றமடைந்து வரும் சமூகங்களுக்கான மிகச் சிறந்த மானுட அலகாக அது இருந்து வருவதனால் அது தொடர்ந்தும் நிலைத்து இருக்கும். குடும்பம் என்பது நிலைமாற்றக் கட்டத்தில் இருந்து வரும் திறந்த ஓர் அமைப்பாகும். அதாவது, அது இடையறாது குடும்பத்திற்கு வெளியே உள்ள அமைப்புக்கு உள்ளீடுகளை அனுப்பிக் கொண்டும் அதிலிருந்து உள்ளீடுகளைப் பெற்றுக் கொண்டும் இயங்கி வருகின்றது. அது எதிர்நோக்கும் பல்வேறுபட்ட அபிவிருத்திக் கட்டங்களின் தேவை களுக்கு ஏற்பவும் தன்னை சீர் செய்து கொள்கின்றது.

சாதாரண குடும்பம் குறித்து தற்பொழுது நிலவி வரும் இலட்சிய ரீதியான கண்ணோட்டம் அது மன உளைச்சலை எடுத்து வருவதில்லை என்பதாகும். ஒற்றுமையுடனும் நல்லிணக்கத்துடனும் ஒருவருடன் ஒருவர் ஒத்துழைத்து வாழும் மக்களைக் கொண்ட ஒரு சித்திரமே குடும்பம குறித்து பொதுவாகத் தீட்டிக் காட்டப்படுகின்றது. ஆனால், சாதாரண குடும்பங்களில் ஓரளவுக்கு மன உளைச்சலும் பிரச்சினைகளும் இருந்து வர முடியும். குறிப்பிட்ட ஒரு சமூக பின்புலத்தில் இயங்கிவரும் ர் அமைப்ட எனற முறையில் குடும்பம் தொடர்பாக மூன்று கூறுகளை அடையாளம் காண முடியும்:

அ) குடும்பத்தின் கட்டமைப்பு, நிலைமாற்றத்தில் உள்ள ஒரு திறந்த சமூக, கலாசார முறையாக உள்ளது.

ஆ) குடும்பம் பல்வேறு கட்டங்களுக்கு ஊடாகவும் வளர்ச்சியடைந்து செல்கின்றது. இந்த வளர்ச்சிக் கட்டங்களின் போது மீளமைப்பு அவசியமாகின்றது.

இ) தொடர்ச்சியைப் பேணி வருவதற் காகவும், ஒவ்வொரு உறுப்பி னரதும் உளவியல், சமூக வளர்சியை மேம்படுத்துவதற் கெனவும், குடும்பம், மாற்றமடைந் துள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்ப அனுசரித்துச் செல்கின்றது.

**குடும்பக் கட்டமைப்பு** : குடும்பக் கட்டமைப்பு என்பது, குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் எதிர்விளைவு காட்டும் முறையை ஒழுங்குபடுத்தும் கட்புலனாகாத கருமங்களின தேவைகளைக் கொண்ட ஒரு தொகுதியாக உள்ளது. குடும்பம் என்பது கொடுக்கல் வாங்கல் மாதிரிகளுக்கு ஊடாக இயங்கி வரும் ஒரு முறையாகும். திரும்பத்திரும்ப பெற் கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் இந்த அமைப்பை நன்கு ஸ்தாபிதம் செய்கின்றன. உதாரணமாக, ஒரு தாய் தேனீர் அருந்துமாறு தனது பிள்ளையிடம் கூறும்போது, பிள்ளை அக்கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடக்கிறது. இந்த செயலும் எதிர்ச் செயலும் ஒரு பிள்ளைக்கு தன்னைப் பொறுத்த வரையில் அந்தத் தாய் எத்தகைய உறவைக் கொண்டுள்ளார் என்பதையும் தாய் தொடர்பாக தான் எத்தகைய உறவைக்கொண்டுள்ளோம் என்பதையும் வரைவிலக்கணப்படுத்துகின்றது. இந்த அடிப்படையிலான தொடர்ச்சியான செயற்பாடுகள் கொடுக்கல் வாங்கல் முறையொன்றை ஸ்தாபித்து விடுகின்றது.

கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் குடும்ப உறுப்பினர்களின் நடத்தையை

( 26 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்முகம்

# 'குடும்ப அலகு சிதைவடைவதற்கு இப்பொழுது புதிய காரணிகள் பங்களிப்புச் செய்து வருகின்றன'

## என்கிறார் டாக்டர் ருவன் ஏக்கநாயக்க

**கேள்வி : உங்களைப் போன்ற முன்னணி இருதய சிகிச்சை நிபுணர் ஒருவர் இன்றைய சமூகத்தில் குடும்ப உறவு நிலைகள் தொடர்பான விடயத்தில் ஆர்வம் கொண்டு இருப்பது வழமைக்கு மாறானதாக இல்லையா? தடுப்பு மருத்துவத்தில் நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையுடன் இந்த ஆர்வம் பிணைக்கப்பட்டுள்ளதாக நான் கருதலாமா?**

**பதில் :** ஆம்; அப்படித்தான். தடுப்பு மருத்துவத்திலேயே நாங்கள் கவனம் செலுத்துகிறோம். நாங்கள் ஒரு நோயாளிக்கு எந்த அளவுக்கு சிகிச்சை அளிக்கின்றோமோ அந்த அளவுக்கு அதிகமான பிரச்சினைகளை உருவாக்கிக் கொள்கின்றோம் என்பதே எனது கருத்தாகும். இன்றைய உயர் தொழில்நுட்ப மருந்துகளில் பெரும்பாலானவை ஒரு வியாதிக்குப் பதிலாக மற்றொரு வியாதியை எடுத்து வரும் என சிலர் நம்புகிறார்கள். உதாரணமாக, இருதய நோயை எடுத்துக் கொள்வோம். இருதய அடைப்புக்களை சரி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் அறுவைச் சிகிச்சைகளில் 12 சதவீதமானவை மீண்டும அடைப்பினை எடுத்து வருகின்றன. இரண்டாவது இருதய அறுவைச் சிகிச்சை மிகச் சிரமமானது என்பதனை நாம் அறிவோம். அது எந்த வகையிலும் ஆயுள் நீடிப்புக்கு பங்களிப்புச் செய்வதில்லை. இரண்டாவது மூன்றாவது அறுவை சிகிச்சைகள் நோய்க் குறிகளை மட்டுமே தடுத்து நிறுத்தும். இக்காரணத்தி னால் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த சில நோயாளிகள் இருதய அறுவை சிகிச்சையை ஏற்க மறுக்கிறார்கள். தனிப்பட்ட காரணங்களுக்காக இத்தகைய அறுவை சிகிச்சைகளை மறுத்துள்ள நோயாளிகளுக்கு கலிபோர்னியாவைச் சேர்ந்த டாக்டர் லீன் ஓர்னிலீ போன்றவர்கள் தமது சொந்த நோய்த் தடுப்பு முறைகளைக் கொண்டு சிகிச்சை அளித்து வருகின்றார்கள். அவர் மன உளைச்சலை நிவர்த்திக்கக்கூடிய கொழுப்புச் சத்து குறைந்த உணவுத் திட்டமொன்றை ஏற்பாடு செய்துள்ளதுடன், இவ்விரண்டினையும் சரியான வாழ்க்கை முறைகளுடன் இணைத்துள்ளார். இந்நோயாளிகள், அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நோயாளிகளிலும் பார்க்க நல்ல முறையில் இருந்து வருகின்றார்கள் என்பதனை ஆய்வுகள் காட்டுகின்றன.

**கேள்வி : மிக உறுதியான உடற்கூற்று அடிப்படைகளைக் கொண்ட நோய்களும் கூட உளவியல் வேர்களை தம்மகத்தே கொண்டுள்ளன என்றும், அத்தகைய நோய்கள் இப்பொழுது அதிகரித்து வருகின்றன என்றும் நீங்கள் நம்பி வருவதாகத் தெரிகிறது?**

**பதில் :** ஆம். இருதய நோய்கள், நுரையீரல் நோய்கள் போன்றவை சிறு குடும்ப அலகின் சமூக ஆதிக்கம் அழிக்கப்பட்டுள்ள நாடுகளில் அதிகரித்து வந்துள்ளன. ஒவ்வொரு சமூகத்திலும் குடும்பத்தின் பாரம்பரிய பாத்திரம் இப்பொழுது சீர்குலைந்து வருகிறது. இது குடும்பத்தின் உலகளாவிய அழிவு என அழைக்கப்படுகிறது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் இப்பொழுது நாம் அவதானித்து வரும் ஒரு முக்கிய விடயம் தாழ்ந்த சமூகப் பொருளாதார மட்டங்களைச் சேர்ந்த நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகும். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தின் போது இந்த நோய்களில் பெரும்பாலானவை வசதிபடைத்த மக்களின் நோய்களாகவே இருந்து வந்தன. உதாரணமாக, இருதய நோய் பணக்காரர்களின் நோய் என முன்பு கூறப்பட்டு வந்தது. ஆனால், இப்பொழுது அந்த நிலை இல்லை. உலகம் பூராவிலும் கீழ் மட்ட சமூக, பொருளாதாரப் பிரிவுகளிடையே இருதய நோய்கள் பெருகி வருவதனை இப்பொழுது நாம் அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக,இப்பொழுது 25-55 வயதுத் தொகுதியினரிடையே இந்நோய் ஏற்பட்டு வருவதனைக் காண முடிகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் முப்பது வயதுக்குக் குறைந்த சுமார் 20 நோயாளிகளுக்கு நாங்கள் சிகிச்சை அளித்து வந்துள்ளோம். இந்த நோயாளிகள், கிராமியப் பிரதேசங்களில் இருந்து நகரப் பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்து வந்து நிலைமாற்ற கட்டத்தில் இருந்து வந்த நபர்களாக இருந்தனர்.

சிக்கலான சமூகமொன்றின் நாளாந்த வாழ்க்கை எடுத்துவரும் மன உளைச்சல்களும் புதிய சூழலுடன் அனுசரித்துச் செல்லும் பிரச்சினைகளும் அநேகமாக சமூகத்தில் இத்தகைய நோய்களுக்கு ஆளாகும் பிரிவினரிடையே ஒரு மாற்றம் இடம்பெறுவதற்கு வழிகோலி இருக்க முடியும். அன்றாட வாழ்க்கையின் உளைச்சல் உடலின் இரசாயனத்தை மாற்றியமைக்கிறது. இந்த வகையைச் சேர்ந்த நோயாளி உணர்வு ரீதியாகவும் நடத்தை ரீதியாகவும் முதிர்ச்சி அற்றவராக இருந்து வருவதுடன், புகைபிடித்தல் மதுப்பழக்கம் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார். வேறு அபாய ஏதுக் காரணிகள் ஏதும் இல்லாத ஆட்களுக்கு இது பொருந்துகிறது. புகைபிடிக்கும், மது அருந்தும், அதிக அளவில் உணவு உட்கொள்ளும் ஆட்கள் அல்லது குறிப்பிட்ட ஒரு வியாதியை மரபு வழியில் கொண்டிருக்கும் ஆட்கள் என்போரைப் பொறுத்தவரையில் அந்தந்த அபாய ஏதுக்கள் செயற்படுகின்றன. எனினும், இளவயதுப் பிரிவினரை பொறுத்தமட்டில் மரபு வழிக்கூறு செயற்படுவது இல்லை.

ஐரிஷ் இரட்டையர்கள் தொடர்பாக மிகவும் சுவாரஷ்யமான ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. உருளைக் கிழங்குப் பஞ்சத்தின் போது இவர்களில் ஒருவர் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்து சென்றார். அடுத்தவர் அயர்லாந்திலேயே தங்கிவிட்டார். எனவே, சில ஆராய்ச்சியாளர்கள் அவர்களுடைய மரபு வழி சார்ந்த நோய்வாய்ப்படும் தன்மையைக் கண்டறிந்துகொள்ள முயன்றார்கள். அமெரிக்காவில் வாழ்ந்த இரட்டையர்களில் ஒருவர், உயர் அளவில் போட்டி நிலவி வந்த அச்சமூகத்தில் பெருமளவுக்கு மன உளைச்சல் கொண்ட நிம்மதியற்ற வாழ்க்கை ஒன்றைக் கழித்து வந்தார். மறுபுறத்தில், அயர்லாந்தில் தங்கி இருந்தவர் மிகவும் நிம்மதியான, அமைதியான முறையில்தனது வாழ்க்கையைக் கழித்தார். அதனால் இருதய நோய்களுக்கு ஆட்படும் அவருடைய தன்மை அமெரிக்காவில் வாழ்ந்த தனது சகாவின் விகிதத்திலும் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவாகவே இருந்தது. மரபியல் ரீதியில் ஒருவரின் நோய்வாய்ப்படும் தன்மை முன்னரேயே தீர்மானிக்கப்பட்டு இருந்த போதிலும், வாழ்க்கை மாதிரியில் ஏற்படும் மாற்றம் நோய் தோன்றும் நிலையில் தாக்கத்தை எடுத்து வர முடியும் என்ற உண்மையை சுட்டிக் காட்டிய இந்த ஆய்வு மிகுந்த முக்கியத்துவம் பெற்ற ஓர் ஆய்வாக கருதப்படுகின்றது.

மன உளைச்சல், மரபியல் போக்குகள் தம்மை வெளிப்படுத்தக்கூடிய ஒரு நிலையைத் தோற்றுவிக்கிறது. சாதாரண குடித்தொகையில் மன உளைச்சலுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்உயிர் இரசாயன மாற்றங்களை எடுத்து வருவதில் இருந்து இதனைக் காண முடிகின்றது. விவாகரத்து, வேலை இழப்பு, வீடிழப்பு போன்றவை இருதய நோய்கள் அதிகரித்த அளவில் தோன்றுவதற்கு வழிகோலுகின்றன.

குடும்பத்தில் சீர்குலைவை எடுத்து வந்துள்ள மற்றொரு காரணி போரும் அதனுடன் சம்பந்தப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளும் ஆகும். ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது தமது கணவர்களை இழந்த 40-45 வயதுத் தொகுதிகளைச் சேர்ந்த பெண்களையும், வடபுலத்தில் தமது பிள்ளைகள் பணிபுரியும் 50-60 வயதுத் தொகுதிகளைச் சேர்ந்த பெண்களையும் நாம் கொண்டுள்ளோம். இருதய நோயை எடுத்து வரக்கூடிய வேறு அபாய ஏதுக்கள் அவர்களிடம் இல்லை; ஆனால், அவர்கள் இருதய நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இப்பொழுது தென் மாகாணத்தில் நான் சிகிச்சை அளித்து வரும் பெண் நோயாளர்களில் பெரும்பாலானவர்கள், தமது குடும்ப அலகுகளின் சீர்கலைவின் விளைவாக அவர்கள் இப்பொழுது சந்தித்துக் கொண்டிருக்கும் சமூகப் பிரச்சினைகளின் காரணமாகவே மன உளைச்சலுடன் தொடர்புபட்ட உபாதைகளை அனுபவித்து வருகின்றனர்.

இந்த நூற்றாண்டில் விவாகரத்துக்கள் 700% மாக அதிகரித்து வந்திருப்பதனை உலகளாவிய புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. விவாகரத்துக்களுடன் சம்பந்தப்பட்ட இத்தகைய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளை நோக்கினால் இது அவர்களின் வளர்ச்சியில் ஒரு தாக்கத்தை எடுத்து வந்துள்ளது என்பதனை நீங்கள் அவதானிக்க முடியும். உதாரணமாக, அவர்களுடைய உடல் வளர்ச்சி மந்தமடைந்து இருப்பதுடன், கல்விச் செயற்பாடுகளும் திருப்திகரமாக இருப்பதில்லை. அவர்களிடையே தற்கொலை விகிதமும் உளவியல் நோய்கள் தோன்றக்கூடிய அபாயமும் மிக உயர்வாக காணப்படுகின்றது. விவாகரத்து குடும்பங்களைச் சேர்ந்த 10-14 வயதுப் பிரிவினரிடையேயான தற்கொலை விகிதம் இரட்டிப்பாகவும் 15-19 வயதுத் தொகுதியினரின் தற்கொலை விகிதம் மும்மடங்காகவும் அதிகரித்து வந்திருப்பதனை உலகப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் தற்கொலைகளுக்கான காரணம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மன முறிவிலும் பார்க்க பழிவாங்கும் மனப்போக்காகவே இருந்து வருகின்றது. மற்ற நபரை வருத்தவும் குற்ற உணர்வு கொண்டவராக இருக்கச் செய்து தண்டிக்கும் நோக்குடனுமேயே இங்கு பெரும்பாலான தற்கொலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

***கேள்வி : இருதய ஆநாய்கள் தோன்றுவதற்கான சராசரக்ஷ வயது வீழ்ச்சியடைந்துள்ளது என்று கூறுகின்றீர்களா ? பொதுவாக 40-45 வயதுப் பிரிவினரே இந்த அபாயத்தை அதிக அளவில் கொண்டுள்ளனர் என நான் கருதுகின்றேன் ?***

பதில் : பெண்களைப் பொறுத்தமட்டில் சராசரி வயது 40-45 ஆக உள்ளது. ஆனால், நான் இளவயதுத் தொகுதியினரிலேயே அதிக அளவுக்கு கவனம் செலுத்துகிறேன். இது இன்னமும் அபாய மட்டங்களை எட்டவில்லை. ஆனால், படிப்படியாக அதிகரித்து வருவதற்கான அறிகுறிகளை நாங்கள் கண்கிறோம். மேலும், இப்பிரச்சினையை இப்பொழுது தான் நாங்கள் உணரத் தொடங்கியுள்ளோம். ஏனென்றால், பொதுவாக ஒரு இருதய நோயாளி சிகிச்சைக்கு வரும் பொழுது அவருடைய உணவுப் பழக்கம், புகை பிடித்தல், மன உளைச்சல் மட்டங்கள் போன்ற அபாய ஏதுக்களை மட்டுமே நாங்கள் நோக்குகிறோம். ஆனால், பரிசோதனைகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்ட பின்னர் அனைத்துமே சாதாரண மட்டங்களில் இருப்பது தெரிய வருகிறது. அப்பொழுது அவருக்குள்ள அபாய ஏதுக் காரணி எது என்பது குறித்து நாங்கள் யோசிக்க வேண்டியுள்ளது. இப்பொழுது பாரம்பரிய அபாய ஏதுக்கள் மறைந்து அவற்றினிடத்தில் புதிய அபாய ஏதுக்கள் தோன்றி வருகின்றன. இவை முக்கியமாக குடும்ப அலகின் சீர்குலைவுடன் சம்பந்தப்பட்டவையாக இருந்து வருகின்றன என்பதே எனது கருத்தாகும்.

விவசாயம் சார்ந்த சமூகங்களில் மக்கள் நிலத்தின் மீது தங்கியிருப்பதனால், அவர்கள் நிரந்தரமாக ஒரே இடத்தில் வசித்து வருகிறார்கள். ஆனால், கைத்தொழில் சமூகத்தைப் பொறுத்தவரையில் மக்கள் இவ்விதமாக ஒரே இடத்தில் நிரந்தரமாக தங்கியிருக்க முடிவதில்லை. அவர்களுடைய நகர்வு அடிக்கடி இடம் பெறுகிறது. கைத்தொழில் சமூகம் ஒன்றில் எமது மக்கள் மகிழ்ச்சியாக வாழ்வார்களா என்று எனக்குத் தெரியாது. ஆடைக் கைத்தொழிலை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்; காலியில் சிகிச்சை அளித்து வரும் எந்த ஒரு மருத்துவரும் தினசரி குறைந்தது 5-6 இளம் பெண்களாவது தம்மிடம் நெஞ்சுவலி அல்லது வேறு ஏதேனும் வியாதிகளுக்கு சிகிச்சைக்கு வருவது வழமையாக உள்ளது என்பதனைக் கூறுவார்கள். அக்கைத்தொழிலில் வேலை செய்வதனால் தோன்றக் கூடிய மன உளைச்சல் அவர்களுடைய சகிப்புத் தன்மைக்கும் அப்பாற்பட்டதாகும். ஒரு நாளைக்கு மொத்தமாக சுமார் 15-20 வையரயான யுவதிகளுக்கு இந்த மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் ஆடைத்தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களாவார்கள். சம்பந்தப்பட்ட கோளாறு உளவியலுடன் தொடர்புபட்டது என்பதனை உறுதி செய்து கொள்வதற்கு முன்னர் எக்ஸ்ரேக்கள், ஈசீஜீ பரிசோதனைகள், இரத்த சோதனைகள் என் எவ்வளவு பெருந்தொகையான மூலவளங்களை விரயம் செய்ய வேண்டியுள்ளது. மன உளைச்சலை சகித்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு எமது மக்கள் பயிற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை; அல்லது அவர்கள் அந்த அளவுக்கு பக்குவப்பட்டிருக்கவில்லை. கிராமத்தில் வாழும் மக்கள் எழுத்தறிவு பெற்றவர்களாகவும் நன்கு படித்தவர் களாகவும் இருந்து வந்த போதிலும் கைத்தொழில் சூழல் ஒன்றுக்குள் வரும் பொழுது அது எடுத்து வரக்கூடிய மன உளைச்சலினை சகித்துக்கொள்ளும் திறன் அவர்களிடம் இருப்பதில்லை. இந்த மன உளைச்சலின் வெளிப்பாடுகளாக வேறு நோய்கள் தோன்றுகின்றன. மனிதன் ஒரு சமூகப் பிராணியாக இருந்து வருகின்றான் என்ற உண்மையை இங்கு நான் வலியுறுத்த வேண்டும். குடும்ப கட்டமைப்புக்கூடாக இந்த உள்ளுணர்வு வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. சமூகம் என்பது பரந்த மட்டத்திலான குடும்ப மாகும்.

***கேள்வி : குடும்பச் சீர்குலைவு, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவு இப்பொழுது சீரழிந்து***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது என்பதனை எடுத்துக் காட்டுகின்றதா ?

பதில் : அநேகமாக இது சீரழிந்து கொண்டுதான் வருகிறது. ஆனால், பெருமளவுக்கு மேலைத்தேசமயமாகியுள்ள குடும்பங்களில் இச்சீரழிவு நிச்சயமாக இடம்பெற்றுள்ளது. இந்நாட்டில் விவாகரத்து என்பது அவ்வளவு பெரிய ஒரு பிரச்சினையாக இருந்து வரவில்லை என்றாலும் கூட, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான தொடர்புகள் வரவர நலிவுற்று வருகின்றன. குடும்ப வருமானத்திற்கும் குறைநிரப்புச் செய்யும் பொருட்டு பெரும்பாலான தாய்மாழ வேலைக்குச் செல்லும் நிலையில் வீட்டைக் கவனித்துக் கொள்வதற்கு அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. இலங்கையில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் தொடர்பு ஏற்படும் நேரத்தின் அளவு கணிக்கப்பட்டு இருப்பதாகத் தெரியவில்லை. அமெரிக்காவில் ஒரு தந்தை தனது பிள்ளைகளுடன் நாளொன்றுக்கு 40 வினாடிகள் மட்டுமே தொடர்பு கொள்வதாகக் கூறப்படுகிறது.

உதாரணமாக, நீங்கள் இப்பொழுது சிங்களப் பத்திரிகைகளை வாசித்தால் (ஆங்கிலப் பத்திரிகைகளில இந்தச் செய்திகள் வருவதில்லை) தமது புதல்விகளை பாலியல் ரீதியில் துஷ்பிரயோகம் செய்யும் தந்தைமாரின் அளவு இலங்கையில் அசாதாரணமான அளவில் உயர்ந்து வருவதனை காண்பீர்கள். மேலைத்தேச பத்திரிகைகளில் இந்த அளவுக்கு இத்தகைய சம்பவங்களை நான் வாசித்ததில்லை. இது ஓர் அண்மைக்கால மாற்றமாக இருந்து வருகின்றது. குடும்பம் மிகவும் நெருக்கமாக பிணைக்கப்பட்டிருந்தால், குடும்ப அலகு உறுதியானதாக இருந்து வந்தால் இத்தகைய சம்பவங்கள் ஒருபோதும் நிகழ முடியாது.

இத்தகைய சூழ்நிலைகளில் நாங்கள் அவதானிக்கும் மற்றொரு அம்சம், தொழில் செய்வதற்காக தாய் வெளிநாடு செல்வதன் விளைவாக குடும்பத்தில் ஏற்படும் சீர்குலைவாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் தந்தையால் தனித்து வாழ முடிவதில்லை. அதனால் அவர் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பினை வளர்த்துக் கொள்கிறார். இது நாட்டில் சுகாதாரப் பிரச்சினைகளையும் தோற்றுவிக்க முடியும் குடும்பப் பிரச்சினைகள் குடும்பத்தின் உறுப்பினர்கள் மீது உளவியல் ரீதியான பிரச்சினைகளை எடுத்து வருகின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால், அவை எடுத்து வரக்கூடிய உடல் சம்பந்தமான கோளாறுகளின் மீது நாங்கள் அதிக அளவுக்கு கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

குடும்பம் என்பது, கால மாற்றத்தினால் அழியாத, பொருளாதார அடிப்படையில் மிகச் சிறந்த குழந்தை வளர்ப்பு வடிவம் ஒன்றாக உலகெங்கிலும் இருந்து வருவதாக பொதுவாகக் கூறப்படுகிறது. சுமார் 20 வயது வரையில் எந்த ஒரு மனிதப் பிறவிக்கும் தனது குடும்பத்தின் உளவியல் ரீதியான ஆதரவு அவசியமாகும். சுமார் 20 வயதின் பின்னர், பொதுவாக வாழ்க்கை துணையிடம் இருந்து இந்த ஆதரவு கிட்டுகிறது. பின்னர் 60-70 வயது கால கட்டங்களில், பிள்ளைகள், பிரதியுபகாரமாக பெற்றோருக்கு தமது ஆதரவை வழங்குகின்றார்கள். இலங்கையில் குடும்பம் என்பது நமது பாரம்பரிய விழுமியங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது. தாய்வழியில் விஸ்தரிக்கப்பட்ட குடும்பம் என்று அழைக்கப்படும் ஒருவகையான குடும்பத்தை நாங்கள் கொண்டுள்ளோம். ஆனால், ஆசியாவைப் பொறுத்தவரையில் தாய்வழியில் விஸ்தரிக்கப்பட்ட இந்தக் குடும்ப வகை இப்பொழுது இருந்து வரவில்லை. இதற்குக் காரணம் பாட்டியும் கூட வேலை செய்து இப்பொழுது ஓய்வு பெற்று இருப்பதாகும். முன்னரைப் போல அவர் வீட்டில் அடைந்து கிடப்பதில்லை. தாய் இப்பொழுது வீட்டில் இல்லை. ஒன்றில் அவர் வேலைக்குப் போகின்றார்; அல்லது மத்திய கிழக்குக்கு சென்றுள்ளார். இந்த நிலையில், தாய்வழி மேலாதிக்கம் இழக்கப்பட்டுள்ளது. எனவே, பிள்ளைகள் உண்மையான குடும்ப வாழ்க்கையின் மதிப்பினை அறியாதவர்களாக இப்பொழுது வளர்ந்து வருகின்றனர்.

**கேள்வி: இந்த மாற்றம் இலங்கையின் அனைத்துச் சமூகங்களிலும் ஏற்பட்டுள்ளதா ? மாற்றத்தின் எதிர்மறையாக தாக்கங்களைத் தடுத்து நிறுத்துவதற்காக முஸ்லிம் சமூகத்தைப் போன்ற ஒரு சில சமூகங்கள் விஸ்தரிக்க பட்ட குடும்ப அமைப்பொன்றைக் கொண்டுள்ளனவா ?**

பதில் : குறிப்பாக நான் மருத்துவத் தொழில் புரிந்து வரும் காலி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் முஸ்லீம்கள் பெருமளவுக்கு மாற்றத்தை விரும்பாதவர்களாக இருந்து வருகிறார்கள் என நினைக்கிறேன். ஆனால், உயர் அளவில் கல்வி கற்றுள்ள முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் இந்த விதமான குடும்ப அமைப்பு நிலவி வரவில்லை. குறைந்தளவுக்கு கல்விகற்ற வணிக சமூகங்களில் இதனைக் காண முடிகின்றது. இவர்கள் அனைவரும் சிறியதோ பெரியதோ ஒரே வீட்டிலேயே வாழ்ந்து வருகிறார்கள்; ஒருவர் மற்றவரின் பிள்ளைகளை கவனித்துக் கொள்கிறார்கள்.

**கேள்வி : புதிய வகையைச் சேர்ந்த குடும்ப அலகொன்றை நோக்கி தற்போதைய குடும்ப அலகு மாற்றமடைந்து வருகின்றது எனக் கருதலாமா?**

பதில் : குடும்ப அலகு இப்போழுது நிலைமாற்றம் அடைந்து வருகின்றது; ஆனால் இதற்கு ஆதரவான ஒரு பொறிமுறை இன்னமும் தோன்றவில்லை. முன்னர் குடும்பத்திற்கு ஆதரவாக இருந்து வந்த சமயச் சூழ்நிலையும் கூட இப்பொழுது வீழ்ச்சி கண்டு வந்துள்ளது. எவரும் வாழ்க்கையின் உண்மையான தத்துவத்தைக் கொண்டு இருக்கவில்லையாதலால், சமூகத்தின் ஒழுக்கப்போ;வை சீர்கெட்டு வருகின்றது. இனியும் பிழைத்து வாழ முடியுமா என்ற கட்டத்தை அது இப்பொழுது எட்டியுள்ளது.

மக்களுக்கு குடும்பம் அவசியமாக இருக்கவில்லை என்ற காரணத்தினால் குடும்பத்தின் சீர்குலைவு இடம்பெற்று வரவில்லை. அவர்களுக்கு குடும்பம் அவசியமாக உள்ளது. ஆனால், வாழ்க்கை நிர்ப்பந்தங்கள் காரணமாக, சமூகக் கட்டமைப்பு அவர்கள் குடும்ப அமைப்பில் இருந்து விலகிச் செல்வதற்கு தூண்டுகின்றது. ஆனால்,இது பிள்ளைகள் மீதும் அவர்களுடைய விழுமியங்கள் மீதும் தாக்கங்களை எடுத்துவரப் போகின்றது. பலவீனமான நிலையில் இருக்கும் குடும்ப உறுப்பினர்களைப் பராமரிக்கும் விடயத்தில் இன்னமும் எமது சமூகத்தில் ஒரு சாதகமான போக்கு இருந்து வருகின்றது. பொருளாதார ரீதியில் நலிவடைந்தவர்களை மட்டுமன்றி, உடல்ரீதியில் நலிவுற்றிருப்பவர்களையும் உறவினர்கள் சார்பு ரீதியில் நல்லமுறையில் கவனித்துக் கொள்கிறார்கள். மேலைய நாடுகளில் போல இத்தகைய நபர்கள் காப்பகங்களுக்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது வேறு ஏதேனும் மையங்களுக்கோ பெரும்பாலும் அனுப்பிவைக்கப்படுவதில்லை. தனிப்பட்ட உணர்வும, தனியான பாசமும் இன்னமும் அவ்வாறே இருந்து வருகின்றன என்றே கூறவேண்டும்.

**கேள்வி : முதியோர் காப்பகங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனைப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இது இலங்கையில் குடும்ப அமைப்பின் சீர்குலைவினை அல்லது இலங்கையின் வய்து முதிர்ந்த குடித்தொகையினரின் சதவீதம் அதிகரித்து வருகின்றது என்பதனை சுட்டிக் காட்டுகின்றதா?**

**பதில் :** இவ்விரண்டுமே இதற்குப் பங்களிப்புச் செய்து வருகின்றன என்று நான் கருதுகிறேன். அண்மையில் ரூபவாஹினியில் ஒரு நிகழ்ச்சி இடம் பெற்றது. மின்னேரியாவைச் சேர்ந்த விவசாயிகள் பேட்டி காணப்பட்டனர். இந்த விவசாயிகள் மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து வந்த போதிலும், தமது பிள்ளைகள் தமக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. இதற்குக் காரணம் பிள்ளைகளும் கூட சார்பு ரீதியில் வறுமை நிலையில் வாழ்ந்து வந்தமை ஆகும். நகரத்தில் வாழும் பிள்ளைகளைக் கொண்டுள்ள முதிய பெற்றோர்கூட, தமது பிள்ளைகளுக்குத் தாம் ஒரு சுமையாக இருப்பதற்கு விரும்பவில்லையாதலால் முதியோர் காப்பகங்களில் வாழ்வதற்கே விரும்புகின்றார்கள். பிள்ளைகள் தமது பெற்றோர்களை வைத்துக் கொள்வதற்கு விரும்புவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால், பிள்ளைகளிலும் பார்க்க இந்தக் காப்பகங்கள் முதியவர்களை நல்லமுறையில் கவனித்துக் கொள்ள முடியும் என்பதே எனது கருத்தாகும். ஆனால், அவர்கள் உணர்வு பூர்வமாக ஒரு தனிமை நிலையை அனுபவித்து வருவார்கள். ஆனாலும், அவர்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுவிடவில்லை. ஓரிரு விதிவிலக்குகள் இருப்பது உண்மைதான். ஆனால், சமூகம் ஒட்டுமொத்தமாக இதயமற்றதாக மாறிவிடவில்லை.

இப்பொழுது தமது பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் பெற்றோர் உணர்ந்து கொண்டுள்ளார்கள். சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் தம்மைப் பராமரிப்பது சாத்தியமில்லை என்பதும் அவர்கள் புரிந்து கொண்டுள்ளார்கள்.

குடும்ப விழுமியங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் குடும்பம் தரக்கூடிய பாதுகாப்பை அளிப்பதற்கும் என பதிலீடான நிறுவனம் ஒன்றை இதுவரையில் நாம் கண்டறியவில்லை. உண்மையிலேயே இதற்குப் பதிலீடு இல்லை. மேலைய நாடுகளில் இதற்கான பதிலீடு சமூகப் பாதுகாப்பும் சேமநல அரசும் ஆகும். எனினும், பொருள் சார்ந்த பின்னணியில் என்னதான் செய்யப்பட்டாலும் உணர்பூர்வமான குறையினை நிறைவு செய்ய முடியாது.

**கேள்வி : மாற்றத்தின் மோசமான விளைவுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு நீங்கள் ஏதாவது யோசனைகளை வைத்துள்ளீர்களா ?**

**பதில் :** ஆம். குடும்பம் மிகவும் முக்கியமானது என்பதை உணர்ந்து கொள்ளும் பொருட்டு குடும்ப அலகினைப் பலப்படுத்துவதற்கு உறுதியான ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது எனது முதலாவது யோசனையாகும். பிள்ளைகளின்அபிவிருத்தியில் குடும்ப அலகு வகித்து வரும் பங்கின் முக்கியத்துவத்தை மக்கள் சரிவர உணர்ந்து கொள்ள வேண்டும். சில சந்தர்ப்பங்களில், நாங்கள் ஒன்றினை முற்றிலுமாக இழந்துவிட்ட பின்னரே அதன் மதிப்பினை உணர்கிறோம். கணவனும் மனைவியும் பணம் தேடுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி வாழ்ந்து வர முடியும். ஆனால், இது அவர்களின் பிள்ளைகளின் வாழ்க்கையில் எதிர் மறையான தாக்கங்களை எடுத்து வரலாம். எனவே, நாம் சாதகமானது எனக்கருதும் ஒரு விடயத்தில் பாதகமான கூறுகளும் உள்ளன. இவை இரண்டுக்கும் இடையில் நாங்கள் ஒரு சமநிலையை எடுத்துவரவேண்டும்.

---

( 22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்குபடுத்துகின்றன. அவை இரு முறைகளுக்கு ஊடாக பராமரிக்கப்பட்டு வருகின்றன.

*1. மரபு சார்ந்தது :* குடும்ப அமைப்பை நிர்வகிக்கும் அகிலம் தழுவிய விதி முறைகள்; அதாவது, பெற்றோரும் பிள்ளைகளும் பல்வேறு அதிகார மட்டங்களைக் கொண்டிருக்கும் அதிகாரக் கட்டமைப்பு;

*2. தனிநபர்வாதம் :* குடும்ப அமைப்பு, உப முறைகளுக்கு ஊடாக அதன் கருமங்களைப் பிரித்து மேற்கொண்டு வருகின்றது. தனிநபர்கள் குடும்பம் ஒன்றுக்குள் இருக்கும் உபமுறைகள் ஆவார்கள். கணவன், மனைவி, தாய், பிள்ளை போன்ற பிணைப்புக்களும் உபமுறைகளாக இருக்க முடியும். மேலும், தலைமுறைகளாலும், பால் அடிப்படையினாலும் அக்கறைகளின் அல்லது பணிகளின் அடிப்படையினாலும் உபமுறைகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.

• ஒவ்வொரு தனி நபரும் பல்வேறுபட்ட உப குழுக்களைச் சேர்ந்தவர்களாக இருந்து வருகின்றனர். அந்த அமைப்புக்குள் ஒரு தனிநபர் அதிகாரத்தின வேறுபட்ட மட்டங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதுடன், வேறுபடுத்தப்பட்ட திறன்களையும் பயில்கின்றார். உதாரணமாக, ஒரு மனிதன் மகனாகவும் மருமகனாகவும் மூத்த சகோதரராகவும் இளைய சகோதரனாகவும் கணவனாகவும் தந்தையாகவும் பல்வேறு பாத்திரங்களை வகித்து வர முடியும். பல்வேறுபட்ட உபமுறைகளில் அவன் பல்வேறுபட்ட குறைநிரப்பு உறவுமுறைகளுக்குள் பிரவேசிக்கின்றான்.

*எல்லைகள் :* உப முறையொன்றின் எல்லைகள், பங்குபற்றும் தனிநபர்களைக் கட்டுப்படுத்தும் விதிமுறைகளாகும். இந்த உபமுறைகளில் எல்லைகளின் பணி இந்த அமைப்பின் வேறு படுதலைப் பாதுகாத்துக் கொள்வதாகும். சரியான முறையில் குடும்பம் செயற்பட்டு வருவதற்காக உப முறைகளின் எல்லைகள் தெளிவாக இருந்து வருவது அவசியமாகும். அவை உப அமைப்பின் உறுப்பினர்கள் அவசிய மற்ற தலையீடு இன்றி தமது பணிகளை மேற்கொள்வதற்கு இடமளிக்கக்கூடிய விதத்தில் திட்டவட்டமான முறையில் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதேவேளையில், உப அமைப்பின் உறுப்பினர்களுக்கிடையிலும் வெளி நபர்களுக்கிடையிலுமான தொடர்புக்கும் அது இடமளிக்க வேண்டும்.

முன்னர் குறிப்பிடப்பட்டதுபோல, குடும்ப முறைகளுக்குள் பெருந் தொகையான உபமுறைகள் இருந்து வருகின்றன: (அ) வாழ்க்கைத்துணை உப முறை, (ஆ) பெற்றோர் உபமுறை, (இ) பிள்ளை உபமுறை என்பன இவற்றில் முக்கியமானவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையும் பொருட்கள் மற்றும் சேவைகள் வரியும்

பி.குருகே

*திரு. பி.குருகே உள்நாட்டு இறைவரி பிரதி ஆணையாளராவதுடன் இலங்கை வரியியல் நிறுவனத்தின் இணை அங்கத்தவருமாவார். நிதியமைச்சின் கீழ் செயற்பட்ட பெறுமதிசேர் அபிவிருத்திப் பிரிவின் பிரதி ஆணையாளராக பணி புரிந்தபோது இலங்கையின் பெறுமதிசேர் வரி சட்ட மூலத்தைத் தயாரிப்பதில் அவர் முக்கிய பங்கு வகித்துள்ளார். இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் கட்டுரையாசிரியரின் சொந்தக் கருத்துக்களேயாகும்.*

இக்கட்டுரையானது உத்தேசிக்கப் பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் வரி (Goods and Services Tax - GST) தொடர்பில் கோட்பாட்டு ரீதியில் விபரமான விளக்கத்தைக் கொடுப் பதற்காகவன்றி, விசேடமாக இலங்கை தொடர்பாக குறிப்பிட்ட முக்கியமான சில நடைமுறைப்படுத்தல் சார்ந்த விடயங்களை ஆராய்வதையே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

பெறுமதிசேர் வரி/பொருட்கள் மற்றும் சேவைகள் (VAT/GST) வரி நவீன நுகர்வு வரியாக இருப்பதுடன், சார்பு ரீதியில் குறுகிய காலப் பகுதியில் அது உலகளாவிய ரீதியில் பரவலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 1970 க்கு முன்னர் பிரேசில், உருகுவே ஆகிய நாடுகளில் மட்டுமே முழுமையான பெறுமதிசேர் வரிமுறை செயற்பட்டு வந்தது; எனினும், 10 நாடுகளில் ஏதோ ஒரு குறித்த வடிவத்தில் இவ்வரிமுறை நடைமுறையிலிருந்து வந்தது. ஆனால், தற்போது ஏறத்தாழ 80 நாடுகளில் (முன்னர் சோவியத் யூனியனில் இருந்து புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் உட்பட) இப்புதிய வரிமுறை நடைமுறையிலுள்ளது. மேலும், 20 நாடுகள் இது தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. பொருளாதார ஒத்துழைப்புக்கும், அபிவிருத்திக்குமான அமைப்பில் (OECD) உள்ள ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் மட்டும் பெறுமதிசேர் வரி முறைக் குழுவில் இடம்பெறவில்லை. அதே வேளையில், பல வளர்முக நாடுகள் இவ்வரிமுறையினை நடை முறைப்படுத்தி வருகின்றன.

இலங்கையின் வரி நிர்வாகிகள் விற்பனை வரியின் நடைமுறைப்படுத்தல் மூலம் கடந்த காலங்களில் சில கசப்பான அனுபவங்களைப் பெற்றிருந்தனர். 1962 இல் முதன் முதலாக இலங்கையில் சில்லறை விற்பனை வரி (Retail Sales Tax) அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. ஆகஸ்ட் 1 இல் அறிமுகம் செய்யப்பட்ட இவ்வரி இரு நாட்களின் பின்னர் அதன் செயற்றிறனை இழந்தது. இதன் தோல்விக்கு போதிய திட்டமின்மையும், வரி நிர்வாகக் குறைபாடுகளுமே பிரதான காரணங்களாக இருந்தன. எனவே, பெறுமதிசேர்வரி / பொருட்கள் சேவைகள் வரி என்பவற்றின் அளவீட்டை இலங்கை மிகக் கவனமமாகவும் நுட்பமாகவும தயாரிக்க வேண்டியுள்ளது.

### பெறுமதிசேர் வரி (VAT) எதிர் பொருட்கள்/சேவைகள் வரி (GST)

இவையிரண்டும் வேறுபட்ட வரிகள் என சிலர் எண்ணக்கூடும். ஆனால், இப் பெயர்கள் குறிப்பிடும் வரிகளின் பண்புகள் ஒரே மாதிரி யானவையாகும். தொடக்கத்தில் "பெறுமதிசேர் வரி" என்றே இது அழைக்கப்பட்டு வந்தது. சில நாடுகள் இன்னமும் அப்பெயருக்கு முன்னுரிமை அளித்து வருகின்றன. இருப்பினும் நியூசிலாந்து 1986 இல் பெறுமதிசேர் வரியை முதன்முதலாக அறிமுகம் செய்தபோது பொருட்கள்/சேவைகள் வரி என்றே பெயரிட்டது. சில இலத்தீன் அமெரிக்க நாடுகள் கூட பெறுமதிசேர் வரிக்கு வேறுபட்ட பெயர்களை அறிமுகப்படுத்தியிருந்தன. கனடா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் பெறுமதிசேர் வரியை அறிமுகம் செய்தபோது பொருட்கள்/சேவைகள் வரி என்றும், தாய்வானில் வணிக வரி (Business Tax) என்றும் அழைக்கப்பட்டன. பெறுமதிசேர் வரிக்கு சூட்டப்படும் பெயர் முக்கியமானதல்ல; அதன் கணிப்பீட்டு முறைகள் அல்லது கையாளப்படும் பொறிமுறைகளே பிரதானமானவையாகும்.

### பெறுமதிசேர் வரி, பொருட்கள்/சேவைகள் வரி செயற்படும் விதம்

வழக்கமாக இது பல்வேறு கட்டங்களைக் கொண்ட ஒரு விற்பனை வரியாக இருப்பினும், இறக்குமதிகள்/உற்பத்தி/மொத்த வியாபாரம் ஆகிய ஒவ்வொரு கட்டங்களிலும் சேர்க்கப்பட்ட பெறுமதிகள் (Value Added) மீது மட்டுமே விதிக்கப்படும் வரியாக உள்ளது. இது வரவு பொறிமுறை யொன்றின் (Credit Mechaism) மூலம் நிறைவேற்றப்படும். சேருமிடத் தத்துவம் (Destination Principle) அனுசரிக்கப்படு மாயின், குறித்த நாட்டுக்குள் சேர்க்கப்பட்ட இறக்குமதிப் பெறுமதிகள் கூட கவனத்தில் கொள்ளப்படும். இவ்வரியின் மற்றுமோர் பிரதான பண்பு சேர்க்கப்பட்ட பெறுமதி என்பது தொகையையன்றி பெறுமதியைக் குறிப்பதாக இருப்பதாகும். இவ்வரிக் கணிப்பீட்டு முறையின் வரிச் சுமை வழமையாக இறுதி நுகர்வோர் மீதே

*பதிவுள்ள ஆள்*

*ஒருவர் பொருட்கள்/சேவைகள் வரி தொடர்பில் ஒரு இலக்கத்தை பெற்றுக் கொண்டிருப்பின் பதிவு செய்யப்பட்டவர் எனக் கருதலாம். இலங்கைக்குள் பொருட்கள் இறக்குமதி செய்வதற்காக மட்டும் அந்தப் பதிவு எண் பெறப்பட்டிருந்தால், அந்த நபர் பொது பொருட்கள்/சேவைகள் வரி பதிவொன்றினைப் பெற்றிராத பட்சத்தில், அவரை பதிவு செய்யப்பட்டுள்ள ஓர் ஆளாக கருதமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமத்தப்படுகிறது. இருப்பினும் சில வேளைகளில் இடைநிலையிலுள்ள நுகர்வோர்கூட இறுதி நுகர்வோராகக் கருதப்பட்டு உள்ளீட்டு வரவு (Input credit) மறுக்கப்படும் போது (உதாரணமாக, ஏதாவது வரிவிலக்குகள் பொருட்கள்/ சேவைகளின் வழங்குநர்) வரிச்சுமையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### புதிய வரியின் நோக்கம்

அக்கறைக்குரிய மற்றொரு விடயம் இவ் வரியின் வீச்செல்லை யாகும். சிலர் இவ்வரியானது சில்லறை நிலை வரை செல்ல வேண்டுமெனக் கருதுகின்றனர். ஒரு நாடு அனைத்தையும் உள்ளடக்கி இப்புதிய வரியைத் திட்டமிடுமானால் கோட்பாட்டு ரீதியில் இது சரியானதாகும். ஆனால், நடைமுறையில் அனைத்து சில்லறை வியாபாரிகளையும் இவ்வரி முறையில் உள்ளடக்குவது பிரச்சினைக்குரியதாகும். இலங்கையின் விடயத்தில் போல சில வேளைகளில் சட்ட இடையூறுகள் இருந்து வர முடியும்; இங்கு மாகாண சபைகளுக்கு மொத்த/சில்லறை விற்பனை நடவடிக்கைகள் கையளிக்கப் பட்டுள்ளன. அனைத்துமடங்கிய பொருட்கள்/சேவைகள் வரி முறையின் கீழ் வருமானத்தைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு திட்டம் தொடர்பாக தமது உரிமைகளை விட்டுக் கொடுக்க அவை விரும்பாதிருக்கக் கூடும். ஆனால், சில நாடுகள் இவ்வரி முறையிலிருந்து சில்லறை வியாபார நடவடிக்கைகளை நீக்கியுள்ளன. உதாரணமாக, கொலம்பியா, ஐவரிகோஸ்ட், செனிகல் ஆகிய நாடுகள் பெறுமதிசேர் வரியை உற்பத்தி நிலை வரையிலும், மொரொக்கோ, பெரு ஆகியவை மொத்த விற்பனை நிலை வரை மட்டுமே நடைமுறைப்படுத்துகின்றன. இந்தோனேசியா கூட உற்பத்தி நிலைவரை மட்டுமே இம்முறையினைக் கையாளுகின்றது.

அனைத்தையும் உள்ளடக்கிய வகையில் இவ்வரி முறையை செயற்படுத்தாத நாடுகள் எதிர்பார்த்த பொருளாதார, அரசிறை நன்மைகளைப் பெற முடியாது போகலாம். ஆனால், பெரும் எண்ணிக்கையிலான சில்லறை வியாபாரிகளை உள்ளடக்குவது நிர்வாக ரீதியில் பிரச்சினைகளை ஏற்படுவதன் காரணமாக நடைமுறைக் காரணங்களுக்காக இம்முறை பின்பற்றப்படுகிறது. அனைத்தையும் உள்ளடக்கிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நாடுகளில் கூட நிர்வகிக்கும் செலவுகளுடன் ஒப்பிடுகையில் இவ்வரியின் மூலமான பொருளாதார அனுகூலம் குறிப்பிடத் தக்க அளவில் இருக்கவில்லையென நிரூபிக்கப்பட்டுள்ளது.

**உற்பத்தியிடத் தத்துவம் எதிர் சேருமிடத் தத்துவம்.**

இது பெறுமதிசேர் / பொருட்கள் மற்றும் சேவைகள் வரி முறையில் சர்வதேச வர்த்தகம் தொடர்பிலான அணுகுமுறையை பிரதிபலிக்கின்றது. உற்பத்தியிடத் தத்துவத்தின் கீழ், ஏற்றுமதிகள் வரிவிதிப்பிற்குள்ளாவதுடன் இறக்குமதிகளுக்கு விலக்களிக்கப்படும். அதேவேளை, சேருமிடத் தத்துவத்தின் கீழ் இறக்குமதிகள் வரிக்குள்ளாவதுடன் ஏற்றுமதிகள் விலக்களிப்புக் குள்ளாகின்றன.

பின்வரும் அட்டவணை இதனைத் தெளிவாக விளக்குகின்றது:

| நாடுகள் | சில்லறை/சிறிய பெறுமதிசேர் வரி செலுத்துவோர் | மொத்த பெறுமதி சேர் வரியின் சதவீதப் பங்கு |
|---|---|---|
| கொரியா | 784,880 (80%) | 5.6% |
| நியூசிலாந்து | 81,000 (46%) | 6.0% |
| ஐக்கிய ராச்சியம் | 881,000 (69%) | 4.5% |

வரிகளை சேகரிப்பதற்கும் (நிர்வாகம்), வரி செலுத்துவோர் இணங்கியொழுகச் செய்வதற்குமான செலவுகளில் பெரும்பகுதி சில்லறை/ சிறிய வரி செலுத்துவோருடன் தொடர்புடையவையாக உள்ளன. ஐக்கிய இராச்சியத்தில் மேற்கொள்ளப் பட்ட ஓர் ஆய்வில் இத்தகைய சிறிய வரி செலுத்துவோரிடமிருந்து கிடைக்கும் 6% பெறுமதிசேர் வரிக்காக மொத்த வரி சேகரிப்புக்கான செலவில் 55% செலவிடப்பட்டிருந்தமை கண்டறியப் பட்டது. நியூசிலாந்தில் கூட இணங்கியொழுகச் செய்தல் தொடர்பான செலவில் 60% சிறிய வியாபாரிகள் தொடர்பாகவே ஏற்பட்டிருந்தது.

சிறிய வரி செலுத்துவோர் தொடர்பான மற்றுமொரு நிர்வாகப் பிரச்சினை, இத்தகைய சிறிய வரி செலுத்துவோர் தொடர்பாக ஓர் எளிமைப்படுத்தப்பட்ட வரிக் கணிப்பீட்டு முறையின் தேவையாகும். ஸ்பெயின், துருக்கி, ஆர்ஜன்டீனா, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் சிறிய வியாபாரிகள் தொடர்பில் சமப்படுத்திய வரி (Equalaisation Tax) முறை பயன்படுத்தப் பட்டது. விற்பனைகள் தொடர்பில் முன்னுரிமை வீதங்கள், உடன்படிக்கைகள் ஆகிய வேறு விசேட முறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. பிரான்ஸ், சுவீடன், ஜேர்மனி, இத்தாலி, ஐக்கிய இராச்சியம், கொரியா போன்ற நாடுகளில் இத்தகைய வரி செலுத்துவோருக்காக விசேட திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், குறைந்த வரிவீதங்களும் அனுசரிக்கப் படுகின்றன. எனவே, இத்தகைய நடைமுறைக் காரணங்களுக்காக அனைத்தையும் உள்ளடக்கிய வரி முறைமையிலிருந்து சிறிய வரி செலுத்துவோரை நீக்கி விடுவது பொருளாதார ரீதியில் வரி நிர்வாகத்தை எளிதாக்கும்.

இலங்கையில் கூட, அனைத்து மொத்த, சில்லறை நடவடிக்கைகளும் இம்முறைக்கு வெளியே உள்ளவை எனக் கருத முடியாது. அனைத்து மொத்த, சில்லறை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் இறக்குமதியாளர், உற்பத்தியாளர் ஆகியோரும் பொருட்கள், சேவைகள் வரி முறைக்குள் கொண்டு வரப்படுவர். எனவே, இலங்கையின் பொருட்கள் சேவைகள் வரியின் வடிவமைப்பு முறை மொத்த, சில்லறை நடவடிக்கைகளை முற்றாக நீக்கிவிட வில்லை. ஆனால், வரி விலக் கெல்லையின்படி (Exemption Limit) சிறிய வர்த்தகர்கள் விடுவிக்கப்படலாம்.

### வரிவிலக்களிப்பு எதிர் பூச்சிய வரிவீதங்கள்

மற்றுமொரு சிக்கலான விடயம் வரிவிலக்களிப்புக்கள், பூச்சிய வரி வீதங்கள் பற்றிய எண்ணக் கருக்களாகும். பெறுமதிசேர், பொருட்கள்/சேவைகள் வரி முறையில் விலக்களிப்பு என்பது வரியற்ற பொருட்கள்? சேவைகள் என்பதைக் கட்டாயமாக கருதவில்லை. சம்பந்தப்பட்ட விற்பனை மட்டும் வரிவிலக்குப் பெறும்; அல்லது வெளியீட்டு வரி (Output Tax) யிலிருந்து விலக்களிக்கப்படும்.

ஆனால், பொருட்கள்/சேவைகள் வரி முற்பட்ட உற்பத்தி/ தயாரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டடங்களில் செலுத்தப்பட்டிருக்கலாம். ஏதாவது பொருட்கள், சேவைகளின் வழங்கல் வரையிலான எல்லா நடவடிக்கைகளுக்கும் விலக்களிக்கப்பட்டாலன்றி, விலக்களித்தல் பற்றிய எண்ணக் கருவானது பகுதியளவில் வரிவிலக்குப் பெற்ற பொருட்கள்/சேவைகளை உருவாக்கக் கூடும். எனவே, நெருக்குதல் குழுக்களால் முன்வைக்கப் படும் விலக்களிப்புக்கள் தொடர்பான பல்வேறு கோரிக்கைகள் உண்மையில் நியாயமற்றதாகவும் இருக்கக் கூடும். ஆனாலும், எந்த நாடுகளிலும் நிர்வாக, சமூகக் காரணங்களுக்காக சிலவகையான பொருட்கள், சேவைகளுக்கு விலக்களிக்க வேண்டியுள்ளது.

பூச்சிய வீதமுள்ள ஏதாவது பொருட்களின் விநியோகம், அனைத்து இடைநிலை நடவடிக்கைகளும் வரி செலுத்தும் ஆட்களின் மூலம் இடம்பெற்று வருமிடத்து அத்தகைய பொருட்கள்/சேவைகள் வரியின்றிக் கிடைக்கும். இந்தச் சூழ்நிலையில் இலங்கை ஏன் வரிவிலக்களிப்புக்கு பதிலாக பூச்சிய வீதத்தைப் பரந்தளவில் பயன்படுத்துவதில்லை என்ற வினா எழக்கூடும். இதன் காரணமாக பூச்சிய வீதத்தைப்பரந்தளவில் கையாளும் சில நாடுகளின் அனுபவங்களை நாம் நோக்குவது அவசியமாகும். ஐக்கிய ராச்சியத்தில் சாதாரண நடைமுறையில் ஏற்றுமதிகளுக்கான வரிவீதம் பூச்சியமாவதுடன், அதிகளவு எண்ணிக்கையான உணவுப் பொருட்கள், தண்ணீர், புத்தகங்கள் ஆகியவற்றிற்கும் பூச்சிய வீதம் பின்பற்றப்படுகின்றது. ஆனால், இச் செயல்முறை அதிகளவு நிர்வாகப் பிரச்சினைகளை உருவாக்கும். ஐக்கிய இராச்சியத்தில் வரி தொடர்பான பிணக்குகளில் பெரும்பாலானவை பெறுமதிசேர் வரி நிர்வாகம் தொடர்பான விலக்களிப்புக்கள் பூச்சிய வீதம் சம்பந்தப்பட்டவையாகவே உள்ளன. பூச்சிய வீதமானது சேகரிக்கப்பட்ட வரியின் மீளளிப்புக்களுடன் தொடர்புடையதாகவுள்ள அதேவேளை, சேகரிக்கப்பட்ட வரியிலும் பார்க்க மீளளிப்பு அதிகமாகச் செலுத்த வேண்டியுள்ளதனால் நிர்வாகச் சுமையையும் ஏற்கவேண்டி ஏற்படும். அநேக நாடுகள் ஏற்றுமதிப் பொருட்கள், சர்வதேசச் சேவைகள், சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தங்கியுள்ள அத்தியாவசிய நடவடிக்கைகள் ஆகியவற்றில் மட்டுமே பூச்சிய வீதத்தை அனுமதிக்கின்றன. ஐக்கிய இராச்சியத்தில் கூட, சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான ஏனைய வழிமுறைகள் பரந்த பூச்சிய வீதங்களைவிட பயனுடையவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக வரி விதிப்பின் சேருமிடத் தத்துவத்தின்படி உள்நாட்டில் நுகருவதற்கு உட்படாத பொருட்கள், சேவைகளுக்கு பூச்சியவீதம் பிரயோகிப்படுகிறது. இதற்கென ஏற்றுமதிகள் பூச்சிய வீதத்தைக் கொண்டுள்ளன. பூச்சிய வீதம் காரணமாக ஏற்றுமதிப் பொருட்கள் போட்டியிடக்கூடிய வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதனால் ஏற்றுமதி அளவுகளின் அதிகரிப்பின் காரணமாகவும் நன்மையையும் பெறக்கூடியதாக இருக்கும்.

## பொருட்கள்/சேவைகளின் வழங்கல் மீது பொருட்கள்/சேவைகள் வரியை விதித்தல்

பொருட்கள்/சேவைகள் வரிப் பொறுப்பு தொடர்பான அலகு "ஆள்" என்பதாகும்; இந்நோக்கத்திற்காக ஆள் (Person) என்பது பங்குடைமை, கூட்டு முயற்சி, கழகம், சங்கம் என்பவற்றையும் உள்ளடக்கும். மேலும், இது பல்வேறு அரசாங்க மட்டங்களிலான மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பவற்றையும் உள்ளடக்கியிருக்கும்.

குறித்த ஆள் வரிவிதிக்கக்கூடிய நடவடிக்கையைக் கொண்டு நடாத்துகின்றாரா அல்லது பொருட்கள் சேவைகள் வரிக்காக பதிவு செய்யப்பட்டுள்ளாரா என்பதே முக்கியமான தகுதி விதியாகும். ஒரு வரி விதிக்கக்கூடிய நடவடிக்கைகளுக்காக பதிவு செய்யப்பட்டிருந்தால் மட்டுமே அவர் பொருட்கள்/சேவைகளின் வழங்கல் மீது இவ்வரியினை அறவிடமுடியும். இலங்கையில் பொருட்கள்/சேவைகள் வரி தொடர்பாக வரி விதிப்பிற்கு உட்படும் நடவடிக்கைகளாக பின்வருவன வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளன:

ஏதாவது வியாபாரம், தொழில், உயர்தொழில், வாழுகைத்தொழில், வியாபார முயற்சிகள், ஏதாவது அங்கத்தவர்களுடைய கழகங்களால் வழங்கப்பட்ட வசதிகளுக்கான சந்தாப் பணக் கொடுப்பனவுகள், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடப்படும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள், ஏதாவது கற்பனைச் சொத்துக்களான ஆக்கவுரிமை, பதிப்புரிமை, வியாபாரக்குறி ஆகியவற்றிலிருந்தான வருமானங்களாகும். இங்கே தெரிவிக்கப்பட்ட நடவடிக்கைகள்தவிர ஏனையவை வரி விதிப்பிற்குட்படாதவையாகும்.

பதிவு செய்யப்பட்ட ஆள் அந்தஸ்தினைப் பெறுவதற்கு பின்வரும் தகைமைகள் அவசியமாகும். பின்வரும் தேவைகள் ஏதாவதொன்று நிறைவு செய்யப்பட்டிருந்தால் பொருட்கள்/சேவைகள் வரிக்கு ஒருவர் தன்னை பதிவு செய்துகொள்ள வேண்டும்.

❒ ஏதாவது வரிவிதிப்பிற்குரிய காலப் பகுதியில் (ஜனவரி, ஏப்ரல், யூலை, அல்லது

### வெளியீட்டு வரியும் உள்ளீட்டு வரியும்

*பெறுமதிசேர்/பொருட்கள் மற்றும் சேவைகள் வரியானது, வரி விதிக்கக்கூடிய பொருட்கள், சேவைகளின் வழங்கல் மீது ஒரு பதிவு செய்யப்பட்ட ஆளினால் விதிக்கப்படுவதை வெளியீட்டு வரி (Output Tax) என அழைக்கப்படுகிறது. வழங்கல் பெறுமதி மீது அதற்குரிய வரி வீதத்தைப் பின்பற்றுவதன் மூலம் வரித் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம்.*

*பெறுமதிசேர்/பொருட்கள் மற்றும் சேவைகள் வரிக் கொடுப்பனவானது, ஒரு பதிவு செய்யப்பட்ட ஆளினால் தனது வரி விதிக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் பொருட்டு கொள்வனவு செய்யப்படும் (கொள்வனவு அல்லது இறக்குமதி) வரி விதிக்கக்கூடிய பொருட்கள், சேவைகளின் வழங்கலுக்காக மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதனை உள்ளீட்டு வரி (Input Tax) எனலாம். உள்ளீட்டுத் தொகையை வெளியீட்டு வரித்தொகைக்கு எதிராக, அது தொடர்பான வரி விபரப்பட்டியல் அல்லது சுங்கப் பிரகடனம் கிடைக்கக்கூடியனவாக இருப்பின் ஓர் கழிவாகக் கோர முடியும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்ரோபர் 01 இல் தொடங்கும் காலாண்டுக்கு) இலங்கையில் வரிவிதிப்பிற்குரிய மொத்த பொருட்கள் சேவை களின் வழங்கல் ரூபா 200,000 இனை விஞ்சுதல்.

- ஏதாவது வரி விதிப்பிற்குரிய தொடர்ச்சியான நான்கு காலப் பகுதியில் வரிவிதிப்பிற்குரிய மொத்த பொருட்கள் சேவை களின் வழங்கல் ரூபா 700,000 இனை விஞ்சுதல்.

- எவரேனும் ஆள் ஏதாவது காலப் பகுதியில் இலங்கைக்குள் வழங்கும் வரி விதிப்பிற்குரிய பொருட்கள்/சேவைகளின் மொத்தப் பெறுமதி மேற் குறிப்பிட்ட பெறுமதியை விஞ்சுமென நம்புமிடத்து பதிவு செய்தல் வேண்டும்.

எவ்வாறாயினும், வரி விதிப் பிற்குரிய வழங்கலின் பெறுமதியை நிர்ணயிப்பதற்கு பின்வரும் நியதிகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் :

- பொருட்கள்/சேவைகள் வரிச் சட்டத்தில் ஏதாவது விலக் களிக்கப்படும் வழங்கலின் பெறுமதி நீக்கப்பட வேண்டும்.

- பொருட்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட பொருட்கள்/ சேவைகள் வரியின் தொகை நீக்கப்படும் (வரி நீக்கப்பட்ட விலையைக் கருதுக)

- ஆளொருவரின் உற்பத்தி அல்லது இறக்குமதி நடவடிக்கை யுடன் சம்பந்தப்படாத ஏதாவது மொத்த/சில்லறை நடவடிக் கையின் வழங்கல்களின் பெறுமதியை நீக்கவும்.

- ஏற்றுமதிகளின் கப்பற்றளம் வரையிலான விலை (FOB) உள்ளடக்கப்படும்.

எவரேனும் ஆள் மேலே தெரிவிக்கப்பட்ட வரி விடுதொகை தேவைக்கமைய பொருட்கள்/சேவைகள் வரிப் பொறுப்புக்குள்ளாவாராயின் 15 நாட்களுக்குள் பதிவு செய்தல் வேண்டும். இருப்பினும் ஏதேனும் ஆள் பொருட்கள்/ சேவைகள் வரி தொடர்பில் தன்னை பதிவு செய்ய விரும்புமிடத்து, அவர் விலக்களிக்கப்பட்ட பொருட்கள் சேவைகளின் வழங்குநர் அல்லாவிடில், விருப்பத்தின் அடிப்படையில் பதிவு செய்ய அனுமதிக்கப்படும். கட்டாயத்தின் பேரில் அல்லது விருப்பத்தின் பேரில் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் ஆள், பதிவு செய்யப்பட்ட தினத்திலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக பதிவை ரத்துச் செய்யும்படி கோர முடியாது. ஒருவரின் பதிவு சரியானதாக இருக்குமாயின், ஏற்கனவே குறிப்பிட்ட வழங்கல்களின் பெறுமதியை விடக்குறைவாக இருந்தால் கூட தனது, வரி விதிக்கக்கூடிய பொருட்கள்/ சேவைகளின் வழங்கல் அனைத்தும் மீதும் வரியினை விதித்து அறவிடுவதற்கு பொறுப்புடையவராவர்.

**இறக்குமதிகள்**

இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூட பொருட்கள் சேவைகள் வரி விதிப்பனவுக் கான பொறுப்புள்ளது. இவ்விதிப்பனவு சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் சேகரிக்கப்படும். இந்நோக்கத்திற்காக எல்லா இறக்குமதி யாளர்களும் (ஏதாவது வரிவிலக்கு எல்லையின்றி) பொருட்கள்/சேவைகள் வரி (இறக்குமதி) தொடர்பில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும் இருப்பினும், ஏற்கனவே பொருட்கள்/ சேவைகள் வரிக்காக பதிவு செய்து கொண்டவர்கள் மீண்டும் இறக்குமதிகள் மீதான வரிக்காக பதிவு செய்யவேண்டிய அவசியமில்லை. வரி விதிப்பிற்பான பெறுமதியைத் தீர்மானிக்கும்போது, இறக்குமதிகளின் செலவு, காப்புறுதி, கேழ்வு உள்ளிட்ட விலையுடன் (CIF) சுங்கத் தீர்வையையும் சேர்த்து வரும் மொத்தப் பெறுமதி மீது வரி விதிக்கப் படும்.

பொருட்கள்/சேவைகள் வரியின் பொருட்டு பதிவு செய்தவர் களைத் தவிர வேறு எவராயினும் பொருட்கள்/ சேவைகள் வரி விதிப்பதற்கும் அறவிடுவதற்கும் சட்ட உரிமை கிடையாது.

**பொருட்கள்/சேவைகள் வரியின் கணக்கீட்டு முறை**

பதிவு செய்யப்பட்ட அனைத்து ஆட்களும் தம்மால் மேற்கொள்ளப்பட்ட அல்லது பெறப்பட்ட வரி விதிக்கக்கூடிய வழங்கல் தொடர்பில் சரியான பதிவுகளைப் பேண வேண்டும். இவ்விடயத்தில் வழங்கல் நேரம் (Time of Supply) அல்லது வரிப்புள்ளி (Tax Point) ஆகியவை முக்கியமானவையாகும். இது குறித்த நேரம் வரி விதிக்க வேண்டும் என்பதாகும். வழங்கல் நேரமானது பின்வருமாறு குறித்த காலத்திற்கு முன்னர் நடைபெற்றிருக்க வேண்டும்:

உணவு வழங்கல் தொடர்பாக :

- வழங்கப்படும் ஒரு விலைப் பட்டியல் (வரிப்பட்டியல் அவசியமற்றது)
- பெறப்படும் ஒரு கொடுப்பனவு.
- உருவாக்கப்படும் ஒரு கடன் கொடுக்கல் வாங்கல்.
- விநியோகிக்கப்படும் பொருட்கள்

சேவைகளின் வழங்கல் தொடர்பில்:

- சேவையின் செயலாற்றுகை
- பெறப்படும் ஒரு கொடுப்பனவு
- உருவாக்கப்படும் ஒரு கடன் கொடுக்கல் வாங்கல்
- வழங்கப்படும் ஒரு விலைப் பட்டியல் (வரிப்பட்டியல் அவசியமற்றது)

பொருட்கள்/சேவைகள் வரி தொடர்பில் கணக்கீட்டு பதிவேடுகள் வழங்கல் நேரத்தினை அடிப்படை யாகக் கொண்டிருத்தல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஒருவர் காசு அடிப்படையில் கணக்குகளைப் பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டால் கூட, வழங்கல் நேரத்தை அடிப்படையாகக் கொண்டே பதிவேடுகள் பேணப்பட வேண்டும். சாதாரண கணக்கீட்டு அடிப்படை திரண்டுவரும் (Accrual) முறையை அடிப்படையாகக் கொண்ட தாகும். இம்முறையின் அடிப்படையில் குறித்த வரிவிதிப்பு காலப்பகுதியில் எல்லா வழங்கல்கள் மீதும் காசு கிடைத்தாலும் இல்லாவிடினும் (கொடுப்பனவு) வழங்கல் நேரத்தில் இவ்வரி விதிக்கப்பட வேண்டும்.

எவராயினும் பதிவுசெய்யப்பட்ட ஒருவர் வரிவிதிக்கக்கூடிய வழங்கலை மேற்கொள்ளும்போது அவரால் பின்வருபவை வழங்கப்பட வேண்டும்:

பொருட்கள் /சேவைகள் வரி சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரப் பட்டியலை பெறுபவர் பதிவு செய்யப்பட்ட ஆளாக இருந்தால் பொருட்கள்/சேவைகள் வரிச் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட வரிப்பட்டியல்.

வரி உள்ளடக்கப்பட்ட விலைப் பட்டியலொன்றை எவராகினும் பதிவு செய்யப்படாத ஆளுக்கு வழங்க வேண்டும்.

இதன்படி ஒவ்வொரு வரி விதிக்கக்கூடிய வழங்கல்களையும் ஒரு பதிவு செய்யப்பட்ட ஆள் மேற்கொள்ளும் போது ஒன்றில் ஒரு வரி விபரப் பட்டியலை அல்லது ஒரு விலைப் பட்டியலை வழங்க வேண்டும்

**நிதிச் சேவைகள்**

நிதிச் சேவைகள் மீது பெறுமதி சேர் பொருடுட்கள்/சேவைகள் வரியைப் பிரயோகிக்கும் போது பல நாடுகளில் பின்வரும் மூலங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன:

- பெறுகைகளும் கொடுப்பனவுகளும் வரியைப் பிரயோகிக்கக்கூடிய நடவடிக்கைகளாக இருக்கவில்லை.
- உடன்பாடான சேவைகளின் அட்டவணை

(அ) வரி நோக்கத்திற்குள் கருதப்படுபவை அல்லது

(ஆ) வரி நோக்கத்திலிருந்து விலக்கப்பட்டமை.

நிதிக் கருவிகள் தொடர்பில் வரி விதிப்பதில் வேறுபட்ட பல பிரச்சினைகள் சம்பந்தப்படுகின்றன. ஆனால், பெறுமதிசேர்/பொருட்கள் மற்றும் சேவைகள் வரி, பெரும்பாலான நிதிக் கொடுக்கல் வாங்கல்களின் விசேட தன்மை காரணமாக அவை தொடர்பாக வேறுபட்ட அணுகுமுறைகளை கவனத்தில் கொள்கின்றது. உலகளாவிய நடைமுறையைப் பின்பற்றி உத்தேச பொருட்கள்/ சேவைகள் வரி சட்டவாக்கத்தில் பின்வரும் நிதிசார் சேவைகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது:

(அ) ஏதாவது நடைமுறை வைப்பு அல்லது சேமிப்புக் கணக்கை நடைமுறைப்படுத்துதல்.

(ஆ) நாணயமாற்றை மேற்கொள்ளுதல்.

(இ) ஏதாவது வாக்குறுதிப் பத்திரம், கொடுப்பனவுக்கான கட்டளை, காசோலை, நாணயக் கடிதம் என்பவற்றை வழங்குதல், ஒதுக்கீடு செய்தல், உடமையை மாற்றுதல்.

(ஈ) எவரேனும் ஆளினால் கொடுக்குமதியான பணத்தில் உள்ள ஏதேனும் அக்கறையான அலலது செலுத்தப்படுவதற்கான உரிமையாக இருக்கும் ஏதேனும் கடன் பிணையை வழங்குதல், குறித்தொதுக்குதல், உடமையைக் கைமாற்றுதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல் அல்லது புறக் குறிப்பிடுதல் என்பவை யாகும்.

(உ) ஏதாவது கடனுக்கான அல்லது முற்பணத்திற்கான ஏற்பாடுகள்.

(ஊ) வாடகைக் கொள்வனவு நிபந்தனை விற்பனையில் வழங்கப்படும் தவணைக் கொடுப்பனவு நிதிக்கான வசதிகள் அல்லது ஒருவரால் செலுத்த வேண்டிய கடனைச் செலுத்துவதற்கான கடன் பிணைகளுக்கான வழங்கல், ஒதுக்கீடு, உரிமை மாற்றம், எடுப்பனவு போன்றவற்றை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது புறக்குறிப்பிடுதல்.

(எ) நிகர மதிப்புப் பிணையொன்றின், கடன் பிணையொன்றின் அல்லது பங்கேற்புப் பிணையொன்றின் வழங்கீட்டைப் பொதுப்பேற்றல் அலலது கீழ்ப் பொறுப்பேற்றல்.

(ஏ) ஏதாவது பங்கு, கடன், பங்கேற்றல் பிணைகள் என்பவற்றை வழங்குவதற்கு பொறுப்பாக இருத்தல்.

(ஐ) ஆயுள் காப்புறுதி

நிதியியல் சேவைசார் வழங்கலில் ஏற்பட்ட செலவு மீதான பொருட்கள்/ சேவைகள் வரி தொடர்பில் எவராயினும உள்ளீட்டு வரவை (Input Credit) கோருவதற்கு அருகதையற்றவர்; வேறு வார்த்தைகளில், குறிப்பிட்ட ஆள், அதே ஆளினால் வழங்கப்பட்ட அச்சேவைகளின் இறுதி நுகர்வோராகக் கருதப்படுவார் என்பதேயாகும்.

**விலைப் பட்டியல், வரி விபரப்பட்டியல், வரி உள்ளடக்கிய விலைப்பட்டியல்**

விலைப்பட்டி (Invoice) யலானது ஒரு தொழிலில் பயன்படுத்தும் வர்த்தக ஆவணமாக இருப்பதுடன். கொளவனவாளர் செலுத்த வேண்டிய தொகையையும் காட்டுவதாகும்.

வரி விபரப் பட்டியல் (Tax Invoice) என்பது பொருட்கள்/சேவைகள் வரி முறையின் கீழான ஒரு நியதிச்சட்ட முறையான ஆவணமாக இருப்பதுடன், ஒரு பதிவு செய்யப்பட்ட ஆளினால் இன்னுமொரு பதிவு செய்யப்பட்ட ஆளுக்கு வரி விதிக்கக்கூடிய வழங்கலை மேற்கொள்வது தொடர்பில் வழங்கப்பட வேண்டியதாகும். இந்த ஆவணமானது குறித்த ஆளினால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கான உள்ளீட்டு வரி வரவைக் கோருவதற்கு தேவையானதாகும். இறக்குமதிகள் தொடர்பில் சுங்கப் பிரகடனம் (Customs Declaration) வரி விபரப்பட்டியலாகக் கருதப்படும்.

வரி உள்ளடக்கப்பட்ட விலைப் பட்டியல் ஒரு சரியான வரி விபரப்பட்டியல் அல்ல. இவ் விலைப் பட்டியல் வரி விதிக்கக்கூடிய பொருட்கள்/சேவைகளை பதிவு செய்யப்படாத ஒருவருக்கு வழங்கும்போது வழங்கப்பட வேண்டியதாகும்.

ஒரு வரி விபரப்பட்டியலில் சரியான வரித் தொகையைக் காட்ட வேண்டிய அதேவேளையில் ஒரு வரி உள்ளடக்கிய விலைப்பட்டியலில் வரி உள்ளடக்கப்பட்ட விலையும் காட்டப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்களிக்கப்பட்ட நிதிசார் சேவைகளின் கீழ் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளை பின்வருமாறு விளக்கலாம்.

*நாணயமாற்று* இதன் அர்த்தம் யாதெனில் ஒரு வகையான நாணயத்தை இன்னொரு வகையாக மாற்றுவதாகும். நாணயம் என்பது சேகரிப்பாளர் வெகுமதி, முதலீட்டுப் பொருட்கள், நாணயத்தின் தோற்றமாக அல்லது பண்டமாற்றுடாக உபயோகிக்கப் படுவதைத் தவிர ஏதாவது வங்கி வாக்குறுதி அல்லது ஏதாவது நாட்டின் வேறு நாணயம் எனப் பொருள்படும். எவராயினும் (ஒரு வங்கி மட்டுமன்றி) இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப் பார்களாயின் இந்த விலக்களிப்புக்கள் அனுமதிக்கப்படும்.

*காசோலை வழங்கல், கொடுப்பனவும் திரட்டலும்*

"வழங்கல்" என்ற சொல்லின் பொருளானது காசோலையொன்றை உருவாக்குதல் அல்லது நாணயக் கடிதமொன்றை உருவாக்குதல் எனக் கொள்ளப்படலாம். காசோலைகள் பயன்படுத்ததுதல் தொடர்பில் கொடுப்பனவு, 'திரட்டல் என்பது, ஒரு வங்கியால் பெற்றுக் கொள்ளப்படும் காசோலை வாடிக்கையாளரின் சார்பில் தீர்ப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படும் செயல்முறையாகும். தன்னியக்கக் கொடுப்பனவுகள், ரெல்லர் பொறி கொடுக்கல் வாங்கல்கள், இலத்திரனியல் நிதி மாற்றல்கள், பயணிகள் காசோலைகளுக்கான கொடுப்பனவு, தபாற் காசுக் கட்டளைகள் ஆகியவை இந்த விலக்களிபபிற்குள் அடங்கு கின்றன. இருப்பினும் கம்பியூட்டர் சேவைகளை வழங்குதல், போக்கு வரத்துச் சேவைகள், செய்திச் சேவை போன்றவை இத்தகைய விலக்களிப்புக் குள்ளாகும் நடவடிக்கையளாகக் கருதப்பட மாட்டாது.

*கடன் பிணைகளின் வழங்கல், ஒதுக்கீடு, மாற்றல்*

பின்வருபவை கடன் பிணைகளுக் கான உதாரணங்களாகும்:

- வர்த்தக வங்கிகள், சேமிப்பு வங்கிகள், நிதிக் கம்பெனிகள், கட்டிட சங்கங்கள், வியாபார வங்கிகள் ஆகியவற்றிலுள்ள வைப்புக்கள்.

*பெறுமதிசேர் வரிக் கணிப்பீட்டின் மூன்று முறைகள் (வரி வீதம் 10% எனக் கொள்ளப்பட்டுள்ளது)*

| | உற்பத்தி நிலைகள் | | | |
|---|---|---|---|---|
| | தயாரிப்பு/ உற்பத்தி | மொத்த வியாபாரி | சில்லறை வியாபாரி | மொத்தப் பொருளாதாரம் |
| *கொள்வனவுக் கழித்தல் முறை* | | | | |
| விற்பனைகள் ரூபா | 1000 | 1500 | 1700 | 4200 |
| கொள்வனவுகள் | (300) | (1000) | (1500) | (2800) |
| சேர்க்கப்பட்ட பெறுமதி | 700 | 500 | 200 | 1400 |
| பெறுமதிசேர் வரி | 70 | 50 | 20 | 140 |
| *செலவு கழித்தல் முறை* | | | | |
| விற்பனைகள் | 1000 | 1500 | 1700 | 4200 |
| விற்பனைக்ள் மீதான பெறுமதி சேர்வரி (வெளியீட்டுவரி) | 100 | 150 | 170 | 420 |
| கொள்வனவுகள் | 300 | 1000 | 1500 | 2800 |
| கொள்வனவுகள் மீதான பெறுமதிசேர் வரி (உள்ளீட்டு வரி) | 30 | 100 | 150 | 280 |
| பெறுமதிசேர் வரி (விற்பனைகள் மீதான வரி கழி கொள்வனவுகள் மீதான வரி) | 70 | 50 | 20 | 140 |
| *சேர்தல் முறை (காரணிக்கொடுப்பனவுகள் + தேறிய இலாபம்)* | | | | |
| கூலிகள் | 350 | 250 | 75 | 675 |
| வாடகை | 150 | 150 | 80 | 380 |
| வட்டி | 50 | 50 | 20 | 120 |
| இலாபம் | 150 | 50 | 25 | 225 |
| மொத்தம் | 700 | 500 | 200 | 1400 |
| பெறுமதிசேர் வரி | 70 | 50 | 20 | 140 |

- வைப்புச் சான்றிதழ்கள்
- தொகுதிக் கடன்களும், தொகுதிக் கடன் சரக்கு முதல்களும்
- பிணையற்ற வாக்குறுதிப் பத்திரங்கள், உத்தரவாதப் படுத்திய வாக்குறுதிப் பத்திரங் கள், மாற்றத்தக்க வாக்குறுதிப் பத்திரங்கள், மாற்றுண்டியல்கள், அடமானங்களும், பங்களிப்பு அடமானங்களும், புத்தகக் கடன்பட்டோர்.

அரசாங்கப் பங்குகளும் கடன்களும், திறைசேரி உண்டியல்கள்.

"வழங்கல்", "ஒதுக்கீடு" என்பதன் பொருள் ஏதாவது கடன் பிணையொன்றை உருவாக்கலாகும். வரைதலும் ,ஏற்றுக்கொள்ளுதலும் வழமையாக மாற்றுண்டியலுடன் தொடர்புபட்டதாகும். "புறக் குறிப்பிடுதல்" என்பது உரிமை மாற்றத்திற்கான புறக்குறிப்பிடுதலாகும். இருந்தபோதிலும், உரிமை மாற்றமானது எவ்வழிகளிலும் ஏற்படலாம் (பதிவின் மூலமான முறையான மாற்றம் அல்லது விநியோக அடிப்படையிலான மாற்றம்).

*நிகரப்பிணை* (Equity Security) இது ஒரு கூட்டு நிறுவனத்தில் மூலதனத்தின் உரிமைப் பங்கைக் குறிப்பதாகும். இது சாதாரண பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கம்பெனிகளில் அல்லது வேறு ஏதேனும் கூட்டு நிறுவனத்தில் சலுகைப் பங்குகளும் உரிமைப் பங்குகளும் ஆகும்.

*பொறுப்பேற்றல்* (Underwriting) பொறுப்பேற்றல் அல்லது கீழ் பொறுப் பேற்றல் என்பது பொதுமக்களால் கொள்வனவு செய்யப்படாத, வழங்கப்பட்ட பிணைகளைப் பொறுப் பேற்றற்கான உடன்படிக்கையுடன் சம்பந்தப் படுகின்றது.

*கடன் ஒப்பந்தங்கள்* ஏதாவது கடனுக்கான ஏற்பாடுகள், முற்பணங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்கள் ஆகியவை பொதுவாக கடன் ஒப்பந்தங்கள்ஆகும். வட்டியினைக் கொண்டுள்ள கடன்கள் (உத்தரவாத முள்ளதோ அல்லது உத்தரவாத மற்றதோ) வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை, கடன்அட்டைகள், கட்டணமாக அல்லது வட்டியாக பெறப்படும் பின்போடப்பட்ட கொடுப்பனவு, உண்டியல்களைக் கழிவு செய்தல், வங்கி மேலதிகப்பற்று என்பவையாகும்.

**நிதி நிறுவனங்களின் ஏனைய நடவடிக்கைகள்**

இங்கு நினைவில் கொள்ள வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் எவராயினும் ஆளினால் (நிதி நிறுவனம்) கொண்டு நடாத்தப்படும் எல்லா நடவடிக்கைகளும் ஏற்கனவே குறிப்பிட்ட விலக்களிப்புக்களுக்கு உள்ளாகாமலும் இருக்கக்கூடும். சில நடவடிக்கைகள் விலக்களிப்புக்களின் நோக்கத்திற்கு வெளியில் உள்ளன. வங்கி உத்தர வாதங்கள், உத்தரவாதப் பிணைகள், வேறு ஏதாவது பிணைகள் அல்லது ஆவணங்கள் போன்றவை மேலே விளக்கப்பட்ட நிதிச் சேவைகளில் அடங்காதவையாகும்.

**ஆயுட் காப்புறுதியும் பொதுக் காப்புறுதியும்**

வெவ்வேறு வகையைச் சேர்ந்த ஆயுட் காப்புறுதிகள், அறக்கொடை பூட்கைகள் (Endowment Policies) ஆகியவை ஆயுட் காப்புறுதியாகக் கருதப் படுவதுடன் விலக்களிப்புக்குள்ளா குபவையுமாகும். இருந்தபோதிலும், ஏனைய காப்புறுதிகளான விபத்து, மருத்துவம், மோட்டார் வாகனம், தீ விபத்து, கலவரங்கள், கடல், பொறுப்பும் பொது நட்டமும் போன்றவை விலக்களிப்புக்களில் அடங்குவதில்லை.

பொதுக் காப்புறுதி விடயத்தில், காப்புறுதிக் கம்பெனி வரியினை விதித்து அதன் காப்புறுதித் தொகையுடன் சேர்த்துக் கொள்ளும். காப்புறுதிப் பூட்கையை வைத்திருப்பவர் பொருட்கள் / சேவைகள் வரியை உள்ளடக்கிய காப்புறுதித் தொகையைக் காட்டும் வரி விபரப்பட்டியல் ஒன்றைப் பெற்றுக் கொள்வார். இந்தக் காப்புறுதியானது, காப்புறுதிப் பத்திரத்தை வைத்திருப் பவரின் பொருட்கள்/சேவைகளின் வரி விதிக்கக்கூடிய வழங்கலுடன் தொடர்பானதாக இருக்குமாயின் அவர் தனது வரி வழங்கலின் வெளியீட்டு வரிக்கெதிராக உள்ளீட்டு வரியை வரவாகக் கோரமுடியும். காப்புறுதிக் கம்பனி குறித்த வரி காலப் பகுதிக்குரிய பெறக்கூடிய மொத்தக் காப்புறுதித் தொகைக்கு பொருட்கள்/சேவைகள் வரியைக் கணக்கிடுவதுடன், வரிவிதிக்கக் கூடிய காப்புறுதிச் சேவையின் செலவு மீது செலுத்திய வரியை உள்ளீட்டு வரவாகவும் கோரமுடியும்.

**கோரலுக்கான கொடுப்பனவு**

பொருட்கள் / சேவைகள் வரிக்காக பதிவு செய்யப்பட்ட ஒருவர் மட்டுமே கொடுப்பனவுக்கான கோரிக்கையை விடுக்க முடியும். பதிவு செய்யப்படாத ஒருவர் கொடுப்பன வுக்கான கோரிக்கை விடும் வேளையில் பொருட்கள்/சேவைகள் வரியை விதிக்க முடியாது. எனவே, காப்புறுதிக் கம்பெனி இருவகையான கோரிக்கைகளை பெறக்கூடும். அவை பொருட்கள்/ சேவை வரி விதிப்புடன் சேர்ந்ததாகவும், சேராததாகவும் அமையும். கோரிக்கை கொடுக்கும் வேளையில், காப்புறுதிக் கம்பெனி, கோருபவரிடம் வரிவிபரப் பட்டியல் கிடைக்குமானால் உள்ளீட்டு வரவைக் கோர முடியும்.

முடியுமானவரை கோரிக்கை யாளர், பதிவு செய்யப்பட்ட ஆளாயின் கோரப்படும் தொகை, வரி வழங்கலின் பெறுமதி, வெளியீட்டுவரி என்பவற்றின் அடிப்படையில் கணிக்கப் பட்டு கருதப்படுகின்றார். கோரிக்கை யாளர் பதிவு செய்யப்படாத ஆளாயின், கொடுக்கல் வாங்கல் களுக்கான, பொருட்கள் சேவைகள் வரி பற்றிய கணக்கு அவசியமற்றதாகும்.

**காப்புறுதி முகவர்கள், தரகர்கள், வியாபாரிகள்**

மேலே தெரிவிக்கப்பட்ட வகுதியில் பொருட்கள் / சேவைகள் வரிக்காக பதிவு செய்த ஆளொருவர் முதல் பெறுமானத்தில் பெறக்கூடிய மொத்தத் தரகின் மீது வரியை விதிக்க வேண்டும் பதிவு செய்யப்படாத ஆளாயின் பெறக்கூடிய மொத்தத் தரகின் மீது அவர் இவ்வரியை விதிக்க முடியாது. விதிக்கப்பட்ட வரியானது அவரின் மொத்த தரகின் மீதான வெளியீட்டு வரியாகும். முகவர் என்ற முறையில் தனது சேவைகளை வழங்குவதற்கு அவர் கொள்வனவு செய்த அல்லது செலவுகள் மீது ஏதாவது பொருட்கள் /சேவைகள் வரி செலுத்தப்பட்டிருந்தால், வரி விபரப்பட்டியல் கிடைக்குமாயின் தனது வெளியீட்டு வரிக்கு எதிராக உள்ளீட்டு வரி வரவை கோருவதற்கு உரித்துடை யவராவார்.

**முடிவுரை**

இலங்கையில் பொருட்கள் சேவைகள் வரி தொடர்பாக மட்டுமே கொள்கை வகுப்போர், திட்டமிடுவோர், வரி நிர்வாகிகள் ஆகியோர் அதன் ஆரம்ப வேலைகளைச் செய்வதற்கு நீண்டகால (1992-1996) அவகாசத்தை எடுத்துள்ளனர். இருப்பினும், எந்த ஒரு வரியும் நடைமுறையில் மிகத் துல்லியமான எண்ணக் கருவையோ, நிர்வாகத்தையோ கொண்டிருக்க முடியாது. பொருட்கள்/சேவைகள் வரியை நடைமுறைப்படுத்துவதில் உள்ள வெற்றி அல்லது தோல்வி பின்வருவனவற்றில் தங்கியுள்ளது:

- அரசாங்கத்தின் உறுதியான அரசியல் நிலைப்பாடும் வரி பற்றிய தெளிவான விளக்கங் களும் அவசியமானதாகும்.
- நிர்வாகிகளிடையே உள்ள அக்கறை.
- வரி செலுத்துவோராலும் (பொருட்கள்/சேவைகளின் வழங்குனர்கள்) பொதுமக்க ளாலும் பெருமளவுக்கு இந்த வரி பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
- பேரண்டப் பொருளாதார அல்லது அரசியல் ஆழ்நிலை சரியான நடைமுறைப்படுத்தலுக்கு உதவ வேண்டியதுடன், சீர் குலைவை ஏற்படுத்தக்கூடிய பாதகமான விளைவை ஏற்படுத் தாததாகவும் அமைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை அஞ்சல் அலுவலகத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு பெற்றுள்ளது. பதிவு எண் :QD/21/News/96


# பொருளியல் நோக்கு

பொருளியல் நோக்கு, கடந்த இருபத்தியொரு வருட காலமாக, சமகால அபிவிருத்தி மற்றும் சர்வதேச சமூக, அரசியல், பொருளாதார விவகாரங்கள் தொடர்பான கலந்துரையாடல்களுக்கான ஒரு களத்தினை அளித்து வந்துள்ளது. அது அண்மையில், சிறப்பு அக்கறைக்குரிய பல தலைப்புக்களை உள்ளடக்கிய விசேஷ அறிக்கைகளை வாசகர்களுக்கு வழங்கியுள்ளது.

- வறுமை : ஒரு நோக்கு
- தேயிலை பெருந்தோட்டங்களும் பொருளாதாரமும்
- பணவீக்கம் : ஒரு விரிவான பரிசீலனை
- மத்திய கிழக்கு தொழில்வாய்ப்புக்களும் பொருளாதாரமும்

பொருளியல் நோக்கு பிரதிகளை நாடெங்கிலும் உள்ள புத்தக நிலையங்களிலும் மக்கள் வங்கிக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

பிரதி விலை : ரூ. 15/- ஆண்டு சந்தா : ரூ.180/-

ஆண்டு சந்தா (வெளிநாடு),

தென்னாசியா - US$ 24
தென்கிழக்காசியா /ஆபிரிக்கா - US$ 24
ஜப்பான் - US$ 24
உலகின் ஏனைய பாகங்கள் - US$ 33-

காசோலைகள் / காசுக்கட்டளைகள் "People's Bank Economic Review" என்ற பெயருக்கு வரையப்பட்டு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்:

ஆராய்ச்சிப் பணிப்பாளர், ஆராய்ச்சிப்பிரிவு,
மக்கள் வங்கி, தலைமையலுவலகம், கொழும்பு 2.
தொலைபேசி : 327082, 436940.

பொருளியல் நோக்கு - மக்கள் வங்கியின்
ஒரு சமூகப் பணித்திட்டம்


உரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம் பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

**The Contents of Economic Review may be quoted or reproduced with due acknowledgement.**

**Printed at the Sumathi Book Printing (Pvt) Ltd, Colombo 14, Sri Lanka.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org